நன்றி - நூலகத்திட்டம்

සරිනිහර්
SARINIHAR
# சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி.

தணிக்கை 719வது நாள்

இதழ் 197 | மே 25 - ஜுன் 07, 2000 | விலை ரூபா 10. 00








## விலங்குகள் பூச்சிகள் சட்டம் 1994

இறுதியாக முழுமையான தேசப் பாதுகாப்பை
உறுதி செய்வதற்காய்
அவர்கள்
நெருக்கடிகால
விலங்குகள் - பூச்சிகள் கட்டுப்பாடு - ஒழுங்குச் சட்டம்
நிறைவேற்றினர்

இச்சட்டத்தின் கீழ்
எருமைகள் பசுக்கள்
ஆடுகள் எதுவும்
மந்தைகளாகவோ அன்றி
மூன்றுக்கும் கூடுதலாகவோ
மேய்வதற்குத் தடை
பறவைகள் சேர்ந்து பறப்பதும்
சட்ட விரோதம்

முன்கூட்டியே ஒப்புதல் பெறாது
கட்டிய மண்கூடுகளை
விட்டு வெளியேறுமாறு
குளவிகளுக்கும் குருவிகளுக்கும் தெரிவித்தாகி விட்டது

அதிகாரபூர்வமான
ஒலிபரப்பு உரிமம்
அமைச்சரகத்திலிருந்து
வழங்கப்படும் வரை
தங்கள் இரைச்சல் மிக்க
காலை வழிபாடுகளை
நிறுத்தி வைக்கும்படி
குரங்குகளும் மைனாக்களும்
எச்சரிக்கப்பட்டன.

கண்காணிக்கப்படாத
ஒலிபரப்புக்களுக்கும் வெளியீடுகளுக்கும்
நெருக்கடிக் காலத்தில்
கடுமையான அச்சுறுத்தல்கள்
அதேபோல் மரங்கொத்திகள்
தென்னை உச்சியிலிருந்து
செண்பக மரத்திற்கு
தந்தி மொழியில்
செய்திகள் விடுப்பதற்கும்
தடை
செய்திகள் யாவும்
அதிகாரிகளின்
முழுமையான முன்னாய்வுக்குட்பட வேண்டும்.

வதந்திகள் பரப்புவதாய்
யாவாக் குருவிகள்
கூட்டங் கூட்டமாய்
கைது செய்யப்பட்டன
சதி செய்வதாய் சந்தேகிக்கப்படுவதால்
பூனைகள் யாவும்
ஒன்பது மணிக்கெல்லாம்
வீட்டிற்குள்ளேயே இருந்தாக வேண்டும்
சில்வண்டுகளும் சுவர்க் கோழிகளும்
தாம் ஒலிபெருக்குவதை
தணித்துக் கொள்ள வேண்டும்
என எச்சரிக்கப்பட்டன.

முன்னதாகவே குறிப்பிட்டுள்ள நேரங்களில்
வாத்துக்கள் கத்தவோ
வான்கோழிகள் கூவவோ கூடாது
நாய்களின் வாய்கள்
அல்சேஷன்கள், டாசன்டுகள்,
டெரியர்கள், பாயின்டர்கள்
ஏன் சின்னச் சின்ன சிருவாகுவா நாய்களின்
வாய்கள் கூட
அடைக்கப்பட்டன
என்பதை நான்
சொல்லவும் வேண்டுமோ

பாதுகாப்பு நலன்கள் கருதி
பென்குயின்களும் வரிக்குதிரைகளும்
விதிமுறை சாராத
தம் சீருடைகளை
களையுமாறு
கட்டளையிடப்பட்டன

அபாயகரமான கொம்புகளை
ஒப்படைத்துவிடும்படி
மான்களுக்கு ஆணை
உள்ளிருக்கத்தக்க
கூர்நகங்கள் கொண்ட
புலிகளும் ஊண் உண்ணிகள் அனைத்தும்
கொலைக் கருவிகளை
மறைத்து வைத்திருந்ததற்காக
சிறைக்குள் விசாரணை இன்றி
தள்ளப்பட்டன.

சட்டவிதி பத்தி உ(பி)
துணை - துணைப்பிரிவு 16இன் கீழ்
மாலை 6 முதல் காலை 6 வரை
எக்காரணம் கொண்டும்
காற்றுப்பிரிக்க
யானைகளுக்கு அனுமதி கிடையாது
ஏனெனில் காற்றுப்பிரித்தால்
துப்பாக்கி வேட்டென கருதப்பட்டு
கலவரமேதும் வெடித்துப் பரவலாம்
இச்சட்டம் நிறைவேறி
ஒரு மாதமானபின்
பறவைகளும் பூச்சிகளும்
பறந்தன தென் திசையை நோக்கி
விலங்குகள் விரைந்தன
வடபுலம் நோக்கி
காடுகளுக்கு

கைவிலங்கிடப்பட்டது
மயான அமைதி,
அங்கே இப்போது
பாதுகாப்பு முழுமையானது.

*சிசில் ராஜேந்திரா*

# காலம்
# மறுபடி மறுபடி...



நன்றி - நூலகத்திட்டம்



தணிக்கை

தணிக்கை

இலங்கை தொடர்பான இந்த நடவடிக்கை நிச்சயமாக, முழுக்க முழுக்க மனிதாபிமான அடிப்படையிலான நடவடிக்கையாகவே

தணிக்கை

இன்னும் இரண்டொரு தினங்களில் தாம் இலங்கைப் பிரச்சினையில் சம்பந்தப்படக் கூடும் என்று முடிவு செய்துள்ளதாக மே 23 செவ்வாயன்று அடுத்தடுத்து நடைபெற்ற உயர் மட்டக் கூட்டத்தின் பின்னர் இந்திய அரசாங்கம் அறிவித்துள்ளது. இந்திய மந்திரி சபையைச் சேர்ந்த சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் இது பற்றித் தகவல் தருகையில் தமது

தணிக்கை

தணிக்கை

அமெரிக்க அரசுச் செயலாளர் தோமஸ் பிக்கரிங் உம், நோர்வேயின் விஷேட தூதுவரும், புலிகளுக்கும், இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் சமரசப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதன் விளைவாகவே இந்த முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிகின்றது.

செவ்வாயன்று போபால் செல்லவிருந்த இந்தியப் பிரதமர் தமது பிரயாணத்தை இரத்துச் செய்துவிட்டு பாதுகாப்புக்கான அமைச்சரவைக் குழுக் கூட்டத்தை இரண்டு தடவைகள் கூட்டி, ஆராய்ந்த பின்னரே இந்த விடயம் தொடர்பாக முடிவெடுக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில், இந்தியாவின் எல்லா நடவடிக்கைகளும், அங்கு ஒரு யுத்த நிறுத்தம் அறிவிக்கப்பட்ட பின்னரே தொடங்கும் என்றும்,

தணிக்கை

எந்த நேரத்திலும் இலங்கைக்குப் புறப்படத் தயாரான நிலையில் துருப்புக்களும், கப்பல்களும் இருக்கட்டும் என முப்படைத் தளபதிகளுக்கும் இந்திய அரசாங்கம் உத்தரவிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தணிக்கை

நடவடிக்கைகளிலும் அங்கே ஈடுபடப் போவதில்லை" எனத்தெரிவிக்கிறார் இந்தியாவின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர்.

தணிக்கை

---

மேல் மாகாணத்தில்

## கலவிக்கு ஒரு திணைக்களம் !




கம்பஹா, கொழும்பு, களுத்துறை மாவட்டங்களை உள்ளடக்கிய மேல் மாகாணக் கல்வி நடவடிக்கைகளுக்காக எனக் கல்வித் திணைக்களம் ஒன்று கொழும்பு 07, கறுவாத் தோட்டம், (முன்னாள் கீறீன் பாத்) கலாநிதி ஆனந்தக் குமாரசுவாமி வழியில் அமைந்துள்ளது. அங்கு பல சிங்கள, தமிழ், முஸ்லீம் புத்திஜீவிகளும், கல்விமான்களும் உயர் பதவிகளில் பணியாற்றி வருகின்றார்கள்.

இந்தத் திணைக்களத்தில் தமிழ் மொழி பேசும் பல உயர் அதிகாரிகள் பிரதி, உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் போன்ற உயர் பதவிகளில் இருந்த போதிலும், இந்த வருட முற்பகுதி தொடக்கம் இதுவரை பல மாதங்களாகியும் அதன் பெயர்ப் பலகையில் ***கலவித் திணைக்களம — மேல் மாகாணம்*** என்று தவறாக உள்ளதை, அங்கு பல மாதங்களாகத் தினசரி கடமைக்காக வந்து போகும் க(ல)ல்வித் திணைக்கள அதிகாரிகள் இன்னும் கண்டு கொண்டு திருத்தாதது தமக்குப் பொருத்தமான பெயர் என்று கருதித்தானோ என்னவோ?

***எஸ். எஸ்.***

---

## 26 வது இலக்கியச்சந்திப்பு

**காலம் - யூன் 10-11**

**இடம் - ஜெர்மன் Stuttgart நகரில்**

1. பெண்கள் நிகழ்ச்சி
2. தணிக்கை **-சரிநிகர் சரவணன்**
3. மாறன் திருவுள்ளமும் பொய்த்துப் போன புரட்சியும். **— நா. கண்ணன்.**
4. நோபல் பரிசு பெற்ற அமர்த்தியா சென் - பற்றிய நிகழ்ச்சி. **— சந்துஷ்குமார்.**
5. புகலிடச் சூழலும் தொடர்பு சாதனங்களும். **— அருந்ததி.**
6. பாரதியார் - விவரணப் படம்.
7. பெரியாரியம் - ஒரு புதிய வாசிப்பிற்கான ஒத்திகை. **— அசோக்.**
8. ஜேர்மனியின் சட்டங்களும் அவற்றின் பாதிப்பும். **— யோகநாதன்.**
9. வடபுலத்தில் இருந்து முஸ்லிம்கள் விரட்டப்பட்ட பத்தாவது ஆண்டு நினைவுரை. **— ஞானம்.**
10. இயந்திரங்களின் பரிமாண வளர்ச்சி **— சுபா.**
11. நேற்றுவரையிலான பிரான்சின் தத்துவக் கோட்பாடுகள். **— வின்சன்ற்.**
12. மறக்கப்பட்ட கடந்த காலமும் மறக்கடிக்கப்படும் எதிர காலமும். **— பா.வி. ஶ்ரீரங்கன்.**
13. ஒரு நதியின் மரணம் - விவரணப் படம்.

http://www.angelfire.com/nm/ilakiachchanthippu/

---

## அமைச்சரின் பரிநிர்வாணம்!

வைகாசி மாதம் ஒரு முக்கியமான மாதம். உலகம் முழுவதும் அன்பையும் சமாதானத்தையும் கடைப்பிடிக்க வேண்டும் என்று போதித்த புத்தபிரான் ஞானம் பெற்ற வெசாக் பெருநாள் வருகின்ற மாதம் அது. இந்த மாதத்தின் மகிமையோ என்னவோ, நமது அமைச்சர் கதிர்காமருக்கும் ஞானம் பிறந்திருக்கிறது! ஆம், செய்தித்தணிக்கை பயனெதிர் விளைவுகளையே தருமென்று கூறியிருக்கிறார் அவர். சண்டே ரைம்ஸ் பத்திரிகைக்கு அளித்த பேட்டியொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் போர்க்கால நிலைச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தி அனைத்துச் செய்திகளுக்கும் தீவிர தணிக்கையை அமுலப்படுத்தி வரும் சூழலில், அமைச்சர் இவ்வாறு கூறியிருப்பதை வெசாக் மாதத்தின் சிறப்பென்று சொல்லாமல் எப்படித்தான் சொல்வது?

மருத்துவ சிகிச்சைக்காக இந்தியா சென்றிருந்த இடத்தில் அவருக்கு இப்படி ஞானம் பிறந்திருப்பது வரவேற்கத்தக்கதே! ஆனால், அமைச்சரின் இப் பரிநிர்வாண நிலை அரசாங்கத்தை நிர்வாணமாக்கி விட் ள்ளது! நமக்கிருக்கிற அச்சமெல்லாம் இந்த ஞானம் நீடித்து நிலைக்க வேண்டுமே என்பது தான்!

## ஊதுகுழல்கள்

ரூபவாஹினியிலும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திலும் அரசாங்கங்களால் காலத்துக்குக் காலம் அத்தியட்சகர்கள் சபை (Board of Directors) நியமிக்கப்படுவது பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள்.

இந்த அத்தியட்சகர்கள் இவ்விரு நிறுவனங்களும் மக்களுக்கு உரிய விதத்தில் சேவை ஆற்றுகின்றனவா என்பதை கண்காணித்தல், அவற்றை மேலும் மக்களுக்கு சேவை ஆற்றும் விதத்தில் வளர்த்தெடுக்க உரிய திட்டங்களை திட்டல் போன்றவைகளை செய்வதற்காகவே நியமிக்கப்படுவார்கள்.

நடைமுறையில் 'மக்களுக்கு' என்பதற்குப் பதில் 'அரசாங்கத்திற்கு' என்று இதை அர்த்தப்படுத்திக் கொண்டு செயற்படுவதையே இந்த நியமனங்களை வழங்குவதன் மூலம் அரசாங்கம் பொதுவாக எதிர்பார்க்கிறது. அவர்களும் செஞ்சோற்றுக் கடனுக்கு துரோகம் செய்யாமல் அப்படியே செய்வதுண்டு.

இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த புதிதில் இவ்வாறு பல புதிய அத்தியட்சகர்கள் நியமிக்கப்பட்டார்கள். அவர்களில் தமிழ் மொழி சம்பந்தப்பட்ட விடயங்களை கவனிக்கக் கூடிய ஆற்றலும் தகுதியும் வாய்ந்த இருவரும் நியமிக்கப்பட்டிருந்தனர். ஒருவர் கலாநிதி செல்வி திருச்சந்திரன். மற்றையவர் கலாநிதி நுஃமான். ஆனால், இந்த நியமனங்களால் எதையும் மக்கள் நலனுக்கேற்ற விதத்தில் பெரிதாகச் சாதிக்க முடிவதில்லை என்பதும் இந்நிறுவனங்களின் அரச சார்பு நிலை காரணமாக செய்யக் கூடிய பல நல்ல விடயங்கள் நடைமுறைப் படுத்தப்பட முடியாமல் போய்விடுகின்றன என்பதும் பெரும்பாலானோரது அபிப்பிராயம்.

இந்த இருவரில் கலாநிதி நுஃமான் அவர்கள் நியமிக்கப்பட்ட காலத்திலிருந்தே ஒருபோதும் தான் செயற்பட்டதில்லை என்று கூறுகிறார். உத்தியோகபூர்வமாக அவர் அப்பதவியை ஏற்று செயற்பட்டது கிடையாது என்கிறார். செல்வி திருச்சந்திரன் அவர்கள் தம்மால் ஒரு சில விடயங்களை செய்யக் கூடியதாக இருந்தது என்கிறார். ஆனாலும் அவர் செய்யக் கூடியதாக இருந்த விடயங்களில் குறிப்பிடத்தக்கதாக எதுவும் இருந்ததாகத் தெரியவில்லை.

அதற்குப் பிறகு, குறிப்பாகத் தொடர்பு சாதனத் துறைக்குப் புதிய அமைச்சராக மங்கள சமரவீர வந்த பின் புதிய அத்தியட்சகர்கள் நியமிக்கப்பட்டார்கள். இவர்களில் தமிழ் மொழி சம்பந்தமாகச் செயற்படவும் சிலர் நியமிக்கப்பட்டனர்.

ஆனால், இவர்களோ முன்னையவர்களைப் போல அல்லாமல், தகுதி, அனுபவம் என்பவற்றை விட இவர்களது அரசாங்க சார்பின் காரணமாக அரசாங்கத்திற்கு விசுவாசமாக செயற்படக் கூடியவர்கள் என்ற அடிப்படை காரணமாக நியமிக்கப்பட்டார்கள் என்பது வெளிப்படை.

இந்த அத்தியட்சகர்கள் ரூபவாஹினி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் போன்ற நிறுவனங்களில் அவற்றின் சேவையை விரிவுபடுத்துவதற்கோ அல்லது அவற்றை தமிழ் முஸ்லிம் மக்களின் நலன்களை, அவர்களது தேவைகளைப் பிரதிபலிப்பதற்கோ, அல்லது அவர்களுக்கு உரிய பொழுது போக்கு அம்சங்களை வழங்கவோ முயற்சி எடுத்ததாகத் தெரியவில்லை. பதிலாக தணிக்கை தணிக்கை வழிகாட்டுவதிலும் உத்தியோகப் பற்றற்ற தணிக்கையாளர்களாக செயற்படுவதிலுமே அதிக அக்கறை காட்டி வருவதாகத் தெரிகிறது.

ஒருவகையில் இவர்கள் தம்மை நியமித்தவர்களின் விருப்பத்திற்கேற்ப நன்றியுடன் செயற்படுகிறார்கள் என்பதால், அவர்களை எப்படிக் குறை சொல்ல முடியும்? நன்றி என்பது சரி பிழைகட்கு அப்பாற்பட்ட பெரிய விடயமல்லவா ? என்று நீங்கள் யோசிக்கலாம்.

ஆனால், துயரம் என்னவென்றால், இவர்களில் ஒருவர் பத்திரிகையாளர் என்பதும் ஒருகாலத்தில் சுதந்திர ஊடகத்தில் உறுப்பினராக இருந்தவரும், ஜனநாயகம் மனித உரிமைகள் பற்றி அதிகம் பேசித் திரிந்தவருமானவர் என்பது தான்.

வரலாறு மனிதர்களை இனங்காட்ட தனக்குரிய நேரத்தை எடுத்துக் கொள்கிறது. ஆனால் வரலாற்றை இனங்காண நம்மில் எத்தனை பேருக்கு முடிகிறது?

## விமான நிலையம் தொடர்பாக இன்னொரு மேலதிக தகவல்

கடவுச்சீட்டு உண்மையானதாக இருந்தால் பயணம் செய்வதில் எந்தத் தடங்கலும் இல்லை என்று பொதுவாகக் கூறப்பட்டாலும் அவற்றிலும் விதிவிலக்கு உண்டு என்கிறது இந்தத் தகவல்.

சொந்தக் கடவுச் சீட்டில் உரிய விசா பெற்று வெளியேறுபவர்கள் திருப்பி அனுப்பப்படும் பட்சத்தில், அவர்கள் குடிவரவு குடியகல்வுச் சட்டப்படி எந்தத் தவறும் செய்யவில்லை என்றாலும் கூட இப்போதெல்லாம் C.I.D யினரால் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்படுகிறார்கள். இதுகூடப் பரவாயில்லை. கடந்த மாதம் உண்மையான கடவுச்சீட்டு, டிக்கட் சகிதம் வெளியே செல்ல விமான நிலையம் சென்று விமானத்தில் ஏறிய பின் 25 பேர் திரும்ப இறக்கப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாக ஒரு தகவல் கூறுகிறது.

பாஸ்போட்டும் டிக்கட்டும் சரி என்றால், ஒருவரை விமானத்தை விட்டு இறக்குவது அடிப்படையில் மனித உரிமை மீறல் நடவடிக்கை. ஆனால், இலங்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 'புலிச் சந்தேக நபர்' என்று முத்திரை குத்தி யாரையும் பிடித்து அடைத்து விடலாம். அது நடக்கிறது.

யுத்தம் காரணமாக வெளிநாடு போக கொழும்புக்கு வரும் தமிழ் இளைஞர்களை கொழும்பிலும் நிம்மதியாக இருக்க விடாமல் வெளியிலும் போக விடாமல் அரசாங்கம் செய்யும் நடவடிக்கை அவர்களுக்கு திறந்து விட்டுள்ள ஒரு வழி புலியில் போய் சேர்வது தான் என்கிறார் விமான நிலைய அதிகாரி ஒருவர். அந்த அதிகாரி சொல்வதில் உள்ள உண்மையை மறுக்க யாருக்குத் தான் முடியும்?

தணிக்கை

நன்றி - நூலகத்திட்டம்



அறுநூறு வருடங்களுக்கு மேலாக வேற்று அரசுகளின் குடிகளாக வாழ்ந்து பழக்கப்பட்டுப் போனதாலோ என்னவோ பெரும்பாலான தமிழ் மக்களிடம், அதிலும் குறிப்பாக நடுத்தர மற்றும் உயர் வகுப்பார்களிடம் நம்மை விட மேலானதொரு அரசியல் ஆதிக்க சக்தி உண்டென்று பயந்து வாழும் ஒரு உளப்பாங்கு நிலைத்துக் காணப்படுகின்றது. "நாமார்க்கும் குடியல்லோம், நமனை அஞ்சோம்" என்பதெல்லாம் இவர்களைப் பொறுத்தவரையில் பழங்கதை. [redacted]

தணிக்கை

வெள்ளையருக்கு நன்றியுள்ள நாய்களாய் இருந்து 'சேர்' பட்டம் வாங்குவதே மகா கௌரவம் என எண்ணியோர் பலர். சிங்கள அரசியல் தலைமைகளுடன் நட்புறவாடி வாழ்வதே பலம் என செயலாற்றி வாழ்ந்தோர் அதிலும் பலர்.

பெரியார் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக சுய மரியாதை இயக்கம் நடத்திப் பார்த்தார். சரிவரவில்லை.

சுயமரியாதை, தன்நம்பிக்கை ஆகிய இரண்டும் எமது அரசியலகராதியில் நீண்ட காலம் இல்லாது போயிருந்த இரு கருத்துக்கள்.

இன்று, யாழ்ப்பாணப் போர் உச்சக் கட்டத்தை அடையும் தறுவாயில் அரசியற் தலைவர்கள், செய்தித்தாள் ஆசிரியர்கள், விடயமறிந்த பொதுமக்கள் என பல தமிழர் மத்தியில் உலாவுகின்ற ஒரு முட்டாள் தனமான எண்ணம் இதற்கு நல்ல உதாரணம். இவர்கள் எல்லாருமே இப்போது, முரண்-கூர்ந்து நோக்குங்கள்.

தணிக்கை

எனும் மூன்று நிபந்தனைகளும் சரியாக இருக்கும் பட்சத்திலேயே இந்திய அரசின் மூத்த அதிகாரி ஒருவர் செவ்வாய்க்கிழமை கூறியதைக் கவனிக்க வேண்டும்

தணிக்கை

புலிகளுடன் பெரும்போரில் இறங்கினாலும் சரி, அடிவிழுந்தவுடன் பின்வாங்கினாலும் சரி மேற்கு நாடுகளும், சீனாவும் அதை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் என்பது டெல்லியின்



பலவகையான குழப்பங்களும் எதிர்ப்புகளும் தற்போது தோன்றத் தொடங்கியுள்ளன.

தணிக்கை


முதலாமவர் நேரடியாகவே எந்த வெளிநாட்டுத் தலையீடும் எதிர்க்கப்பட வேண்டியது என்கிறார். இரண்டாமவர் இலங்கைப் படை-

குடாநாட்டைக் காப்பாற்றுக என சிங்கள மக்கள் மத்தியில் இருந்த எண்ணம் ஏன் இப்போது மாறுகின்றது? உலகில் எந்நாட்டின் உதவியும் இன்றி [redacted] படையாட்களையே கொண்ட ஒரு படையுடன் புலிகளின் தலைவர் பிரபாகரனால் ஒரு இலட்சத்து இருபதினாயிரம் பேர் கொண்ட தம் படையை இந்த அடி அடிக்கக் கூடியதாயிற்றென்றால் நாம் இன்னும் இந்தியாவிடம் மடிப்பிச்சை கேட்டு நிற்பது கேவலத்திலும் கேவலம் அன்றோ என்றதோர் எண்ணம் அவர்களிடம் ஏற்படத் தொடங்கியுள்ளது என்பது கண்கூடு.

தணிக்கை

என என்னிடம் கேட்டார் நான் முன்னர் வேலை செய்த ஒரு செய்தி அலுவலகத்தின் சிங்கள தேசியவாத எண்ணங் கொண்ட ஒரு சிற்றூழியர். (சிங்கள இனவாதிகளே தன்மானம் என்றால் என்ன என்பதைப் பற்றி பாடம் கற்கையில் இந்தியா ஏதோ செய்யப் போகிறது என மானங்கெட்டுப் பிதற்றும் தமிழ் கூறு நல்லுலகின் சில குடிமக்களை என்னவென்று சொல்ல)

# தன்மானம் சுயமரியாதை தமிழர் இந்தியா



பாடில்லாமல் "இந்தியா ஏதோ செய்யப் போகிறது", "இந்தியா வரும்", "இந்தியா தலையிட்டு பிரச்சினையைத் தீர்க்கப் போகிறது" எனக் கூறுகின்றனர்.


தணிக்கை

உங்களுக்குத் தன்நம்பிக்கையும், சுயமரியாதையும் சற்றேனும் இல்லாமல் இருக்கலாம். ஆனால், மூளையிருக்கிறது.

சற்று சிந்தித்துப் பாருங்கள். டெல்லி அதிகாரிகள் என்ன சொல்கிறார்கள் என்பதைக்

நியாயமான பயம். 'மேலும் தென் ஆசியப் பிராந்தியத்தில் இந்தியாவினால் தனித்து எந்தச் சிக்கலையும், தீர்க்க முடியாது என்ற ஒரு நிலைமையை அமெரிக்காவும் வேறு மேற்கு நாடுகளும் ஏற்படுத்த முயற்சி செய்கின்றன, இந்தக் காய் நகர்த்தல்களில் ஒன்றாகத் தான் இலங்கைச் சிக்கலுக்குள் தன்னை ஈடுபடுத்த அமெரிக்கா கடுமையாகத் தூண்டுகின்றது என இந்தியா மிகச் சரியாகவே கவனங் கொள்கிறது.

இந்தியப்படை உதவியை இதுவரை இலங்கை அரசு மனப்பூர்வமாகக் கோரவில்லை. நாடாளுமன்றில் கூட அதைப்பற்றி மூச்சு விடவில்லை. ஒரு சில புத்த பிக்குகள் இந்திய உதவியை நாடியிருந்த போதும் சிங்களத் தரப்பில் நாட்கள் செல்லச் செல்ல



களே புலிகளை நசுக்க வேண்டும். யாருடைய படையாள் உதவியும் சிறீலங்காவிற்குத் தேவையில்லை என்கிறார்.

புலிகளிடம் தோற்க வேண்டி வந்தாலும் வெளிநாடொன்றின் படை இங்கு வருவது தவிர்க்கப்பட வேண்டும் என்பது சிங்கள பௌத்த தேசியவாத அமைப்புகளின் கூட்டணித் தலைவர் தெளிவாக இவ்வாரம் லண்டன் டைம்ஸ் பத்திரிகையாளரிடம் சொன்ன கருத்து.

தணிக்கை

எமது கழுத்துகள் எமது குளியலாடைகளினாலேயே நசுக்கப்பட்டிருக்கும். இவையெல்லாவற்றிலிருந்தும் பிரபாரன் எம்மைக் காப்பாற்றியிருக்கிறார்." எனக் கூறுகிறார் அமரசேகர.

தணிக்கை

இந்தியாவின் காலடியில் வீழ்ந்தாவது

எனவே குடாநாட்டுப் போரின் திசையை மாற்றும் வகையில் இந்தியா யாழ்ப்பாணத்தில் படையிறக்குவதற்கு சாதகமான அரசியல் சூழ்நிலை தெற்கில் இன்று அற்றுப் போய்க் கொண்டிருக்கின்றது என்பதே உண்மை. இதை இவ்வாரமே சற்றுக்கூர்ந்து நோக்கத் தலைப்பட்டுள்ளனர் டெல்லியதிகாரிகள்.

தணிக்கை

அந்த வகையில், டெல்லி அரசியலாளரும், அதிகாரிகளும் கருத்து வெளியிடுவதும் ஒரு கபட நோக்கத்திலேயே என்ற ஒரு காழ்ப்புணர்வும் தென்னிலங்கையில் ஒரு சிலரிடம் துளிர்விடத் தொடங்கியுள்ளது.

இலங்கை அரசாலும், இலங்கைப் படைகளாலும் எதையும் செய்ய முடியாது, இந்தியா தான் இறுதியில் கைகொடுக்க வேண்டும்.

தணிக்கை

வல்லாதிக்க நலனை முன்னிறுத்தவே யாழ்ப்பாணத்திலிருந்து படை வெளியெடுப்பு எனும் பூச்சாண்டியை டெல்லி தூக்கிப்பிடிக்கிறது என சில சிங்கள தேசியவாதிகள் தற்போது எண்ணத் தலைப்பட்டுள்ளனர்.

இவ்வெண்ணம் வலுக்குமானால் இந்தியா தான் நினைத்தபாட்டிற்கு குடாநாட்டினுள் கால் வைப்பதற்கு மேலும் முட்டுக்கட்டைகள் தோன்றும் என்பதில் ஐயமில்லை. இவற்றையும் இன்னோரன்ன விடயங்களையும் சீர்தூக்கிப் பார்க்காமல் இந்திய மத்திய அரசின் நடவடிக்கைகளைப் பற்றியும் எமது அரசியல் எதிர்காலத்தைப் பற்றியும் வாயளப்பது நன்றன்று என்பதே எனது கருத்தாகும்.

டி.சிவராம்

நன்றி - நூலகத்திட்டம்



## வடக்கு கிழக்கு மாகாண சபை:

# கறையான்களும் கருநாகங்களும்!

போதுமானதாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் வடக்கு கிழக்கு மாகாண அமைப்பு ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்களின் இரத்தத்தில் உருவாகியது என்பதை எவரும் நிராகரித்து விடமுடியாது. எந்த இயக்கமாக இருந்தாலும் இரத்தம் சிந்திப் போராடிய இளைஞர்கள் போராட்டத்தின் சிறிய பெறுபேறுகளைக் கூட அனுபவிக்கவில்லை என்பதும் கவனத்திற் கொள்ளத்தக்கது.

ஆனால், கறையான் புற்றெடுக்கக் கருநாகம் குடிகொண்டது போல் போராட்டத் துயரங்களில் மாத்திரமல்ல போராட்ட உணர்வில் கூட பங்கெடுக்காத ஒரு கூட்டத்தினரிடம் இன்று மாகாண சபை சிக்கிச் சீரழிந்து கொண்டிருக்கிறது. மாகாண சபையை உறிஞ்சோ உறிஞ்சென்று உறிஞ்சித் தங்கள் குடும்ப நலன்களுக்காக வளைத்துக் கொள்வதில் இவர்கள் மகா சமர்த்தர்கள்.

தனது நன்மைகருதி கணக்கில் கணக்கு விட்டுக் கொண்டிருந்த ஒரு கணக்காளர் பத்திரிகையில் செய்தி வெளியான பிறகு வேறு வழியில்லாமல் கணக்கைச் சரிசெய்ய வேண்டியவரானார், கணக்காய்வுக்குப் பொறுப்பாக இருந்த மகாத்மாவோ சுற்று நிருபங்களுக்கேற்ப தனது மீள் நியமனத் திகதியை 'அட்ஜஸ்ட்' செய்து கொடுப்பனவுகளையும், சம்பள அதிகரிப்பையும் பெற்றுக் கொண்டிருந்தார். பத்திரிகையில் தோலுரிக்கப்பட்ட பிறகு, "என் மீது எவனாவது நடவடிக்கை எடுக்க முனைந்தால், அவனை மாட்டி விடுவேன்" என்று இரண்டொரு வாரங்கள் எச்சரித்து விட்டு பதவியிலிருந்து விலகிக் கொண்டார்.

இன்னொரு செயலாளர், கருத்தரங்கு கருத்தரங்காக நடத்தி, வவுச்சர் வவுச்சராக அறுவடை செய்து கொண்டிருந்தார். இப்போது அவரும் இடமாற்றப்பட்டு விட்டார். முன்பொரு தடவை, இவருக்கு அமைச்சை மாற்றி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்ட போது "டை" கட்டிய உத்தியோகத்தர்களைக் கொண்டு, இடமாற்றத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டத்தை நடத்தி முடிந்தார். ஆர்ப்பாட்டத்தில் நியாயம், முறை என்பன இல்லாத போதிலும்,

போதுமானதாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் வடக்கு கிழக்கு மாகாண அமைப்பு ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்களின் இரத்தத்தில் உருவாகியது என்பதை எவரும் நிராகரித்து விடமுடியாது. எந்த இயக்கமாக இருந்தாலும் இரத்தம் சிந்திப் போராடிய இளைஞர்கள் போராட்டத்தின் சிறிய பெறுபேறுகளைக் கூட அனுபவிக்கவில்லை என்பதும் கவனத்திற் கொள்ளத்தக்கது.

ஆனால், கறையான் புற்றெடுக்கக் கருநாகம் குடிகொண்டது போல் போராட்டத் துயரங்களில் மாத்திரமல்ல போராட்ட உணர்வில் கூட பங்கெடுக்காத ஒரு கூட்டத்தினரிடம் இன்று மாகாண சபை சிக்கிச் சீரழிந்து கொண்டிருக்கிறது.

இந்தச் செயலாளர் தொடர்ந்தும் இருப்பதால் ஆர்ப்பாட்டக்காரப் படித்த மனிதர்களுக்கு சம்பளத்தை விட சட்டமுரணான வருமானங்கள் இருக்கின்றன என்பது பட்டவர்த்தமானது.

இப்போது கூட ஒன்றும் குறைந்து விடவில்லை. பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் பொங்கல் வைப்பதென்றால் கூட மாகாணசபை அதிகாரிகளின் நேர்த்திக்கடன் நிறைவேற மாகாணசபை வாகனங்கள் தான் ஓடித்திரிகின்றன. செங்கல், விறகு, அரிசி, பயறு தொடக்கம் வீட்டில் உள்ள சகல ஜீவன்களையும் (நாயை அழைத்து வந்தால் நல்லாயிருக்காது என்பதால் அதனை அழைத்து வருவதில்லை) ஏற்றி இறக்கும் பொறுப்பு மாகாணசபை வாகனங்களுக்குத் தான். ஒருவேளை "மாகாணசபை வாகனத்தில் மாகாண சபைச் செலவில் எரிபொருள் போட்டுக் கொண்டு, மாகாண சபை ஓட்டுநரைப் பயன்படுத்திப் பொங்கலிடுவேன்" என்று நேர்த்தி வைத்தார்களோ என்னவோ!

மட்டக்களப்பில் ஆலயத் திருவிழாவா? உத்தியோகபூர்வ விஜயம் என்ற பெயரில் மாகாண சபை வாகனத்தில் குடும்பமாகவே புறப்பட்டு விடுவார்கள். இரண்டொரு அலுவலகங்களுக்குச் சென்று "வந்தேன்" என்பதைப் பதிவு செய்துவிட்டு மாலை மரியாதை, போக்குவரத்துப்படி, உல்லாசம் என்று அத்தனையும் இவர்களுக்கு வரவு தான். "கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு' என்பது போல், மாகாண சபை அதிகாரிகளுக்கு நின்ற இடமெல்லாம் வரவு தான். கொழும்பில் மகளுக்கு நேர்முகப் பரீட்சையா அல்லது வேறு பரீட்சைகளா எல்லாமே மாகாண சபைச் செலவு தான். அதுவுமல்லாமல் போய்வந்த களைப்புக்குரிய கொடுப்பனவுகளையும் சதம் பிசகாமல் உச்சமட்டத்துக்குப் போட்டு எடுத்து விடுவார்கள்.

இவற்றையெல்லாம் குறிப்பிடுவதன் நோக்கம் எங்கள் மாகாண சபை அதிகாரிகள் திறமை குறைந்தவர்கள் என்று யாரும் கனவில் கூட எண்ணிவிடக் கூடாது என்பதற்காகத் தான். ஆனாலும் இந்தத் திறமைசாலிகள் தங்கள் கவனக்குறைவால் சிற்றூழியர்கள் 94 பேரின் வாழ்க்கையை இருளடைய வைத்து விட்டார்கள் என்பதை நினைக்கும் போது தான் வேதனையாக இருக்கிறது.

தங்களை உயர்த்திக் கொள்ள இவர்கள் கொண்டிருந்த கரிசனையில் ஆயிரத்திலொரு பங்கையேனும் சிற்றூழியர் விடயத்தில் காட்டியிருந்தால், இன்று இவர்களது வாழ்க்கைக்கு இக்கேடு வந்திருக்காது. முறைப்படி நியமனம் செய்யப்படவில்லை என்ற காரணத்தால் தொண்ணூற்றி நான்கு சிற்றூழியர்கள் சேவையிலிருந்து அகற்றப்பட உள்ளார்கள்.

இச்சிற்றூழியர்கள் வருடக்கணக்காக மாகாண சபையில் பணியாற்றி வருகிறார்கள். சில ஊழியர்கள் 1991 தொடக்கம் கடமை புரிந்து வருகிறார்கள். பொதுவாக ஒரு ஊழியர் தொடர்ச்சியாக 150 வேலைநாட்களைப் பூர்த்தி செய்தாலே அவர் நிரந்தர நியமனம் பெற உரித்துடையவராகிறார். அதற்குப் பிறகும் நிரந்தர நியமனம் அவ்வூழியருக்குக் கிடைக்கத் தாமதமாவதென்றால் அது திணைக்களத் தலைவரின் கவனமின்மை தான்.

இதை உணர்ந்து அரசும், பல சுற்றுநிருபங்களை வெளியிட்டு திணைக்களத் தலைவர்களுக்கு நினைவூட்டியது. அண்மையில் சந்திரிகா அரசாங்கம் கூட 150 வேலை நாட்களைப் பூர்த்தி செய்த சகல ஊழியர்களையும் நிரந்தரமாக்குமாறு பணித்திருந்தது நினைவிருக்கலாம். இந்தப் பணிப்புரையையும் காதில் வாங்கிக் கொள்ளாமல் தாபனக் கோவை நியமன விதிகளையும் கருத்திற் கொள்ளாமல் தங்களுக்காகவும், தங்கள் குடும்ப உயர்வுக்காகவும் மாகாணசபையை எவ்வாறு பயன்படுத்தலாம் என ஆய்வு செய்து புதுப்புது திருட்டுவழிகளைக் கண்டுபிடித்துக் கொள்வதில் காலத்தைச் செலவு செய்துவிட்டு முறையான ஒப்புதல் பெறாத நியமனங்கள் என்ற போர்வையில் சிற்றூழியர்களின் வாழ்க்கையைப் பாழடித்துள்ளார்கள்.

ஏப்ரல் 19ம் திகதி திருகோணமலையில் இடம்பெற்ற மாகாணசபைச் செயலாளர்களுக்கான கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. முறையாக நியமனம் செய்யப்படவில்லை என்பதற்காக ஊழியர்களை வேலையிலிருந்து நீக்கமுடிவு எடுக்கப்பட்டதைவிட தங்கள் பொறுப்பை உணர்ந்து ஊழியர்களை முறையாக நியமனம் செய்யாத திணைக்களத் தலைவர்களைத்தான் வீட்டுக்கனுப்பும் முடிவு மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.

சிற்றூழியர்களைப் பொறுத்தமட்டில் நியமனம் பெறுவதற்காக அவர்கள் செய்யக் கூடிய அதி உச்சத் தில்லு முல்லு நியமனம் செய்யவல்ல அதிகாரிகளை மகிழ்விப்பது தான். இந்தத்தவறிலும் அதிகாரிகளே தண்டிக்கப்பட வேண்டியவர்கள்.

ஊழியர் ஒருவர் நியமனம் பெற்ற பின்னர் தனது நேரடி மேலதிகாரி இடும் பணிகளைத் தான் செய்ய வேண்டியவராகின்றார். அதேபோல் தனது எல்லா அலுவலக நலன்களுக்கும் ஒரு குழந்தை பெற்றோரை நம்பி இருப்பது போல தனது மேலதிகாரியையே அவர் நம்பியிருக்கிறார். சில அதிகாரிகள் சிற்றூழியர்களின் 'அதிகாரி விசுவாசத்தை' தமது வீட்டுவேலைகளைச் செய்விப்பதற்குக் கூடப் பயன்படுத்துகிறார்கள்.

இத்தகைய ஊழியர்களிடம் வேலை வாங்குவது மட்டும் அதிகாரிகள் பணியல்லை. திணைக்களத்தால் அவ்வூழியருக்குச் சேரவேண்டிய நன்மைகளை உரிய காலத்தில் பெற்றுக்கொடுப்பதும் அதிகாரிகளின் பணிதான். ஆனால், இந்த அதிகாரிகளோ அவர்களது நியமனத்துக்கான முறையான அங்கீகாரத்தைக் கூடப் பெற்றுக்கொடுக்காமல் தூங்கி வழிந்திருக்கிறார்கள்.

இந்தத் தூக்கம் தொண்ணூற்றி நான்கு தனிமனிதர்களை மட்டும் பாதிக்கவில்லை. தொண்ணூற்றிநான்கு குடும்பங்களை நடுத்தெருவுக்குக் கொண்டு வந்திருக்கிறது.

தங்கள் தவறுகளால் ஊழியர்களின் குடும்பங்களுக்குத் தண்டனை வழங்க முன்வந்த இந்த அதிகாரிகள் விடயத்தில் அரசியல்வாதிகள் கவனமெடுக்காமல் போனால் இந்தக் குடும்பங்களின் அவலத்துக்கு யாராலும் பரிகாரம் காணமுடியாது போய்விடும். மீள்நியமனத்துக்கு, சேவை நீடிப்புக்கும், பதவி உயர்வுகளுக்கும் காட்டும் கரிசனையில் கொஞ்சமேனும் இவர்களது வேலை பறிபோகாமல் இருக்கும் வகையில் காட்டுவது சமூகத்துக்கே நல்லது.

- விவேகி

### பதவி இழக்கவிருப்பவர்களின் பெயர்ப் பட்டியல் வருமாறு:

1. பி. நல்லைக் குமரன் (நெடுந்தீவு)
2. ரி. கெங்காதரன் (நெடுந்தீவு)
3. எம். சபாரட்னம் (நெடுந்தீவு)
4. எம். கிறிஸ்டிராஜன் குரூஸ் (முசலி)
5. எம். சுந்தரமூர்த்தி (முசலி)
6. என். இராமச்சந்திரன் (நானாட்டன்)
7. எஸ். ஆனந்தராஜன் (மண்முனை மேற்கு)
8. எஸ். வசந்தராசா (மண்முனை மேற்கு)
9. இ. மணிவண்ணன் (மண்முனை வடக்கு)
10. எஸ். இராஜேஸ்வரன் (மாரித்தம்பற்று)
11. கே. தர்மராஜா (துணுக்காய்)
12. ரி. தவபாலன் (புதுக்குடியிருப்பு)
13. என். சதானந்தன் (காரைதீவு)
14. ஜி. திருஞானச்செல்வம் (பட்டிப்பளை)
15. எம். பஞ்சலிங்கம் (மாந்தை கிழக்கு)
16. டி.எஸ்.கே. தனவர்தன (வவுனியா தெற்கு)
17. டி. சம்பிகா ஹலும் (வவுனியா தெற்கு)
18. ரி. தெய்வேந்திரம் (மருதன்கேணி)
19. எம். நவரத்தினம் (திருகோணமலை)
20. செல்வி சி. சத்தியவாணி (திருகோணமலை)
21. என். ஷியாம் குமார் (திருகோணமலை)
22. எம். கிருஷ்ணமூர்த்தி (திருகோணமலை)
23. பி. நிக்ஸன் நவேந்திரன் (திருகோணமலை)
24. எஸ். அப்துல் ரஹீம் (திருகோணமலை)
25. எஸ். முத்துக்குமார் (திருகோணமலை)
26. ஜி. உதயகுமார் (திருகோணமலை)
27. ரி. முருகேசு (திருகோணமலை)
28. கே. உமாச்சந்திரன் (திருகோணமலை)
29. செல்வி ஆர். சுரலதா (திருகோணமலை)
30. செல்வி கே. சிவமணி (திருகோணமலை)
31. திருமதி ஜே. மக்ஸிமாலா (திருகோணமலை)
32. செல்வி ரி. கலைவாணி (திருகோணமலை)
33. திருமதி ரி. கிறிஸ்டோபர் (திருகோணமலை)
34. திருமதி எஸ். சதாலட்சுமி (திருகோணமலை)
35. எஸ். நல்லைநாதன் (திருகோணமலை)
36. இ. பி. சிறிதர் லம்பேட் (திருகோணமலை)
37. ஜி. யேசுதாஸன் (திருகோணமலை)
38. வி. தர்மகுலசிங்கம் (திருகோணமலை)
39. செல்வி எஸ். விமலேஸ்வரி (திருகோணமலை)
40. செல்வி கே. குகதர்ஷனி (திருகோணமலை)
41. ஜே. செபமாலை (திருகோணமலை)
42. என். குணசேகரம் (ஏறாவூர்பற்று)
43. பி. ஞானரெட்னம் (ஏறாவூர்பற்று)
44. இ. அன்ரனி (எருவில்பற்று)
45. பி. ஜெயநேசன் (ஒட்டுசுட்டான்)
46. பி. எல். நந்ததாஸ (தெஹியத்த கண்டிய)
47. கே. சமந்தா புஷ்பகுமார (பதியத்தலாவை)
48. எஸ். பிரேமசார (பதியத்தலாவை)
49. கே. ஜெகதீஸ்வரன் (மன்னார்)
50. சி. யேசுதாஸன் (மன்னார்)
51. கே. தயாநிதி (மன்னார்)
52. செல்வி எஸ். இசபெல்லா லம்பேட் (மன்னார்)
53. வி. பி. விஜயதுங்க (தமண)
54. எம். மொகமட் ஜவாஹிர் (சம்மாந்துறை)
55. செல்வி எஸ். நாகநந்தினி (முல்லைத்தீவு)
56. எஸ். ரவிச்சந்திரன் (முல்லைத்தீவு)
57. இ. மதியழகன் (முல்லைத்தீவு)
58. செல்வி எஸ். சதீஸ்வரி (மட்டக்களப்பு)
59. ஏ. ஜீவானந்தம் (மட்டக்களப்பு)
60. செல்வி பி. ரூபராணி (மட்டக்களப்பு)
61. கே. சுரேந்திரன் (மட்டக்களப்பு)
62. வி. ரமேஷ் (மட்டக்களப்பு)
63. ஏ. அலெக்ஸாந்தர் (மட்டக்களப்பு)
64. எஸ். ராஜநாதன் (யாழ்ப்பாணம்)
65. சி. கணேசமூர்த்தி (யாழ்ப்பாணம்)
66. இ. சசிகரன் (கல்முனை)
67. செல்வி வி. சாந்தினி (வவுனியா)
68. ரி. சிறிகாந்தன் (கிளிநொச்சி)
69. கே. எஸ். சானக சுரசேன (அம்பாறை)
70. ரி. லங்கா அமரசிங்க (அம்பாறை)
71. கே. கமலநாதன் (காணிவிவசாய அமைச்சு)
72. கே. எம். முஜிப் ரகுமான் (காணி விவசாய அமைச்சு)
73. ஏ. மொகமட் அலி (வீதி அபிவிருத்தித் திணைக்களம்)
74. ஏ. பிரான்சிஸ் சம்சன் (வீதி அபிவிருத்தித் திணைக்களம்)
75. ஜி. அருட்செல்வன் (வீதி அபிவிருத்தித் திணைக்களம்)
76. ஏ. நஜீப் லாபீர் (வீதி அபிவிருத்தித் திணைக்களம்)
77. எஸ். சிறிறஞ்சன் (வீதி அபிவிருத்தித் திணைக்களம்)
78. எஸ். வேல்சாமி (வீதி அபிவிருத்தித் திணைக்களம்)
79. எஸ். சிவராஜன்(வீதி அபிவிருத்தித் திணைக்களம்)
80. எஸ். கனகராஜா (வீதி அபிவிருத்தித் திணைக்களம்)
81. கே. காளிதாஸன் (வீதி அபிவிருத்தித் திணைக்களம்)
82. செல்வி ஏ. எஸ். பரீடா (சுதேச வைத்திய அமைச்சு)
83. ஈ. எல். ரபீக் (சுதேச வைத்திய அமைச்சு)
84. எஸ். வினோதினி (சுதேச வைத்திய அமைச்சு)
85. எஸ். சகாயராஜ் (சுதேச வைத்திய அமைச்சு)
86. வி. ராமலிங்கம் (சுதேச வைத்திய அமைச்சு)
87. ஏ. எல். எம். இஸ்மாயில் (சுதேச வைத்திய அமைச்சு)
88. பி. யசோதரன் (சுதேச வைத்திய அமைச்சு)
89. கே. சந்திரசேகரம் (சுதேச வைத்திய அமைச்சு)
90. எஸ். திருகேஸ்வரன் (சுதேச வைத்திய அமைச்சு)
91. எஸ். இராஜரட்னம் (சுதேச வைத்திய அமைச்சு)
92. கே. அமிர்தலிங்கம் (சுதேச வைத்திய அமைச்சு)
93. பி. தயாளராஜ் (சுதேச வைத்திய அமைச்சு)
94. ஜே. தன்ரன் (புனர்வாழ்வு அமைச்சு)

நன்றி - நூலகத்திட்டம்



# வரப்போகும் இரத்தக் களரிக்கு யார் பொறுப்பு?

'சண்டே லீடர்', 'இரிதா பெரமுன' பத்திரிகைகளுக்கு தடை விதிக்கும் உத்தரவு விதிக்கப்பட்டிருப்பதாக சற்று முன் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த உதயன் பத்திரிகை மீதான தடை விதிக்கப்பட்டு ஒரு வாரத்துள் இரண்டாவது தடையை அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

தணிக்கை அதிகாரியின் எச்சரிக்கையை மீறி தொடர்ந்தும் தணிக்கை விதிகளை மீறும் விதத்தில் செயற்பட்டதன் காரணமாகவே இத்தடை நடைமுறைக்கு வந்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்த உதயன் பத்திரிகைக்கு, அதை தணிக்கை அதிகாரி ஒருவருக்கு காட்டிவிட்டு வெளியிடும் வாய்ப்பு [illegible] இல்லாத சூழலில் [illegible] தடை செய்யப்பட்டிருக்கிறது. தகுதிவாய்ந்த ஒரு தணிக்கை அதிகாரி நியமிக்கப்படாத ஒரு சூழ்நிலையிலே இப்பத்திரிகை தடை செய்யப்பட்டிருப்பது எந்த விதத்திலும் நியாயப்படுத்தக்கூடிய ஒன்றல்ல என்றும் அரசாங்கம் யுத்தம் தொடர்பான செய்திகளுக்கு மட்டுமன்றி அரசு தொடர்பான எந்த விமர்சனங்களை தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

"இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த காலம் முதல் அது சொன்னவற்றிற்கு முரணாக அனைத்து அம்சங்களிலும் மக்கள் நலன்களுக்கு விரோதமான செயல்களிலேயே ஈடுபட்டு வந்தது. அவற்றில் ஒன்று தான் இந்த யுத்தமும் கூட. இன்று இந்த அரசாங்கம் நடத்திக் கொண்டிருக்கும் யுத்தம், தனது இயலாமையையும், தான் சொன்னபடி நடக்காமையையும் மூடி மறைக்க நடாத்தி வரும் ஒரு நாடகம் தான். இந்த அரசாங்கம் நடாத்தும் யுத்தத்தை கூட சரிவர நடாத்தவில்லை. நடாத்துவதற்கேற்ற எந்தத் திட்டத்தையும் கொண்டிருக்கவில்லை. மக்களை ஏமாற்றுகிற, தவறான பல சமயங்களில் பொய்யான தகவல்களைத் தருகிற நடவடிக்கைகளிலேயே அது தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது. பத்திரிகையாளர்கள் என்ற முறையில் அதை அம்பலப்படுத்துவது எம் கடமை என்று செயற்பட்டு வந்தவர்கள் நாம். இது அரசாங்கத்திற்கு தொடர்ச்சியாகப் பெரிய தலையிடியாக இருந்து வந்தது. யுத்தம் தொடர்பான உண்மைத் தகவல்களை அது தொடர்ச்சியாக மறைத்து வந்தது. இதன் மூலம் அது யுத்தத்தை

தணிக்கை

அப்படி எதுவும் நடக்கவில்லை என்று அவர்கள் கூறியதை நாம் அம்பலப்படுத்தினோம். அதுவே எம்மீதான தடைக்கு காரணமாக இருக்க வேண்டும்.

எப்படியோ இந்த அரசாங்கம் எமது பத்திரிகைகளை தடை



செய்யும் சந்தர்ப்பத்தை எதிர்நோக்கி இருந்தது. நாம் எழுதும் உண்மைகளை அதனால், சகிக்க முடியவில்லை. எம்மை தடைசெய்துவிட்டது. அதற்காக நாம் மௌனமாக இருக்க முடியாது. இதை எதிர்த்து நாம் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளோம் என்று கூறினார் அவர்.

உலகம் முழுவதும் எல்லாம் அறிந்திருக்க, இலங்கை வாழ் பெரும்பான்மையான மக்கள் மட்டும் எதுவும் அறியாதவர்களாக இருப்பதுதான் இந்நடவடிக்கைகளின் மிகவும் மோசமான விளைவாகும். நாட்டின் தலைவிதியை தீர்மானிக்க வேண்டிய மக்களை இருட்டுள் வைத்திருக்க விரும்பும் அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையை உண்மையில் அவர்களை தயாரற்றவர்களாக, தவறாக வழிநடத்தப்படுபவர்களாக வைத்திருக்கும் ஒரு தேசத்துரோக நடவடிக்கை என்று வர்ணிக்கிறார் மூத்த பத்திரிகையாளர் ஒருவர்.

யுத்தத்தில் நியாயம் இருக்கிறதோ இல்லையோ, தோல்வியும் வெற்றியும் மாறி மாறி வருபவை என்பதை மக்கள் உணர்ந்து கொள்ள முடியாதவர்கள் அல்ல. உண்மைத் தகவல்களை மக்களுக்குச் சொல்வதன் மூலமாக அவர்கள் என்ன

வர்களிடம் கவலைப்பட்டிருக்கிறார்.

புலிகள் பலவீனமாக இருக்கிறார்கள். அவர்களால் நகர முடியவில்லை. அவர்களுக்கு ஆட்கள் தட்டுப்பாடு நிலவுகிறது என்று தொடர்ந்து கதை விட்டுக்கொண்டு அரச தொடர்பு சாதனங்கள் தகவல் அறிவித்துக் கொண்டிருக்கையில் சம்பவங்கள் வேறு விதமாக நடந்து கொண்டிருப்பதாக வேறு தகவல்கள் தெரிவிக்கின்றன. கைதடியில் உள்ள வயோதிபர் மடத்தில் இருந்த 15 வயோதிபர்கள் புலிகளின் ஷெல்லடியில்

தணிக்கை

தணிக்கை

அரசாங்கம் இன்று யுத்த முனைப்புடன் செயற்பட்டு, அதற்காக முழு நாடும் தயார் நிலையில் இருக்க வேண்டும் என்று கூறி தீவிர தடைச் சட்டங்களை நடைமுறைப்படுத்தி வருவதன் மூலம் உண்மையில் அது இவ்வளவு காலமும் எதிர்ப்பதாக கூறிவந்த யுத்தவாதிகளுக்கு அவர்கள் இஷ்டம் போல செயற்பட முழு ஆதரவையும் உற்சாகத்தையும் அளித்து வருகிறது. இனவாத சக்திகள் அனைவரும் ஒன்று சேர்ந்து பூரண சுதந்திரத்துடன் செயற்பட அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். யுத்தத்திற்கு ஆதரவாக பேசும் ஒருவர் என்ன வேண்டுமானாலும் பேசலாம் என்ற நிலையை இன்றைய சூழ்நிலை உருவாக்கி விட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தினர் இங்கே ஒரு இனக்கலவரம் நடக்கக் கூடும் யாழ்ப்பாணம் வீழ்ந்தால் அப்படி ஒரு நிலைமை ஏற்படக் கூடும் என்று கருதி அத்தகைய ஒழு சூழ்நிலை ஏற்படும் பட்சத்தில் பாதிக்கப்படக்கூடிய தமிழ் மக்களை பாதுகாக்க நடவடிக்கை எடுத்து வருவதாக சில செய்திகள் தெரிவிக்கின்றன. அப்படியான ஒரு நெருக்கடி மிக்க சூழல் நிலவுகையில் அரசாங்கமோ அப்படி எதுவுமே இல்லாதது போல யுத்தத்தை தீவிரமாக நடத்துவதில் தான் கவனம் செலுத்துகிறது.

யும் சகிக்கத் தயார் இல்லை என்பதையே இது காட்டுகின்றது என்றும் பத்திரிகையாளர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். இந்த விடயத்தை மேலும் உறுதிப்படுத்துவது போல இப்போது சண்டே லீடர் மற்றும் அதன் சகோதரப் பத்திரிகையான இரிதா பெரமுன ஆகிய பத்திரிகைகள் தடைசெய்யப்பட்டுடிருக்கின்றன.

சண்டே லீடர் மற்றும் இரிதா பெரமுன பத்திரிகைகள் அரசாங்கத்தினை கடந்த காலம் முழுவதும் தொடர்ச்சியாக விமர்சித்து வந்திருந்தன. அரச மட்டத்தில் நடக்கும் அதிகார துஷ்பிரயோகம், ஊழல் போன்ற நடவடிக்கைகளை அம்பலப்படுத்துவதில் இப்பத்திரிகைகள் மிகவும் தீவிரமாக இருந்து வந்துள்ளன.

கடந்த மே 3ம் திகதி வெளியிடப்பட்ட அதி விஷேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் கொண்டு வரப்பட்ட பிரசுரங்களுக்கான கட்டுப்பாட்டுச் சட்ட அவசரகால விதிகள் இப்பத்திரிகைகளின் அரசாங்கம் மீதான அனைத்து விமர்சனங்களையும் கட்டுப்படுத்தும் நோக்குடன் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்கிறார் இரிதா பெரமுன பத்திரிகையின் ஆசிரியர் சமன் வஹாராச்சி. பத்திரிகை தடை செய்யப்பட்ட ஒரு சில மணிநேரத்தில் அவருடன் தொடர்பு கொண்ட போது தம்மீது தடை விதிக்கப்பட்டது தொடர்ந்து தோல்விக்கு இட்டுச் செல்லும் ஒரு நிலையை உருவாக்கியது.

தணிக்கை

யுத்தத்தை அது வெறும் கட்சி அரசியல் நலனுக்காகவே பயன்படுத்தி வந்தது. சென்ற வாரம் எமது பத்திரிகையில் எழுதப்பட்ட செய்தியில் பொ.ஐ.மு தொடர்பாக எழுதப்பட்ட விடயங்களை மட்டும் தணிக்கை செய்து விட்டு ஐ.தே.க சம்பந்தமாக எழுதப்பட்ட செய்திகளை அப்படியே விட்டது. ஆனால், சாரத்தில் இரண்டு செய்திகளும் அனேகமாக ஒரே தன்மையானவை. யுத்தச் செய்திகளை மட்டும் தணிக்கை செய்வதாக இருந்தால் இந்தச் செய்திகளில் அது கைவைத்திருக்கத் தேவையில்லை. ஆனால் தணிக்கை அதிகாரிகள் அரசியல் பக்கச் சார்புடன் செயற்படுகிறார்கள் என்பதை உறுதிப்படுத்துவது போல இந்தச் செய்தியைத் தணிக்கை செய்தனர். இதை நாம் அம்பலப்படுத்தினோம்.

தணிக்கை

அரசாங்கம் யுத்தத்தை மும்முரமாக நடாத்துவதை நோக்கமாகக் கொண்டு, அதற்குக் குந்தகமாக இருக்கக்கூடிய தகவல்களை தடைசெய்யும் நோக்குடன் கொண்டுவந்த இந்த அவசரகால விதிகள் அனைத்துப் பத்திரிகைகள் மற்றும் தொடர்பு சாதனங்களின் குரல்வளைகளை நசுக்கி விட்டுள்ளன. இந்தத் தடை நடவடிக்கைகள் ஒருபோதும் உருப்படியான இலாபங்கள் எதையும் தரப்போவதில்லை. நாளுக்கு நாள் யுத்த நிலமை மோசமடைந்து வருகிறது. யாழ்ப்பாணத்தில் உள்ள இராணுவத்தினர் மட்டுமல்லாமல் அங்குள்ள மக்களும் கூட அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாட்டுக்குள் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இலங்கையில் இருந்து வெளிவரும் பத்திரிகைகள் மற்றும் இலத்திரனியல் ஊடக செய்திகள் அனைத்தையும் தடை செய்த போதும்,

தணிக்கை

செய்தித் தடையினால் அரசாங்கம் எதிர்பார்க்கும் நல்வினைகள் எதுவும் கிடைக்கப் போவதில்லை என்று அமைச்சர் கதிர்காமரே ஒப்புக் கொண்டிருக்கிறார்.

தீர்மானத்தை தமது எதிர்கால நலன் குறித்து எடுக்க விரும்புகிறார்களோ அதை எடுக்க வாய்ப்பளிப்பதற்குப் பதில் அரசாங்கம் அவர்களை மந்தைகளாக நடாத்தி வருகிறது. அவர்களுக்காக தீர்மானம் எடுக்கும் உரிமையும் தகுதியும் தமக்கு இருப்பதாக கூறிக் கொண்டு நாட்டை அழிவுப் பாதையில் வழிநடாத்திக் கொண்டிருக்கிறது.

இந்த நாடு இன்னொரு மாபெரும் இரத்தக்களரியையும், இனக் கலவரத்தையும், அந்நிய ஆக்கிரமிப்பையும் எதிர்கொள்ளும் நிலை ஏற்பட்டால் அதற்கான முழுப் பொறுப்பையும் இந்த அரசாங்கமே ஏற்றாக வேண்டும். ஜனாதிபதி சந்திரிகா அவர்களுக்கு வாய்த்துள்ள சகாக்கள் அவருக்கு உண்மையைத் தெரிவிப்பவர்கள் அல்ல. எதைச் சொல்ல வேண்டுமோ அதை அவர்கள் சொல்வதில்லை. எதைச் சொன்னால் அவர் சந்தோசப்படுவாரோ அதை அவர்கள் சொல்கிறார்கள். இதன் மூலம் அவர்கள் ஜனாதிபதியை எந்த உண்மையையும் அறியாத ஒருவராக சிறைப்பிடித்து வைத்திருக்கிறார்கள். அரசாங்க சார்பு அமைச்சர் ஒருவரே ஜனாதிபதி இவ்வாறான தவறான தகவல்களால் போஷிக்கப்படுவதாக தனக்கு நெருங்கிய




தணிக்கை

தணிக்கை

அதற்கு இன்னமும் அவகாசம் இருக்கிறது.இதைத் தவற விடுவது, நாட்டை இன்னொரு தசாப்த காலத்திற்கு .ரத்ததக்களரியில் மிதக்க விடுவதற்கான பாசிச வெறியாக மட்டுமே இருக்க முடியும்.

நாசமறுப்பான்

நன்றி - நூலகத்திட்டம்



# தாயகம் மீண்ட முஸ்லிம்களின்

# சமகாலப் பிரச்சினைகளும் எதிர்கால சவால்களும்!

1990ஆம் ஆண்டு வடமாகாண முஸ்லிம்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டபோது தாம் மீண்டும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பும் வாய்ப்பு உண்டு என்ற எண்ணத்தில் சென்றனர். இவ்வாறான உணர்வு ஏற்பட பல காரணங்கள் இருந்தன. முதலில் தம்மை எந்த தமிழ் ஆயுதக் குழுக்களும் அதிலும் குறிப்பாக விடுதலைப் புலிகள் கூட்டு மொத்தமாக வெளியேற்றுவார்கள் என்று எதிர்பார்க்கவில்லை. காரணம், தமிழ் மக்களுடனும், ஆயுதக்குழுக்களுடனும் முஸ்லிம்களுடனான உறவு வெளியேற்றதுக்கு முந்திய காலத்தில் வழமைபோல் சீராகக் காணப்பட்டது. அதனால் பொருத்தமான சூழ்நிலை உருவாகும் போது வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் திரும்பவும் தாயகம் மீள்வார்கள் என்று வெளியேற்றப்பட்டவர்கள், தமிழ் மக்கள், ஆயுதக்குழுக்கள் ஆகிய எல்லோரும் எதிர்பார்த்தனர். அதனால்தான், சாதாரண யுத்த காலத்தில் வெளியேறும் மக்களைப்போல தமது பெறுமதியான பொருள்களைக்கூட தமிழ் அயலவர்களிடம் அடமானமாகக் கொடுத்துவிட்டு அல்லது இரகசியமாக வைத்துவிட்டு முஸ்லிம்கள் வெளியேறினர்.

### தாயகம் மீளல்

அநேக அகதி முஸ்லிகளைப் பொறுத்தவரையில் தமது சொந்த இடத்துக்கு பத்து வருடங்கள் வரை திரும்ப மாட்டோம் என்று எதிர்பார்க்கவில்லை. ஆனால், சிலர் இந்நிலைக்கு எதிர்மாறாக இல்லாமலும் இல்லை. தாம் சொந்த இடம் மீளவேண்டும் என்ற அவாவை பல முஸ்லிம்கள் சாத்தியப்படுத்தியும் காட்டினார்கள். வவுனியாவின் தெற்கு எல்லையோரத்திலும், மன்னார் தீவிலும் 1991ஆம் ஆண்டிலிருந்தே முஸ்லிம்கள் தாயகம் மீளல் நிகழ்வுகளை நடத்தி வந்தனர். ஆனால், துரதிஸ்டவசமாக இன்றுவரை அரசாங்கப் படைகளால் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களுக்கு மாத்திரமே முஸ்லிம்கள் திரும்ப்பக் கூடியதாக இருக்கின்றனர்.

1992ஆம் ஆண்டின் மொத்த வடமாகாண முஸ்லிம்களில் ஏறக்குறைய 6 சதவீதமானவர்கள் மன்னர் தீவிலும், வவுனியா மாவட்டத்திலும் மீளக் குடியேறினார்கள் என்று எமது தரவு விபரங்கள் குறிப்பிடுகின்றன. வடமாகாணத்திற்கு முஸ்லிம்கள் மீளச் செல்லும் போக்கு அன்றிலிருந்து படிப்படியாக அதிகரித்துக் கொண்டு செல்வதோடு 1994ஆம் ஆண்டு அரச விடுதலைப் புலிகள் பேச்சு வார்த்தை காலத்தில் வேகமாகவும் காணப்பட்டது. இப்பேச்சுவார்த்தையில் ஏற்பட்ட தோல்வி முஸ்லிம்களின் தாயகம் மீளும் எண்ணிக்கையை மட்டுமல்ல, நம்பிக்கையையும் சிதறடித்தது. ஆயினும், 1995ஆம் ஆண்டிற்குப் பின்னர் இலங்கை இராணுவம் எண்ணிக்கை ரீதியாகவும் பரப்பு ரீதியாகவும் வடமாகாணத்தில் தமது அதிகாரத்தை விஸ்தரித்தமை இடம்பெயர்ந்த தமிழ் மக்களுக்கு திரும்பவும் தமது சொந்த இடம் மீள்வதற்கு வாய்ப்பளித்தது. வடமாகாண முஸ்லிகள் சிலரும் இவ்வாய்ப்பைப் பயன்படுத்தத் தவறவில்லை. அண்மைக் காலத்தில் யாழ்ப்பாணத்திற்கும் முஸ்லிம்கள் சிலர் மீளக்கூடிய சூழ்நிலை இதனால் உருவாகியது.

### மீளச் சென்ற இடங்கள்


இன்று ஏறக்குறைய 15 சதவீதமான முஸ்லிம்கள் வடமாகாணத்தில் தமது சொந்த இடங்களில் வாழ்கின்றார்கள். இவர்களில் மிக அதிகமானவர்கள் வவுனியா மாவட்டத்தில் வாழ்கின்றனர். எமது ஆய்வின்படி இன்று வவுனியாவில் ஏறக்குறைய 24 கிராமங்களில் 1900 முஸ்லிம் குடும்பங்கள் வாழ்கின்றனர். அவ்வெண்ணிக்கை வவுனியா முஸ்லிம் சனத்தொகையின் 60 சதவீதத்தைக் காட்டுகின்றது. உண்மையில் இது ஒரு பெரிய வெற்றியாகும். இவ்வெற்றியை மேலும் பரவலாக்க முயற்சிகள் எடுக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

### வவுனியாவில் முஸ்லிம்கள் மீளக்குடியேறிய கிராமங்கள் பின்வருமாறு;

குறுமணகாடு, பட்டாணிச்சூர், பட்டக்காடு, வேப்பங்குளம், மாங்குளம் (நேரியகுளம்), சின்னசிப்பிக்குளம், வாழவைத்தகுளம், புதுக்குளம், பாவற்குளம், புதிய பழைய சூடுவெந்த புலவு, றமத் நகர், புளிதறித்தபுளியங்குளம், சாளம்பைக்குளம், வவுனியா நகர் சாலை, மங்களம், வாடிவளை புளியங்குளம், முதலியார்குளம், செட்டிகுளம், வீரபுரம், ரம்பைக்குளம், மஹாரம்பைக்குளம், அரபாநகர், ஹிஜ்ராபுரம் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

மன்னார் தீவைப் பொறுத்தவரையில் வெளியேற்றத்திற்கு முன்னர் முஸ்லிம்கள் வாழ்ந்த அதிகமான முஸ்லிம் செறிவுகளில் இன்று முஸ்லிம்கள் வாழ்கின்றனர். ஆனால் வெளியேற்றத்திற்கு முன்னைய காலத்துடன் ஒப்பிடும் போது எண்ணிக்கையில் மிகக் குறைவாக இருக்கின்றனர். மன்னார் தீவு மொத்த முஸ்லிம் சனத்தொகையில் ஏறக்குறைய 10% மட்டுமே தற்போது குடியேறியுள்ளனர். புதுக்குடியிருப்பு, எருக்கலம்பிட்டி, உப்புக்குளம், தாராபுரம், கரிசல், தலைமன்னார், காட்டாஸ்பத்திரி, மூர்வீதி ஆகியவை இன்று மீளக்குடியேறிய முஸ்லிம்கள் வாழ்கின்ற கிராமங்களாகும். ஏறக்குறைய 750 முஸ்லிம் குடும்பங்கள் மன்னார் தீவில் வாழ்கின்றனர். அதே நேரத்தில் வேறு பலர் தமது பொருளாதார நலன்களைப் பாதுகாப்பதற்காக தனியாகவும் வாழ்ந்து வருகின்றார்கள்.

1998ஆம் ஆண்டு சிறு அளவான




யாழ்ப்பாண நகர முஸ்லிம்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பினார்கள். இன்று யாழ்பாணத்தில் வாழ்பவர்களில் ஒரு குடும்பமும், 60 தனிப்பட்டவர்களும் உள்ளடங்குவர். பாதுகாப்பும் ஏனைய பல்வேறு காரணங்களினாலும் தமது குடும்பங்களோடு மீளக்குடியேற முடியாத நிலையில் மேற்குறிப்பிட்ட தனிப்பட்டவர்கள் காணப்படுகின்றனர்.

### எதிர் நோக்கும் பிரச்சினைகள்

வடக்கில் மீளக்குடியேறிய முஸ்லிம்கள் பல பிரச்சினைகளை தினமும் எதிர்நோக்கிய வண்ணம் இருக்கின்றனர். பொருளாதார, சமூக, சமய நடவடிக்கைகளுக்கான கட்டுப்பாடுகளும், உணவு, கல்வி, மருத்துவ அடிப்படை வசதிகள் இன்மை அல்லது பற்றாக்குறைப் பிரச்சினைகளும் இம்முஸ்லிம்கள் எதிர்நோக்குகின்ற சில பிரச்சினைகள் ஆகும். ஆனால், இப்பிரச்சினைகள் வடமாகாணத்தின் யுத்த பிரதேசங்களில் ஏனைய மக்களுக்கும் பொதுவானவைகளே என்பதையும் இங்கு குறிப்பிடவேண்டியது அவசியமாகும்.

வடமாகாணத்தில் மீளக்குடியேறிய முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் மேற்கூறிய பிரச்சினைகளோடு மேலும் பல தனித்துவமான பிரச்சினைகளையும் எதிர்நோக்கின்றார்கள் என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். இதில் முதன்மையானது மீள்குடியேறிய முஸ்லிம்கள் எதிர் நோக்கும் பாதுகாப்பின்மைப் பிரச்சினையாகும். உண்மையில் மீளக்குடியேறிய முஸ்லிம்களின் பாதுகாப்பு ரீதியான பயமுறுத்தல்கள் வருவது விடுதலைப் புலிகளிடமிருந்து அல்ல மாறாக அரசும், அரசசார்பற்ற குழுக்களிடமும் இருந்தே இவ்வச்சுறுத்தல் ஏற்பட்டு வருகின்றது. இப்பிரச்சினை குறிப்பாக வவுனியாவில் பொதுவாக அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அதேநேரத்தில முஸ்லிம் மீள்குடியேற்றக்காரர்கள் அரச அதிகாரிகளினால் மாற்றாந்தாய் பராமரிப்பும், புறக்கணிப்பிற்கும் உட்பட்டு வருகின்றமையும் மற்றுமோர் கவலைக்குரிய அம்சமாகும்.

தாயகம் மீண்ட வடக்கு முஸ்லிம்கள் மத்தியில் காணப்படும் மற்றுமொரு பொதுவான பிரச்சினை நாம் பாதுகாப்பு அற்ற சூழ்நிலையில் வாழ்கின்றோம் என்ற உணர்வாகும். இவ்வுணர்வு இம்மக்களுக்குப் பல்வேறு காரணங்களினால் ஏற்படுகின்றது. வடக்கில் மீளக்குடியேறியவர்களின் எண்ணிக்கைக் குறைவும், அவ்வாறு சிறு எண்ணிக்கையில் வாழ்பவர்களுக்கு அரசியல், சமூக ரீதியான பாதுகாப்பும், உத்தரவாதமின்மையும் அடையாளம் காணப்படும் பொதுவான பிரச்சினைகள் ஆகும். உதாரணமாக, மன்னார் தீவில் வாழ்கின்ற முஸ்லிம் பெற்றோர்கள் தமது குழந்தைகளின் கல்வி எதிர்காலத்தில் பாதிக்கப்படலாம் என்று அஞ்சுகின்றனர். காரணம், ஆசிரியர் இன்மையையும், மாணவர் எண்ணிக்கை குறைவையும் குறிப்பிடலாம். அதுபோலவே, யாழ்ப்பாண முஸ்லிம்கள் தமது பொருளாதார உரிமைகள் எதிர்காலத்தில் இழக்கப்படலாம் என்ற அச்சம் கொண்டவர்களாக இருக்கின்றனர்.

### கவனத்திற் கொள்ள வேண்டிய அம்சங்கள்

பல பாரிய சாவால்களுக்கு மத்தியிலும் சொந்த இடத்துக்கு மீளக்குடியேறிய வவுனியா, மன்னார் தீவு, யாழ்ப்பாண முஸ்லிம்கள் உண்மையில் பாராட்டப்பட வேண்டியவர்களாவர். ஆனால், எத்தகைய சவால்களின் மத்தியில் இம்மக்கள் சொந்த இடம் மீள்வதற்கு முன்னுரிமை கொடுத்து மீளக்குடியேறிக்காட்டினார்கள் என்ற அம்சம் பலரால் மதிக்கப்படாத நிலையில் இன்று காணப்படுகின்றது. பலவந்தமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களில் சிலர் துணிந்து மீளக்குடியேற முன்வந்தார்கள் என்பதை அரசோ, சர்வதேச சமூகமோ, அரசசார்பற்ற நிறுவனங்களோ உரிய முக்கியத்துவம் கொடுத்து நோக்கவில்லை. வடக்கு முஸ்லிம்களின் பலவந்த வெளியேற்றம் யுத்த காலத்தில் சாதாரணமாக நிகழும் இடப்பெயர்வு நிகழ்வாகக் கருதியதன் விளைவு இன்று சொந்த இடங்களில் வாழ்கின்ற வடக்கு முஸ்லிம்களின் இருப்பை மேலும் இஸ்திரப்படுத்தவோ, ஏனைய அகதி முஸ்லிம்கள் சொந்த இடம் மீள்வதை ஆர்வப்படுத்தவோ இல்லை.

இச்சந்தர்பத்தில் முஸ்லிம்களின் வெளியேற்றத்திற்குக் காரணமாக இருந்த விடுதலைப்புலிகள் முஸ்லிம்கள் மீள்குடியேறுவது பற்றி என்ன நிலைப்பாட்டைக் கொண்டுள்ளார்கள் என்பதை நோக்கவேண்டியதும் அவசியமாகும். சொந்த இடத்துக்கு வடமாகாண முஸ்லிம்கள் திரும்பி வந்ததை விடுதலைப்புலிகள் எதிர்மறையான கண்ணோட்டத்தில் நோக்கவில்லை. இது வரவேற்கத்தக்க ஓர் அம்சமாகும். விடுதலைப்புலிகளின் இந்நிலைப்பாடு மேலும் தொடரும் என்ற நம்பிக்கையும் மீளக்குடியேறிய முஸ்லிம்கள் மத்தியில் பரவலாகக் காணப்டுகின்றது. அதே நேரத்தில் வடமாகாண முஸ்லிம்கள் சொந்த இடங்களுக்கு மீளத் திரும்பி வரலாம் என்று இதுவரை விடுதலைப்புலிகள் வெளிப்டையாகக் கூறாமல் இருப்பது ஒரு மனவருத்தத்திற்குரிய விடயமாகும். உண்மையில் அவ்வாறான வெளிப்படையான உத்தரவாதமின்மை 85 சதவீதமான முஸ்லிம்களை தொடர்ந்தும் அகதி வாழ்க்கை வாழத் துண்டியதே தவிர சொந்த இடத்தில் மீளக்குடியேற ஆர்வப்படுத்தவில்லை என்பதை எல்லோரும் அறியவேண்டியது அவசியமாகும்.

அதனால், வடமாகாண முஸ்லிம்கள் தமது சொந்த இடத்தில் மீளக்குடியேறுவதற்கு சாத்தியமான எல்லா விதமான முயற்சிகளும் எடுக்கப்படவேண்டும். இம்முயற்சி தேசிய மட்ட பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வுகாணப்பட வேண்டியதாகும். அதில் அகதி முஸ்லிம்கள், விடுதலைப்புலிகள், அரசாங்கம், சர்வதேச சமூகம் பங்குபற்ற வேண்டியது அவசியமானதாகும்.

அதே நேரத்தில், வடமாகாணத்தில் இன்று பல பாரிய சவால்களுக்கு மத்தியில் மீள்குடியேறி வாழ்ந்து வருகின்ற முஸ்லிம்களின் பாதுகாப்பு, தனிப்பட்ட அத்துடன் இம்மக்களின் பொருளாதார, சமூக, சமய வாழ்க்கையை ஸ்திரப்டுத்துவதற்கான எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவேண்டும். வடக்கில் இன்று வாழ்கின்ற முஸ்லிம்களின் ஸ்திரத்தின் அளவே, தெற்கில் அகதிகளாக வாழ்கின்ற முஸ்லிம்களை சொந்த இடம் மீள்வதற்கான ஆர்வத்தின் அளவைத் தீர்மானிக்கக் கூடியதாகும்.

**குறிப்பு:**
**இக்கட்டுரை இவ்வருடம் ஏப்ரல் மாதம் 9ஆம் திகதி புத்தளம் நகரில் நடை பெற்ற 'புத்தளம் அகதிகளின் சமகாலப் பிரச்சினையும் எதிர்கால சாவால்களும்' என்ற ஒரு நாள் மாநாட்டில் கலந்துரையாடுவதற்காக புத்தளம் அகதி ஆய்வுக் குழுவால் தயாரிக்கப்பட்டது. இக்கட்டுரையில் சமர்பிக்கப்பட்ட விடயங்கள் சம்மந்தமாக விமர்சன ரீதியான கருத்துக்களை வாசகர்களிடம் இருந்து எதிர்பார்கின்றோம்.**

எஸ்.எச். ஹிஸ்புல்லா
(புத்தளம் அகதி ஆய்வுக்குழு சார்பாக)

நன்றி - நூலகத்திட்டம்



# அமுல்படுத்தப்பட்ட சட்டங்கள் குரூரமும் அச்சுறுத்தலும் மிக்கவை!

- றொகான் எதிரிசிங்க, விரிவுரையாளர், கொழும்பு பல்கலைக்கழகம்



**அவசரகால ... மூலின் கீழ் அரசு அமுலாக்கியுள்ள தணிக்கை விதிகள் பற்றிய உங்களது அபிப்பிராயம் யாது?**

அவசரகாலச் சட்ட ஆணையை கருத்திற் கொண்டால் தணிக்கை இதன் ஒரு பகுதியாகும். அண்மையில் அமுலாக்கப்பட்ட தணிக்கை உள்ளிட்ட சட்டங்கள், அனைத்தும் மிகவும் குரூரமானதும், மனித உரிமைகளுக்கு அச்சுறுத்தல் விடுப்பதும் ஆகும். நாட்டின் பாதுகாப்புக்கும், இறைமைக்கும் மிகவும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் தனி நபர் சுதந்திரத்திற்கு கட்டுப்பாடும், விசேடமான வரையறைகளையும் விடுக்கவுள்ள தேவையை நாம் அனைவரும் ஏற்றுக் கொள்கின்ற போதிலும், இங்கு மிக மோசமான பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளளன.

(1) இந்த அவசரகாலச் சட்ட திட்டத்திற்குள் உள்ளடக்கப்பட்டுள்ள விசேட ஒழுங்கமைப்புகள் நீதியானதா?

(2) இந்த ஒழுங்கமைப்புகள் உண்மையில் தற்போதைய சூழலுக்கு ஏற்புடையவையா? இல்லாவிட்டால், நிலைமையை மேலும் மோசமாக்குமா?

(3) இவற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள விதிகளை தேவையின்றி பயன்படுத்துவதால், தேசிய பாதுகாப்புடன் எந்தவித தொடர்பும் அற்ற வேறு ஜனநாயக, சமூக நிகழ்ச்சிகள் மற்றும் செயற்பாடுகளுக்கு தடை ஏற்படுமா?

இந்த அவசரகாலச் சட்ட விதிகள் 1988-1989 காலப்பகுதியில் ஐ.தே.க அரசினால் அமுலாக்கப்பட்ட சர்வாதிகார மற்றும் மக்களின் தனிநபர் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் குரூரமான



சட்டங்கள் உள்ளடக்கப்பட்ட அவசரகால விதிகளை அடிப்படையாகக் கொண்டது.

இவ்விதிகள் அதிகமாக விரிவுபடுத்தப்படாமல் எல்லாவற்றுக்கும் தணிக்கை என்ற தன்மையைக் கொண்டுள்ளன. இவ்விதிகள் எவ்வளவு தூரம் தெளிவற்றவை என ஆராயும் போது, இவ்விதியினால் அவசரகாலச் சூழலில் தணிக்கை செய்யப்படக் கூடியது மட்டுமன்றி சட்டரீதியான அரசியல் செயற்பாடுகளைக் கூடத் தடை செய்யலாம் என்பதை அவதானிக்கலாம். இந்த நிலைமை அமெரிக்க உயர்நீதிமன்றத்தினால் Over Breath எனக் குறிப்பிடப்படுகின்றது. இச்சட்ட சித்தாந்தம் ஜோசப் பெரேரா வழக்கில் இலங்கை உயர்நீதிமன்றத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன், இவ்வழக்கில் இவ்வாறான அவசரகாலச் சட்டவிதிகள் அரசியல் அமைப்புக்கு முரணானது எனத் தீர்மானிக்கப்பட்டது.

தனிநபர் சுதந்திரத்திற்கு தடை ஏற்படுத்தும், கட்டுப்படுத்தும் சட்டத்தை உருவாக்கும் போது அல்லது விதிகளை ஏற்படுத்தும் போது அச்சூழலுக்கு பொருந்தக் கூடிய வகையில் தேவையை மீறாதவாறு சட்டத்தை உருவாக்குதல் அரசின் பொறுப்பாகும். மேலும் செய்தித் தணிக்கை குறித்து கருத்திலெடுக்கப்பட வேண்டிய விடயம், 14வது விதிகள் போன்ற விதிகளினால், அவ்விதிகளில் உள்ள அனைத்தையும்-தேவைக்கு அதிகமாக - தணிக்கைக்குட்படுத்துவது சமூகத்தில் சமாதானத்தையும் மற்றும் ஒழுக்கத்தையும் ஏற்படுத்த உதவுமா என்பதாகும்.

பொதுமக்களிடமிருந்து உண்மையை மறைப்பதினால் வடக்கில் நடைபெறும் விடயங்கள் குறித்து யதார்த்த மற்ற கருத்துக்கள் கட்டியெழுப்பப்படுதல் மட்டுமே நிகழும்.

இதனால் உண்மை நிலைமையை விளங்கிக் கொள்ளாமல், வடக்கு பிரச்சினைக்கு தீர்வு யுத்தம் தான் என மக்கள் மத்தியில் தவறான அபிப்பிராயம் ஏற்படும்.

மேலும் வடக்குப் பிரச்சினை நீடிப்பதினால், அனைத்து இன மக்களையும் சேர்ந்த அப்பாவி மக்கள் துன்பப்படுகின்றனர் என பொது மக்களுக்கு விளங்காமல் போகலாம். இதன் மறுபக்கமாக அரசு செய்திகள் குறித்து மக்கள் மத்தியில் உள்ள நம்பிக்கையீனம், காரணமாக, அவர்கள் வதந்திகள் பொய்ச் செய்திகள் ஆகியவற்றை ஏற்கும் நிலைமை ஏற்படும். இவ்வாறு நடைபெற்றால், செய்தித் தணிக்கையை அமுல்படுத்தியதன் அடிப்படை நோக்கத்தை அடைய முடியாது போய் விடும்.

**எந்தவொரு நாட்டிலும் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்தைத் தடுக்க தணிக்கை அமுல்படுத்தப்படுவது நவீன ஜனநாயகத்தின்படி எவ்வளவு தூரம் நியாயமான செயலாக இருக்கும்?**

அவசரகால நிலைமை ஏற்பட்ட சூழலில் மனித உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பாக மிக மோசமான நெருக்கடிகள் பல ஏற்பட்டுள்ளன. இந்த நெருக்கடிகளுக்கு எளிமையான தீர்வுகள் இல்லை. ஆயினும், இது பற்றி மனித உரிமைகள் நிபுணர்கள் மற்றும் சர்வதேச சட்டத்தரணிகளின் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. தற்போது இது பற்றி பலதரப்பட்ட நியாயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. செய்தித் தணிக்கை குறித்து தற்போது மிகவும் வரவேற்பு பெற்றுள்ள கோட்பாடாக, தேசிய பாதுகாப்பு, கருத்துக்களை வெளியிடும் சுதந்திரம் மற்றும் தகவல்களைப் பெறுதல் குறித்து கட்டியெழுப்பப்பட்டுள்ள ஜொஹன்னஸ்பர்க் கோட்பாடு உள்ளது. இக் கோட்பாடு, தேசிய பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகள் குறித்து நிபுணத்துவம் பெற்ற நிபுணர்கள் பலரினதும் Article 19, International Centre against Censorship, The Centre for applied Legal Studies, University of Witwalesraud South Africa போன்ற நிறுவனங்களினதும் செயற்பாடுகளின் பெறுபேறாகும். ஜொஹன்னஸ்பர்க் உடன்படிக்கையின் 2 பி சரத்தில் இவ்வாறு குறிப்பிட்டப்பட்டுள்ளது. "தேசிய பாதுகாப்பை நோக்காகக் கொண்டு அமுலாக்கப்படும் செய்தித் தணிக்கையினால் உண்மையில் அரசாங்கத்திற்கு ஏற்படக் கூடிய வெட்கக் கேடான நிலைமைகள் மற்றும் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் தவறுகள் வெளிப்படுதல் தவிர்க்கப்படுதலே நடைபெறுமாயின், இவ்வாறான அவசரகாலச் சட்டவிதிகள் சட்டரீதியானதல்ல". இந்நிலைமையை விரிவாக விபரித்தால், இதன் தேவை அவசரகாலச் சட்ட விதிகள் தேசிய பாதுகாப்பு தொடர்பானவற்றுக்கு மட்டும் கட்டுப்படுத்தப்படல் வேண்டும் என்பதாகும். தற்போதைய அவசரகாலச் சட்ட விதிகள் ஜொஹன்னஸ்பர்க் உடன்படிக்கை மற்றும் சர்வதேச அடிப்படைகள் என்பவற்றுடன் ஒப்பிடும்போது மிக மோசமான குறைபாடுகள் மற்றும் பிரச்சினைகள் உள்ளவை என்பதைக் குறிப்பிடல் வேண்டும்.

**ஜனநாயக சமூகத்தில் அவசரகாலச் சட்டத்தின் கீழ் செய்தித் தணிக்கை அமுல் செய்யப்பட்டால் அதில் காணப்படவேண்டிய கட்டுப்பாடுகள் என்ன? தற்போதைய நிலைமையில் இத்தணிக்கையை நீங்கள் எவ்வாறு காண்கிறீர்கள்?**

நான் முதன்முதல் குறிப்பிட்ட தற்போதைய செய்தித் தணிக்கை ஆணையில் காணப்படும் உறுதியற்ற தன்மை மற்றும் பரந்தத தன்மையைத் தவிர, மிகவும் மோசமான தீமைகள் இதில் அடங்கியுள்ளன. இதில், அவசரகாலச் சட்ட விதி 8 உதாரணமாகும். இவ் விதியினால், தனிநபர் சொத்துக்கள், மற்றும் பொருட்கள் என்பனவற்றை அரசாங்கம் கைப்பற்றி விற்கும் உரிமை உள்ளது. அவசரகால நிலைமையின் கீழ் வாகனங்கள், அதாவது ஜீப் போன்ற வாகனங்களை அரசு பெற்று உபயோகப்படுத்தி விட்டு மீண்டும் அதன் உரிமையாளருக்கு வழங்குதலை என்னால் விளங்கிக் கொள்ள முடியும். ஆயினும், இவ்வாறான வாகனங்களை விற்பது மிகவும் அநீதியானது ஆகும். மேலும் இல 26 விதியின் படி ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தை இழிவுபடுத்தும் இழிவுபடுத்த முயற்சிக்கும் அல்லது ஜனாதிபதி மற்றும் அரசாங்கம் மீது துவேச மனப்பான்மையை தூண்டும் செய்திகள், வெளியீடுகள் பிரசுரிப்பது குற்றமாகும். இது மிகவும் தெளிவற்ற சொற்பதமாகும். எமது அரசியலமைப்பு தனிநபர் சுதந்திரத்தை இல்லாதொழிக்கும் வகையிலான சர்வதேச ஒப்புதல்களுக்கு எதிரான அரசியலமைப்பு என்ற வகையில் விமர்சனம் செய்ய ஒருவருக்கு உரிமை இல்லையா? மேலும் கூட்டம் நடாத்துவதற்கு எதிராக உள்ள தடையும், எந்தவொரு செய்தியையும், கட்டுரையையும் வெளியிட முன் அதை தணிக்கை செய்தல் என்பவற்றை நோக்கும்போது ஒரு நடுநிலைத்தன்மை இல்லாதது தெரிய வருகின்றது. அனைத்துக் கட்டுரைகளையும் வெளியிடுவதற்கு முன் தணிக்கை அதிகாரிகளிடம் சேர்ப்பிப்பது ஏன்? இந்த மிகவும் குரூரமான மற்றும் விரிவான அவசரகாலச் சட்ட விதிகள், மிக இலகுவாக சட்டரீதியான ஜனநாயகச் செயற்பாடுகளைத் தடுக்க பயன்படுத்தக் கூடியதுடன், இந்த விதிகளை செயற்படுத்துபவர்கள் தனது அதிகாரத்தை மிக இலகுவாக தவறான முறையில் பயன்படுத்தலாம். இதனால் இவ்வாறான சட்டவிதிகளை அமுலாக்கும் அரசாங்கம் குறித்து கேள்வியெழுப்பப்படலாம். அதிகாரிகளினால் அதிகாரங்கள் தவறாக பயன்படுத்தப்படுவதை தடுக்கும் முகமாக சிவில் சமூக அமைப்புகள், மனித உரிமைகள் அமைப்புகள் மற்றும் பிற ஆர்வலர்களும் இது குறித்து கவனமாக இருக்க வேண்டும். நான் அறிந்தவரையில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் உள்ளிட்ட பிற அவ்வாறன நிறுவனங்கள் பல தற்போதைய அவசரகாலச் சட்ட விதிகளின் சட்டத்தன்மை குறித்து கேள்வியெழுப்ப வாய்ப்புள்ளதா என ஆய்வு செய்து வருகின்றன. மேலும் நீதிமன்றத்தின் தீர்ப்பு குறித்தும் அதன் இறைமைத் தன்மை அல்லது சுயாதீனம் அற்றத் தன்மை குறித்தும் விமர்சனம் செய்ய மக்களுக்கு உரிமை உண்டு. இவ்வாறான விமர்சனங்கள் மற்றும் கலந்துரையாடல்களை ஒடுக்குவதினால் தேசிய பாதுகாப்பு எவ்வாறு உறுதிப்படுத்தப்படும்? நான் மேலே குறித்துக் காட்டியது நீதியற்றதும், மற்றும் அரசியல் அமைப்புக்கு முரணானது எனக் கூறக் கூடிய விதிகளில் உள்ள சில தீமைகளையே ஆகும்.

**அரசாங்கம் இத்தணிக்கையை அமுல்படுத்தியதன் மூலம் அதனை தமது அரசியல் நோக்கங்களுக்கு மற்றும் மாற்று அரசியல் கருத்துக்களை தடுக்க பயன்படுத்தியுள்ளதாகத் தெரிய வருகின்றது. இந்நிலைமை குறித்து உங்கள் கருத்து என்ன?**

தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் எந்தவொரு தணிக்கையும் இருக்கக் கூடாதென நான் கூற முயலவில்லை. இவ்வாறான சூழலில் இது தொடர்பாக செயற்பட விசேட அதிகாரம் வழங்கப்படுதலையும் நான் எதிர்க்கவில்லை. அவசரகாலச் சட்ட விதிகளை செயற்படுத்தும்போது கிரமமான விசாரணையை மேற்கொள்ள முயற்சிக்காதது பீதியை ஏற்படுத்துகின்றது. ஒருவரின் தனிப்பட்ட சொத்துக்களை கைப்பற்றி அவற்றை விற்பது தொடர்பாக குறிப்பிடப்படுகின்றதே ஒழிய இவ்விதிகளில் அதற்கான நட்ட ஈடு வழங்கப்படுதல் தொடர்பாக குறித்துக் காட்டப்படவில்லை. இத்தன்மையானது மிகவும் பயங்கரமானதாகும்.

**அரசினால் இந்தத் தணிக்கை ஆணை விடுக்கப்பட்டதன் பின்னர் பல சந்தர்ப்பங்களில் அது திருத்தத்திற்குள்ளானது. இத்தன்மையை நீங்கள் எவ்வாறு காண்கிறீகள்?**

சில மாற்றங்கள் நன்றே. 88-89 காலப்பகுதியில் அமுலாக்கப்பட்ட விதிகளில் காணப்பட்ட குரூரமான விதிகளில் ஒன்றில் இரண்டு நீக்கப்பட்டுள்ளது. இது சரியான செயல் என்று நான் ஏற்றுக் கொள்கிறேன். எனினும், இந்த விதி அமுலாக்கப்பட்ட கவனமற்ற பொறுப்பற்ற தன்மையும், விதிகள் அமுலாக்கப்பட்டு சில நாட்கள் வரை மக்கள் அதை விளங்காமற் போனமை போன்ற காரணங்கள் அடிப்படை சட்ட விதிகள் குறித்து கேள்வி எழுப்பியுள்ளது.

**இந்த தணிக்கையின் அதிகாரி என்ற வகையில் அரசின் செய்திப் பணிப்பாளருக்கு பதிலாக பொ.ஐ.முவின் அரசியல் செயற்பாட்டாளர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நிலைமையானது தேசிய நோக்கங்களைத் தவிர்ந்த கீழ்த்தரமான அரசியல் நோக்கங்களுக்கு பயன்படுத்தப்பட்டதாகவே தெரிய வருகின்றது. இந்த நிலையை நீங்கள் எப்படி விளக்கப்படுத்துவீர்கள்?**

இந்த வாரத்தின் முதல் பாகத்தில் ஜனாதிபதி மக்களுக்கு ஆற்றிய உரையில், அவசரகாலச் சட்ட விதிகளை நீதியான முறையில் அமுல்படுத்துவதாகவும், இவற்றை தெற்கின் ஜனநாயக செயற்பாடுகளை தடுக்கும் நோக்கத்துடன் மேற்கொள்ளவில்லையெனவும் உறுதிப்படுத்தினார். எனினும், இந்த உறுதிக்கு எதிராக அதன் முக்கியத்துவத்தை இழிவுபடுத்தி பொ.ஐ.மு உறுப்பினர்கள் அவசரகாலச் சட்ட விதிகளை மீறி அவசரகால விதிகளை அமுல்படுத்தும் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர். ஸ்ரீபத்தி சூரியஆராச்சி என்பவர் இவர்களில் பிரதானமானவர். அவர் பொ.ஐ.மு. அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட தேர்தல் கண்காணிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் தொடர்பூடக அமைப்பாளராக இருந்தார். மாகாண சபை மற்றும் ஜனாதிபதித் தேர்தலில் தேர்தல் ஊழல் கண்காணிப்பு நிலையம் போன்ற சுயாதீன தேர்தல் கண்காணிப்பு நிலையங்களின் உறுப்பினர்களை இம்சை செய்தவரும் இவரே ஆவார். தேர்தல் ஊழல் கண்காணிப்பு நிலையத்தினைச் சேர்ந்த பாக்கியசோதி சரவணமுத்து, வருண கருணாதிலக்க, அர்ஜுன பராக்கிரம ஆகியோருக்கு எதிராக வழக்கு தொடுக்க அவர் முயற்சித்ததுடன் இதன் விளைவாக தேர்தல் கண்காணிப்பு நிலையத்தின் அதிகாரிகள் தமது மனித உரிமைகளை மீறியதாக வழக்குத் தாக்கல் செய்ததுடன் சூரியஆராச்சி அவ் வழக்குகளின் குற்றம் சுமத்தப்பட்டவராக பெயர் குறிக்கப்பட்டுள்ளார். பேசும் மற்றும் கருத்துக்களை வெளியிடும் உரிமையை பாதுகாக்கும் முகமாக மிகவும் குறைந்தளவிலான கவனத்தை குவித்துள்ள பொ.ஐ.மு. அரசாங்கத்திற்கு சார்புள்ள நபராக உள்ள சூரிய ஆராச்சி போன்ற ஒரு நபருக்கு செய்தித் தணிக்கையை செயற்படுத்தும் பொறுப்பை வழங்கியது சரியானதா?

அவ்வாறான ஒருவரின் சுயா

⊃19

பொதுமக்களிடமிருந்து உண்மையை மறைப்பதினால் வடக்கில் நடைபெறும் விடயங்கள் குறித்து யதார்த்த மற்ற கருத்துக்கள் கட்டியெழுப்பப்படுதல் மட்டுமே நிகழும்.

இதனால் உண்மை நிலைமையை விளங்கிக் கொள்ளாமல், வடக்கு பிரச்சினைக்கு தீர்வு யுத்தம் தான் என மக்கள் மத்தியில் தவறான அபிப்பிராயம் ஏற்படும்.

நன்றி - நூலகத்திட்டம்



# மக்களுக்கு உரிமை இல்லையா?


இலங்கையில் யுத்த செய்தித் தணிக்கை யாப்பிற்கு அனுகூலமானது என உயர்நீதிமன்றம் கடந்த வாரம் தீர்ப்பளித்திருந்தது. சுனிலா அபேசேகரவினால், யுத்த செய்தித் தணிக்கையானது, அடிப்படை மனித உரிமைகளை மீறுகின்றது என உயர்நீதிமன்றத்துக்கு சமர்பிக்கப்பட்ட முறைப்பாடு உயர்நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்திற்கு யுத்த சேவையாற்ற சென்ற தனது மகனைத் தேடி அலையும், அவர் உயிரோடிருக்கிறாரா இல்லையா என்று அறியாது தவிக்கும் ஒரு தாய் தந்தையை, அத்தீர்ப்பு வழங்கப்பட்ட நாளில் சந்திக்க முடிந்தது. தனது மகன் இருந்த குறிப்பிட்ட ஒரு இராணுவ முகாமுக்கு என்ன நடந்தது என்பதை அறிய ஆவலாக அப் பெற்றோர்கள் காணப்பட்டனர். பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி செய்திகள் எவற்றிலிருந்தும் அம் முகாம் குறித்த செய்திகளைப் பெற முடியாமல் இருந்தது. அவர்கள் இவ்வாறு கூறினார்கள். "பத்திரிகையில் செய்திகளை பிரசுரிக்க முடியாது என்பதை நாம் அறிவோம். ஆனால் உண்மையான தகவல் தெரிந்தால் சொல்லுங்கள்." இவ்வாறு செய்தித் தணிக்கையால் பாதிக்கப்பட்டுள்ள பெற்றோர்கள் நாட்டில் குறைந்தது ஆயிரக்கணக்கில் உள்ளனர்.

யுத்த செய்தித் தணிக்கை காரணமாக யாழப்பாணத்தில் தமது உறவினர்கள் வாழும் பிரதேச நிலைமைகளை அறிந்து கொள்ள இயலாது கவலையுடன் இருக்கும் தமிழர்கள் பலர் உள்ளனர். குறிப்பிட்ட ஒரு பாடசாலைக்கு அண்மையில் மோதல், குறிப்பிட்ட ஒரு அலுவலகத்திற்கு அண்மையில் மோதல் ஆகிய வகையில் பரவும் வதந்திகளை மோப்பமிடுவதைத் தவிர உண்மையான தகவல்களை அவர்களால் பெற முடியாதுள்ளது. யாழ்ப்பாணத்திற்கான தொலைபேசித் தொடர்பு துண்டிக்கப்பட்டு இப்பொழுது பல வாரங்களாகுகின்றன. மன்னார் வரையிலுமே தொலைபேசித் தொடர்பு காணப்படுகின்றது.

யுத்த நிலைமையின் கீழ் மேலதிகமாக 12 ஆயிரம் கோடி ரூபாய்களை ஈட்டிக் கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. யுத்த வரி 5.5லிருந்து 6.5 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த வரிச் சுமை நேரடியாக மக்களையே பாதிக்கும். இவ்வாறு ஈட்டப்படும் பணம் நவீன ஆயுதங்களைக் கொள்வனவு செய்ய பயன்படுத்தப்படும் என அரசாங்கம் குறிப்பிட்டிருந்தது. யுத்த தளபாடங்களை கொள்வனவு செய்யவென "ஒரு சாரார்" உள்ளனர் என ஜனாதிபதி அண்மையில் பகிரங்கமாக தெரிவித்திருந்தார். எனினும், இப்பொழுது அந்த "ஒரு சாரார்" பற்றி எழுதுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

யத்த கள நிலைமைகள் குறித்து அரசாங்கத்தின் இராணுவப் பேச்சாளர் கூறுவதை விடுத்து வேறு தகவல்களை எழுதுவது தடை செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக, புலிகளின்- அதாவது யுத்தத்தின் மற்ற தரப்பாரின் தகவல்களை தெரிந்து கொள்ள இந்நாட்டு மக்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. புலிகளின் தகவல்களை அறிந்து கொள்ள உள்ள ஒரேயொரு வாய்ப்பு, அரசாங்கத்தின் இராணுவப் பேச்சாளர் இது பற்றி எதுவும் கூறினால் மட்டுமே. யுத்தத்துடன் தொடர்புடைய இரு தரப்பினரினதும் தகவல்களை அறிந்து கொள்ளாது யுத்த களத்தில் என்ன



தான் நடைபெறுகின்றது என்பது பற்றி மக்கள் சரியான தீர்மானத்திற்கு எப்படி வருவார்கள்? யுத்தம் பற்றி புலிகள் வெளியிடும் அறிக்கைகளை அறிவதிலிருந்து இந்நாட்டு மக்களை விலக்கி வைப்பது ஜனநாயகத்தைக் கட்டுப்படுத்தும் செயலா இல்லையா? அரசாங்கம் யுத்தம் பற்றியும், சமாதானப் பேச்சுவார்த்தை பற்றியும் அறிக்கைகளை வெளியிடுகின்றது. இவை பிரதான செய்திகளாகுகின்றன. இவ்வாறான அறிக்கைக்கு புலிகள் பதிலளித்தால், அதனை அறிந்து கொள்ளும் உரிமை இந்நாட்டு மக்களுக்கு இல்லையா?

இராணுவப் பேச்சாளர்கள் கூறுவதை மட்டும் நேரடியாக ஏற்றுக் கொள்ள நேர்ந்தால் இந்நாட்டு மக்கள் கற்பனை உலகத்தில் வாழ வேண்டியேற்படலாம். 1999ல் இராணுவப் பேச்சாளரின் உத்தியோகபூர்வ பேச்சுக்கள் 300ன்படி, அவ்வருடத்தில் கொல்லப்பட்ட புலிகளின் எண்ணிக்கை 3932. அரச படையினர் 719 பேர் இறந்துள்ளனர். அதாவது கிட்டத்தட்ட 4000 புலிகள் கொல்லப்பட்டுள்ளனர். இதன்படி 10,000க்கு அதிகமான புலிப் போராளிகள் காயமடைந்திருக்க வேண்டும். தற்போது யுத்த செய்தித் தணிக்கையை ஆதரிப்பவர்கள் இந்தப் போலியான தரவுகளை ஏற்றுக் கொள்ளும்படி கூறுகிறார்கள்.

இதேபோல் பிறிதொரு விளைவுகளை எடுத்துக் காட்டுதல் அவசியம். அரச தொலைக்காட்சியில் நீண்ட கலந்துரையாடல் ஒன்றில் கலந்துகொண்ட அமைச்சர் மங்கள சமரவீர, பிரபாகரனை சுட்டிக் காட்டி, கடந்த 5 வருடங்களில் புலிகள் அமைப்பைச் சேர்ந்த பலர் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவித்திருந்தார். அவர், ஐ.தே.க வை விட சிறப்பான முறையில் தம் அரசாங்கம் யுத்தம் செய்துள்ளமையை நிரூபிக்க முயன்றார். அவர் கூறியதும் சரிதான். ஆனால் உண்மையில் அரைப் பங்கு. 1994 மற்றும் 1999 காலப்பகுதியில் புலிப் போராளிகள் 9558 பேர் இறந்துள்ளதாக புலிகள் தமது அறிக்கைகளில் ஒப்புக் கொண்டுள்ளனர். கடந்த 17 வருட காலப்பகுதியில் கொல்லப்பட்ட புலிகளின் எண்ணிக்கை 14,355. அதாவது கடந்த 05 வருட காலப்பகுதியில், கடந்த 12 வருடத்தை விட அதிகமான புலிகள் கொல்லப்பட்டுள்ளனர். அமைச்சர் மங்கள சமரவீர அதில் சிறு தொகையையே குறிப்பிட்டிருந்தார். 1981 தொடக்கம் இறந்த அரச படையினர் எண்ணிக்கை 10,688. காணாமல் போன ஆயிரக்கணக்கானோர் இதில் உள்ளடக்கப்படவில்லை. சில வேளை, முல்லைத்தீவில் இறந்த ஆயிரத்துக்கு அதிகமான சிப்பாய்கள் காணாமல் போனோர் பட்டியலில் சேர்க்கப்பட்டிருப்பர். இந்த 10,688ல் 6,216 பேர் 1994 - 1999 காலப்பகுதியில் இறந்துள்ளனர். அதாவது கடந்த 13 வருட காலப்பகுதியை விட கடந்த 5 வருட காலப்பகுதியில் அதிகமான படையினர் கொல்லப்பட்டுள்ளனர். கடந்த 5 வருட காலப்பகுதியில் முல்லைத்தீவு, கிளிநொச்சி, வன்னி தாக்குதல்களில் காணாமல் போன படையினர் எண்ணிக்கை அதிகமாகும். யுத்தத்தின் ஆரம்பத்தில் இருந்து தொடர்ச்சியாக யுத்த செய்தித் தணிக்கை காணப்பட்டிருந்தால் இன்று நாம் இந்தத் தகவல்களை அறிந்து கொள்ள வாய்ப்பிருந்திருக்காது. அரச தொலைக்காட்சி தணிக்கை காரணமாக சமரவீரவின் இத்தகவல்களை பிறருக்கு கூறமுடியாதுள்ளது.

யுத்த செய்தித் தணிக்கை காரணமாக மக்களின் மூளை சலவை செய்யப்படுகின்றது. இவ்வாறு மூளைச்சலவை செய்யப்பட்டு யுத்த வெறியினால் இந்நாட்டு மக்கள் மனங்களை நிரப்புதலையே யுத்த செய்தி தணிக்கை செய்கின்றது. இந்த யுத்த வெறியின் இரையாக சமரவீரவும் அகப்பட வாய்ப்புள்ளது.

சமரவீர யுத்த செய்தித் தணிக்கையை நியாயப்படுத்தும் அதேவேளை கதிர்காமர் அது தேவையற்றது என்கிறார். ஒரு வேளை அவருக்கு யுத்த வெறியின் பயங்கரத்தன்மை விளங்கியிருக்கக் கூடும். அதுமட்டுமன்றி யுத்த செய்தித் தணிக்கையை நாங்கள் கேட்கவில்லையென இராணுவத் தளபதி ஸ்ரீலால் வீரசூரிய பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார். அப்படியாயின், யுத்த செய்தித் தணிக்கை யாரின் தேவை? தணிக்கையை அமுல்படுத்தும் போது அரசாங்கம் யுத்த இரகசியங்களை பேணுவதற்காகவே தணிக்கை என குறிப்பிட்டிருந்தது. ஆனால் அரசாங்கப் படைகள் யுத்த செய்தித் தணிக்கை அமுலில் உள்ள போதே பின்னடைவுகளை சந்தித்தன. யுத்த செய்தித் தணிக்கையினால் படையினருக்கு ஏற்பட்ட நன்மை எதுவும் இல்லை. யுத்த வெறியர்களுக்கும், அரசியல்வாதிகளுக்கும் மட்டுமே நன்மை விளைந்துள்ளது எனலாம்.

- சுனந்த தேசப்ரிய

---

விவாதத்திற்காக

முஸ்லிம்கள்:

# வேறான சமயத்தைப் பின்பற்றும் தமிழர்கள்?

"நான் ஒரு முஸ்லிமாக இருந்துகொண்டு இந்த நாட்டைப் பெரும்பான்மையினரான சிங்களவர் ஆள வேண்டும் என்று சொல்வதற்குப் பயப்படவில்லை. அவர்கள் ஆளட்டும். நாங்கள் இப்பணியில் அவர்களுக்கு உதவுவோம்" - (1939 சட்டசபையில் மார்கன் மார்கார் கூறியது. ஹன்சார்ட், பத்தி 843)

இக்காலமானது இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முந்திய, தேசிய உணர்வுகள் மேலெழுந்து கொண்டிருந்த, முஸ்லிம்கள் சுதந்திரம் பெற்ற இஸ்லாமிய அரசொன்று பற்றிக் கனவுகண்டுகொண்டிருந்த காலமாகும்.



இருந்த போதும் நாசிக் பறீட் போன்ற பிறரின் ஆதரவோடு மார்கான் மார்கார் தமது மக்களை நாட்டில் சமாதானமும் வளமும் ஏற்படும் விதத்தில் ஆற்றுப்படுத்தினார்.

இன்றைய உள்நாட்டுப் போரில் பாகிஸ்தான் தலையிடுவதை அடுத்து மீண்டும் முன்னெடுக்கப்பட்டுள்ள முஸ்லிம் தேசியவாதமானது, இதில் தலையிட்டுள்ள அடுத்த ஒரே நாடான இஸ்ரவேலால் குழம்பிப் போயுள்ளது. சீனா இலங்கையில் மேற்கு நாடுகளின் தலையீட்டுக்கு எதிராக எச்சரிக்கை விடுத்திருக்கும் அதேவேளை, இந்தியா - சிறியகால நன்மைகள் கருதி அமைதிகாக்கிறது. இஸ்ரேலின் தலையீடு இலங்கைக்கு புதியதான ஒன்றல்ல. 1986ல் ஜயவர்தனாவின் ஆட்சி உதவிகேட்ட போது அது இஸ்ரேலால் வழங்கப்பட்டிருக்கிறது. விக்ரர் ஒஸ்ட் றோவஸ்கியின் (VICTOR OSTRVSKY) கூற்றுப்படி, ஒரே மதிலால் பிரிக்கப்பட்ட ஒருபகுதியில் அவர்கள் சிங்கள குரங்குகளுக்கும் மறுபகுதியில் தமிழ்புலிகளுக்கும் ஏககாலத்தில் பயிற்சி அளித்தனர்.

ஆனால், நாம் இப்பொழுது தொடர்பு கொள்ளும் இஸ்ரேலானது 'புதிய'து மட்டுமல்ல மத்திய கிழக்கு இஸ்லாமிய அரசுகளாலேயே அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு நாடாகும். அவர்கள் அண்மையில் இந்தியாவோடும் சீனாவோடும் தமது அரசியல், இராணுவத் தொடர்புகளை உறுதிப்படுத்திக் கொண்டவர்கள். அவர்கள் ஆப்கானிஸ்தான் ஊடாக ஆபிரிக்காவில் உள்ள வெறிபிடித்த முஸ்லிம் நாடுகளுக்குப் பரவிவரும் முஸ்லிம் அடிப்படை வாதத்தை களைவதற்கு தம்மை அர்ப்பணித்தவர்கள். இப்பின்னணிகளின் அடிப்படையில் பார்க்கும் போது இஸ்ரவேல் இலங்கைக்கு ஒரு முக்கியமான கூட்டாளியாகும்.

எம்.எச்.எம் பௌஃசி க்கும் அலவி மௌலானாவுக்கும் நமது தேசம் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளது. அவர்கள் பொறுப்பு வாய்ந்த தலைவர்களாக, இஸ்ரேலை ஏற்றுக்கொண்டதோடு, இஸ்ரேலுக்கெதிராக முஸ்லிம்களிடையே உணர்வுக்களைக் கிளப்புவோருக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கவும் முன்வந்துள்ளனர். உதாரணமாக, முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி இச்சந்தர்ப்பத்தில் விடுதலைப் புலிகள் போல் சாபிஸ்தான் அல்லது நஸாறிஸ்தானை பிரகடனப்படுத்துவதற்கான காலம் வந்துவிட்டதாக கூறிக்கொண்டு தன்னைத் தயார்ப்படுத்துகிறது.

வரலாறு தன்னையே திருப்பித்தருகிறது. 1889ல் முஸ்லிம்கள் தமக்கு தனியான ஆசனம் வேண்மென்று கிளர்ச்சி செய்தபோது, முஸ்லிம்கள் வேறு சமயத்தைப் பின்பற்றும் இனரீதியில் 'தமிழர்கள்' என்று பொன்னம்பலம் இராமநாதன் இதனைக் கடுமையாக எதிர்த்தார். இவ் எதிர்ப்புக்கு மத்தியிலும் அன்று முஸ்லிம்கள் பாராளுமன்ற ஆசனத்தை பெறுவதில் வெற்றி பெற்றார்கள். முஸ்லிம் லீக் இந்தியாவில் உருவாக்கப்பட்டபோது மீண்டும் முஸ்லிம்களின் இன உணர்வு, தமிழர்களின் இனத்துவேச செயற்பாட்டினால் தூண்டப்பட்டது. சாஃபிஸ்தான் நஸாறிஸ்தான் ஆகியவற்றுக்கான அத்திவாரம் அப்போது போடப்பட்டது. மலாய இனத்தினருக்கும் முஸ்லிம் (MOOR) இனத்திற்குமிடையே இருந்த வேற்றுமைகள் இதற்கு மேலும் தூபமிட்டது. சிங்கள எதிர்ப்பு சுலோகங்களை முன்வைத்த ரி.பி.ஜயா (T.B.JAYAH) தமிழர்கள் மாதிரியே இனத்துவேசியாக இருந்தார். எவ்வாறாயினும் வீரமிக்க மார்கான் மார்க்கார் போன்ற தலைவர்கள் இத்தகைய உணர்வுகளை மேலெழாது செய்து முஸ்லிம் சமூகத்தை சிங்களவர்களோடு ஒத்துழைக்க வழிவகுத்தார். தமிழர்கள் இனத்துவேசத்தோடு முஸ்லிம்களை தாக்கியதற்குப் பதிலாக முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபிக்கப்படும் வரை இது தொடர்ந்தது. முஸ்லிம் காங்கிரஸ் அடிப்படையில் இது தமிழ் இனவாதிகளுக்கு எதிராக உருவாக்கப்பட்டதே.

பாகிஸ்தான், இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் வாழும் முஸ்லிம்களோடு ஒப்பிடும் போது இலங்கையில் வாழும் முஸ்லிம்களின் பெரும்பான்மையோரின் வாழ்க்கைத்தரம் உயர்வானது என்பதை முஸ்லிம்கள் அறிவார்கள். அவர்களின் வருமானம், எழுத்தறிவு, கல்வி, பெண்களின் உரிமை ஆகிய அனைத்தும் உயர்வானது. இலங்கையில் மிக வேகமாக வளரும் சமயமாக இருப்பது இஸ்லாமே. வேறு சமயங்களை இஸ்லாமிய நாடுகள் அனுமதிக்காது என்பது குறிப்பிடத்தக்கது.

தமது எதிர்காலம் வேறுபடுத்த முடியாதபடி பெரும்பான்மையினர் ஆளுவதற்கும் அவர்களைப் பலப்படுத்துவதற்கும் ஒத்துழைப்பதிலேயே தங்கியிருக்கிறது என்பதை முஸ்லிம்கள் அறிவார்கள்.

சௌமியமூர்த்தி தொண்டமான் தனது "தேயிலையும் அரசியலும்" என்ற சுயசரிதை நூலில், சிங்களப் பெரும்பான்மையினரோடு முஸ்லிம்கள் ஒத்துழைத்தால் பெரியளவு முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள் என்றும் பிரிவினைவாத செல்வநாயகத்தை பின்பற்றியதால் தமிழர்கள் எல்லாவற்றையும் இழந்துவிட்டார்கள் என்றும் கூறியுள்ளார். தொண்டமானைப் பொறுத்தளவில் பின்பற்றுவதற்குரிய மாதிரிகளாக இருப்பவர்கள் மார்கான் மார்கார், நாளிக் பரீட், பதுதீன் முகம்மதுத போன்றோரே ஒழிய செல்வநாயகம் அமிர்தலிங்கம் ஆகியோர் அல்ல.

இந்த நிலையிலிருந்து முஸ்லிம்கள் விலகி, தனிநாடு ஒன்றைக் கோரி போராடும் நிலைக்கு இனிப்போவார்களா? முதலாவதாக முஸ்லிம்கள் வடக்கிலும் கிழக்கிலும் இருந்து விரட்டப்பட்டது தமிழர்களாலேயே ஒழிய சிங்களவர்களால் அல்ல என்பதை நினைவு படுத்த வேண்டும். பிரபாகரன் பலமுற்றால் வடக்கு முஸ்லிம்களுக்கு இடம் கொடுக்கப்படாமலேயே போய்விடும். அத்துடன் இது நிற்காது. திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய இடங்களில் வாழும் முஸ்லிம்களுக்கும், பிரபாகரனின் தனி ஈழக் கோரிக்கை ஆபத்தாகவே முடியும். அவன் மிகத்தீவிரமான முஸ்லிம் எதிர்ப்பாளன். இதற்கு காத்தான்குடி சம்மாந்துறை கொலைகள் உதாரணம்.

**கும்பகர்ண**

**நன்றி–சண்டே ரைம்ஸ்**

நன்றி - நூலகத்திட்டம்



# 1999 யுத்தத்தின் போக்கு ஒரு கணக்கெடுப்பும் சில குறிப்புகளும்

யுத்தமும்; யதார்த்தமும்

### 3.1 யுத்தத்தின் பார்வை

1999ம் ஆண்டும் இலங்கை அரசாங்கமும், புலிகளும் யுத்தத்தைத் தத்தம் நியாயங்களாக மேற்கொண்டு வந்தன. இலங்கை அரசாங்கத்தின் நியாயத்தின்படி, கொலைவெறி கொண்ட பாஸிசவாதப் புலிகள்



விடுதலைப்புலிகள்

இயக்கத்திடமிருந்து தமிழ் மக்களை விடுவிக்கவும், மற்றும் சிங்கள, முஸ்லிம் மக்களைக் காப்பாற்றவும் யுத்தம் நடாத்தப்பட்டது. புலிகளின் நியாயத்தின்படி யுத்தமானது, சிங்கள பௌத்த மேலாதிக்கத்திலிருந்து விடுபட்டுச் சுதந்திரமான அரசொன்றைப் பெறுவதற்கு மேற்கொள்ளப்படும் விடுதலைப் போராகும். தமிழ் மக்களின் தாயகத்திலிருந்து ஆக்கிரமிப்பாளர்களான சிங்கள அரச படைகளை விரட்டி அடித்தல் புலிகளின் யுத்த இலக்காகும்.

யுத்தத்தில் 90வீதம் வெற்றி கண்டுள்ளதாக வருடம் முழுவதும் இலங்கை அரசாங்கத்தின் யுத்த பிரதானிகள் கூறிவந்தனர். புலிகளை யுத்தத்தில் தோற்கடிக்கும் காலம் வெகு தொலைவில் இல்லை என அவர்கள் கூறினர். அதே போல் புலிகளும், பிறக்கும் 3வது சகத்திர ஆண்டுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தை விடுவிப்போம் எனக் கூறி இருந்தனர். சிங்களப் படைகளை ஈழ மண்ணிலிருந்து தமது படைகளால் விரட்டியடிக்க முடியுமெனப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் 1999 நவம்பர் 27 மாவீரர் தின உரையில் குறிப்பிட்டிருந்தார்.

யுத்தம் குறித்து இவ்விரு தரப்பினரது நியாயங்கள் எவ்வளவு தூரம் பெரும்பாலான சிங்கள, தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளப் பட்டது என்பது தெரியவில்லை. ஆயினும், யுத்த வெற்றி குறித்து நம்பிக்கை கொள்ளும் அக்கருத்தியலுக்கு ஆதரவு நல்கும் தொழில் சார் குழுக்கள், தொடர்பூடகத் தலைவர்கள், மக்கட் பிரிவினர் நாளுக்கு நாள் இரு தரப்பிலும் அதிகரித்து வருகின்றமையைக் காணக் கூடியதாக உள்ளது.

### 3.2. யுத்தத்தின் யதார்த்தம்

எனினும், யுத்தத்தின் யதார்த்தமாக 1999ம் ஆண்டில் மேற்கூறப்பட்ட விடயங்களுக்கு முற்றிலும் மாறான விடயங்களையே காணக் கூடியதாக இருந்தது. யுத்தத்தின் வெற்றி, தோல்வி இரு தரப்பினரிடையேயும் மாறிமாறி நிகழ்ந்தது. மிக மோசமான யுத்தத் தோல்விகளின் பின்னரும் இலங்கை அரச படைகளும், புலிகளும் மீண்டும் பாரிய யுத்த நடவடிக்கைகளை நோக்கிச் சென்றமையை அவதானிக்கலாம். கடந்த வருடங்கள் முழுவதும் காணப்பட்ட இந்த நிலைமை 1999ம் ஆண்டும் மீண்டும் ஏற்பட்டது.

1999ம் ஆண்டு ஜனவரி 01ம் திகதி இலங்கை அரசுப் படைகள் வன்னியில் மேற்கொண்ட "ரிவிபல" இராணுவ நடவடிக்கையுடன் 99ம் ஆண்டு பிறந்தது. இந்த இராணுவ நடவடிக்கை 1999ம் செப்டெம்பர் மாதத்தில் இடைநிறுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கையின் உப நடவடிக்கையாக இது இடம் பெற்றது. அதன் பின் 1999 மார்ச் 06ம் திகதி "ரணகோஷ - 01" நடவடிக்கை ஆரம்பமானது. வவுனியாவிலிருந்து, மன்னார் நோக்கி அணிவகுத்த ரணகோச 02, 03, 04 மற்றும் 05 முறையே மார்ச் 19, மே 9, ஜூன் 10 மற்றும் ஜூன் 12ம் திகதிகளில் மேற்கொள்ளப்பட்டது. வவுனியா, மன்னார் பாதையைக் கைப்பறவும், இந்த இராணுவ நடவடிக்கையால் முடிந்தது. ரணகோஷ - 05 இராணுவ நடவடிக்கையினால் 1800 கி. மீ. பிரதேசம் அரச கட்டுப்பாட்டுக்குள் வந்தது. ரணகோஷ - 05ஐத் தவிர்ந்த பிற நடவடிக்கைகளில் புலிகள் குறிப்பிடத்தக்க வகையில் எதிர்ப்பை வெளிக்காட்டவில்லை. இலங்கை அரசாங்கத்தின் யுத்தத் தலைவர்கள் ரணகோஷ நடவடிக்கை, புலிகளைப் பின்னடையச் செய்து விட்டது எனக் குறிப்பிட்டனர்.

இராணுவ நடவடிக்கைகள் அனைத்தும் மாகாண சபைத் தேர்தலில் சிங்கள வாக்குகளைப் பெறுவதற்காக மேற்கொள்ளப்பட்டவையென முன்னாள் விமானப் படைத் தளபதியான எயார் வைஸ் மார்ஷல் ஹரி குணதிலக்க குற்றம் சாட்டினார். ரணகோஷ நடவடிக்கைக்குப் பதிலாக 1999ம் ஆண்டில் கிழக்கு மாகாணத்தில் "சண்டமாருத்தய" மற்றும் "செடபஹர" என்ற பெயர்களில் இரண்டு இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்நடவடிக்கைகள் நிலைமைகளை மாற்றாது இருந்ததுடன், இதனால் அரசுக்கு நன்மையோ, புலிகளுக்குத் தீமையோ ஏற்படவில்லை.

வருடம் முழுவதுமாகத் தந்திரோபாயமான கெரில்லாத் தாக்குதல்களை மட்டும் மேற்கொண்டு வந்த புலிகள், நவம்பர் 02ல் ஓயாத அலைகள் - 03 என்ற யுத்த நடவடிக்கையை மேற்கொண்டனர். ஒரு வாரத்தில் இலங்கை அரச படைகளைச் சேர்ந்த 20,000 பேரைப் பின்னடைவு செய்து விட்டு ஜயசிக்குறு நடவடிக்கையினால் கைப்பற்றப்பட்ட 1500 கி. மீ. பிரதேசத்தை மீண்டும் முழுமையாகக் கைப்பற்றிக் கொள்ளும் முயற்சியில் புலிகள் வெற்றி கண்டனர். வவுனியாவிலிருந்து, யாழை. நோக்கிய தரை மார்க்கப் பாதையைத் திறக்கவென, 1997ம் ஆண்டு தொடக்கம் 18 மாதங்களாக, நாள் ஒன்றுக்கு ரூபா 145 மில்லியன் செலவு செய்யப்பட்டு மேற்கொள்ளப்பட்ட ஜயசிக்குறு நடவடிக்கையில் அரச படைகளைச் சேர்ந்தவர்கள் 2000க்கு அதிகமானவர்கள் மரணமுற்றதுடன், 4000க்கும் அதிகமானோர் காயமடைந்தனர். இவ்வளவு தியாகங்களுடன் மேற்கொள்ளப்பட்ட ஜயசிக்குறு நடவடிக்கை தோல்வியடைந்தமை, இராணுவத்தினர்களிடையே உளவியல் தாக்கத்தை ஏற்படுத்தியதுடன், ஆயிரக்கணக்கான சிப்பாய்கள் குழப்பத்தை ஏற்படுத்தக்கூடிய நிலைமைக்கு ஆளாகினர். புலிகளுக்கு எதிரான யுத்தமொன்றில் அரச படையினரிடையே ஏற்பட்ட பிரதான பாரியளவான குழப்பநிலை இதுவாகும். சிப்பாய்கள், ஆயுதங்களை, சீருடைகளைக் கைவிட்டுவிட்டு இராணுவத்திலிருந்து தப்பியோடினர். வருட இறுதியில் தப்பியோடியவர்களின் எண்ணிக்கை 25,000 ஆகக் காணப்பட்டதுடன், நாடு முழுவதும் மறைந்திருந்த 20,000 பேர் இராணுவத்தைச் சேர்ந்தவர்களாவர். இவ்வாறு தப்பியோடியுள்ள சிப்பாய்களுக்கு வேலைவாய்ப்பளித்தல் தடைசெய்யப்பட்டுள்ளதுடன், அவர்களுக்குத் தொழில் வழங்குதல் தண்டனை பெறக் கூடிய குற்றமாகும்.

1999 ஜூலை 25ம் திகதி திருகோணமலை துறைமுகத்தில் இலங்கை அரசாங்கத்தின் "நிக்கோ என்டியுரன்ட்" எனும் பயணிகள் கப்பலை வெடிவைத்துத் தகர்த்த புலிகள், டிசெம்பர் 14ம் திகதி விமானப் படையின் எம். ஐ. 24 ரக வானூர்தியைச் சுட்டு வீழ்த்தினர். ஓயாத அலைகள் நடவடிக்கை - 03 நடவடிக்கையின் மூலம் சாதாரண ரக ஆயுதங்களுடன் பீரங்கிகள் பலவற்றையும், செய்திப் பரிமாற்றக் கருவிகள் பலவற்றையும் புலிகள் கைப்பற்றினர்.

1999 செப்டம்பர் 13ம் திகதி இலங்கை அரசாங்கம் லேசர் கதிர்களினால் இயங்கக் கூடிய குண்டு வகைகள் மற்றும் இலத்திரனியல் யுத்தக் கருவிகளைப் பெற்றுக்கொள்ளச் சர்வதேச ரீதியில் டென்டர் அழைப்பாணையை விடுத்தது. விமானப்படை, கடற்படை ஆகியவற்றுக்கு அதி நவீன, அதிக விலை மதிப்புள்ள யுத்த உபகரணங்களைக் கொள்வனவு செய்து கொள்ள இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளமையை இந்நடவடிக்கை தெளிவாகக் காட்டியது.

1999 ஆண்டு முழுவதும் இலங்கை இராணுவப் படை ஆள்பற்றாக்குறைக்கு முகம் கொடுத்தது. கவர்ச்சிகரமான ஊதிய நலன்கள், இராணுவம் என்ற கௌரவங்களை முன்வைத்து மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித் திட்டம் இராணுவத்துக்கு ஆள் சேர்ப்பதில் வெற்றியளிக்கவில்லை. 1999 ஏப்ரல் மாதத்தில் இராணுவத்தில் தமிழ் இளைஞர் - யுவதிகள் 3000 பேரை சேர்த்துக் கொள்ளும் பிரச்சார இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு, நாள் குறிக்கப்பட்டு, ஆட்களைச் சேர்த்துக் கொள்ளும் இடங்களும் அறிவிக்கப்பட்டன.

யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, மற்றும் கொழும்பில் தமிழ் இளைஞர் - யுவதிகளைச் சேர்த்து கொள்ளும் இடங்கள் பெயர் குறிக்கப்பட்டது. ஆனால், ஒரு தமிழ் இளைஞனோ, யுவதியோ இராணுவத்தில் சேர முன்வரவில்லை. இதன்பின் 1999 ஒகஸ்ட் மாதம் நாடுமுழுவதும் 260 நிலையங்களில் ஆட்சேர்ப்பு இடம்பெற்றது. 18-28 வயதுக்கு இடைப்பட்டிருத்தல், 05 அடி அங்குலத்துக்கு உயரம் கொண்டிருத்தல், திருமணம் முடிக்காதவர்கள், 08ம் தரத்தில் கல்வி கற்றிருத்தல் என்பன தகைமைகளாகும், இவ்வாறு சேர்த்துக் கொள்ளப்படும் சிப்பாய்கள் வடக்கு - கிழக்குப் பிரதேசத்தில் சேவையாற்ற வேண்டியிருந்ததுடன், ரூ. 10.000 மாதாந்த ஊதியமாக இவர்களுக்குக் கிடைத்தது. எனினும், சனத்தொகையில் 1/3 பங்கினர் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள நிலைமையிலும் கூட இத்திட்டம் வெற்றியளிக்கவில்லை. இளைஞர்களை ஈர்த்துக் கொள்ளும் நோக்கத்துடன், ஆண்டின் இளைய வீரர் விழாவின் மூலம் ஆட்சேர்ப்பு நிலையமொன்றை இராணுவம் திறந்து வைத்ததுடன், இலங்கை இராணுவத்தின் 50வது நிறைவு விழா கொண்டாட்டக் கண்காட்சியில் பாடசாலை மாணவர்கள் இலவசமாகப் பங்குகொள்ள அனுமதிக்கப்பட்டனர். 2000ம் வருட ஆரம்பத்தில் மீண்டும் இராணுவத்திற்கு 15,000பேரைச் சேர்த்துக் கொள்ளும் பிரச்சார இயக்கத்தை விரிவுபடுத்தப் பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்தது. இதன் பின்னர் தப்பியோடிய இராணுவத்திற்கு மன்னிப்புக் காலம் வழங்கப்பட்டது.

இராணுவத்தில் இடம்பெறும் ஊழல், துஷ்பிரயோகங்கள் குறித்து வார இறுதிப் பத்திரிகைகளில் பாதுகாப்புத் தொடர்பாக எழுதுபவர்கள் தொடர்ச்சியாக எழுதி வந்தார்கள். இத்தகவல்களை அரச தரப்பினரோ, இராணுவப் பேச்சாளர்களோ மறுக்கவில்லை. இராணுவத்தின் உயர் மட்டம் தொடக்கம், கீழ் மட்டம் வரை ஊழல் பரவியுள்ளதற்கான சாட்சிகள் ஆங்காங்கே வெளிவந்தன. சிப்பாய்களின் ஊதியத் தொகையான ரூ. 900 இலட்சம் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்ட அதிகாரிகள் மூவர் தலைமறைவாகியுள்ளதாக 1999 நவம்பரில் தகவல்கள் கிடைத்தன. அரச படைகளுக்கு ஆயுதங்கள் வழங்கும் ஒப்பந்தத்தின் பின்னணியில் அரசின் உயர்மட்ட அதிகாரிகளின் மற்றும் அமைச்சர்களின் பிள்ளைகள் உள்ளனர் என்ற செய்திகள் பிரசுரமான போதும் தகவல்களைப் பெறுவதில் உள்ள



சிறீலங்காப் படையினர்

சிக்கல்களின் காரணமாக இந்த விடயத்தின் உண்மை, பொய்மையை உறுதிப்படுத்த முடியவில்லை. எவ்வாறாயினும், ஆயுத விற்பனையினால் பெரும் செல்வந்தர்களான சிலர், அரசின் உயர் மட்டத்துடன் தமது தொடர்புகளைப் பேணி வந்துள்ளமையைக் காணக் கூடியதாகவிருந்தது.

புலிகள், பிற தமிழ் அரசியல் கட்சித் தலைமைத்துவங்களை அழிக்கும் தந்திரோபாயத்தை 1999 ஆண்டு முழுவதும் செயற்படுத்தி வந்துள்ளனர். ஈ.பி.டி.பி. யாழ். மாவட்ட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் ஐவர் 1999ம் ஆண்டில் புலிகளால் படுகொலை செய்யப்பட்டனர். இராஜதுரை, நடராஜா சிவராஜா, பி. கந்தசாமி, பூபாலசிங்கம், துரைராஜா ஆகியோர் கொல்லப்பட்டனர். புளொட் இயக்கத்துக்கு எதிராக மிகவும் கிரமமான தந்திரோபாயமொன்றைக் கைக்கொண்ட புலிகள், வருட நிறைவில் புளொட் அமைப்பின் ஆயுதப் பிரிவினை முழுமையாகக் கலைத்து விட நடவடிக்கை எடுத்தனர். ஜனவரி 25ம் திகதி யாழ்ப்பாணத்தில் புளொட் தலைவர்களுள் ஒருவரான சந்திரமோகன், ஜூன் 08ம் திகதி வவுனியாத் தலைவர் ஆறுமுகம்



குமார் பொன்னம்பலம்

உதயகுமார், செப்டெம்பர் 02ம் திகதி புளொட் ஆயுதப் பிரிவின் தலைவர் மாணிக்கதாசன் உள்ளிட்ட நபர்களை படுகொலை செய்தனர். 10 வருடங்களுக்கு அதிகமான காலப்பகுதி வரை புளொட் இயக்கத்தின் தலைவராக இருந்த மாணிக்கதாசனின் கொலையின் பின் புளொட் தலைவர் சித்தார்த்தன் தர்மலிங்கத்தினால் அதன் ஆயுதப் பிரிவு கலைக்கப்பட்டது.

புலிகளின் இன்னுமொரு குறிப்பிடத்தக்க வெற்றியாக ஈ.பி.ஆர்.-எல்.எப். அமைப்பிலிருந்து இராணுவத்துடன் இணைந்து மட்டக்களப்பில் இராணுவமொன்றை கட்டியெழுப்பிய முத்துலிங்கம் கணேஷ்குமார் எனப்படும் ராசிக் கொல்லப்பட்டமையைக் கூறலாம். அவரைக் கொலை செய்ய புலிகள் தற்கொலைப் போராளியைப் பயன்படுத்தினர். 1983 கறுப்பு ஜூலையை அனுட்டிக்க புலிகள், சந்திரிகா மற்றும் அவரது அரசாங்கத்துடன் நெருங்கிய தொடர்பை பேணிவந்த த.வி.கூ. பா.உ நீலன் திருச்செல்வத்தைக் கொலை செய்தனர். அவரைக் கொல்ல தற்கொலைப் போராளியொருவர் பயன்படுத்தப்பட்டார். நீலனின் படுகொலை குறித்து சர்வதேச மட்டத்தில் புலிகளுக்கு எதிராக பெரும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. ஏனெனில், அவர் தனித்து அரசியல் தலைவர் மட்டுமன்றி உள்நாட்டு வெளிநாட்டு மனித உரிமைகள் இயக்கத்தில் முக்கியமானவர். எனினும், தமிழ் மக்கள்

⊃19

நன்றி - நூலகத்திட்டம்



இந்தியா தலையிட தயார் நிலையில்!

தணிக்கை தணிக்கை

இந்திய பயங்கரவாத ஒழிப்பு நிபுணர் என பேர் பெற்ற நவீன அனுமார் கே.பி.எஸ்.கில் இலங்கை விரைந்து விட்டார்.

சென்ற சரிநிகர் கட்டுரையில் இந்தியா! இந்தியா தான்! என்பது பற்றியும் அது தனது பிராந்திய மற்றும் உள்நாட்டு தேசிய மூலோபாய நலன்களின் மீதிருந்து இலங்கை அரசுக்கு நிச்சயம் உதவும் என்றும் தெரிவித்திருந்தோம். இதோ அது நடந்தே விட்டது.

தணிக்கை

இந்தியக் கடற்படைத்தளங்களிலிருந்து கப்பல்கள், மற்றும் விமானப்படைகள் என்பன இந்து-சமுத்திரத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கு நகர்த்தப்பட்டுள்ளன. அவை இணைத்தளமான ரீடிப் (rediff.com) 18ஆம் திகதி செய்தியாக வெளியிட்டிருந்தது.

"இது எதிரிக்கு (புலிகளுக்கு) நாங்கள் தயாராக இருப்பதை உணர்த்துவதற்கான எச்சரிக்கை" என்று ரீடிப்புக்கு இந்திய இராணுவ அதிகாரியொருவரும் தெரிவித்திருக்கிறார்.

மேலும், இந்தியாவின் "சூப்பர்கொப்" என கூறப்படும் "பயங்கரவாத ஒழிப்பில்" அதி நிபுணத்துவம் பெற்றவரான முன்னாள் பஞ்சாப் பொலிஸ் டிரக்டர் ஜெனரலும், பஞ்சாப், அஸ்ஸாம் போராளிகளை ஒடுக்குவதில் அதிக பணிகளைச் செய்திருந்தவருமான கே.பி.எஸ் கில் இலங்கைக்கு விஜயம் செய்திருப்பது ஒன்றும் விருந்து உண்டுவிட்டுப் போவதற்கல்ல.

இந்தியா இலங்கையின் நிலைமை குறித்து 24 மணி நேரமும் உஷார் நிலையில் தகவல் அறிந்தபடி இலங்கையின் சமிக்ஞைக்காக காத்திருக்கிறது.

இது எழுதப்பட்டுக் கொண்டிருக்கும் போது (மே 23) முதலமைச்சர் கருணாநிதி காப்பாற்றப்படும் இலங்கைப் படைகளை தமிழ்நாட்டுக்குள் கொண்டு வரக்கூடாது என்று அறிவித்திருக்கிற போதும் இது வெறும் வாய்ச்சவாடல் என்பது எவருக்கும் தெரியும். இந்திய அரசியல்வாதிகளின் நாளுக்கொரு பேச்சு என்பது பலருக்கும் புளித்துப் போன



ஆக மொத்தத்தில் இலங்கை அரசாங்கத்துக்கு எது தேவையோ அது தான் இந்தியாவும் தேவையும்.

ஓய்வு பெற்ற முன்னாள் இந்திய இராணுவ அதிகாரியும் தற்போதைய டெல்லி கொள்கை மையத்தின் இயக்குனருமான ராகவன் கடந்த சில தினங்களுக்கு முன்னர் பி.பி.சிக்கு அளித்த பேட்டியில், இப்படிக் கூறியிருந்தார்.

போராட்டத்தை ஒடுக்க இந்தியப்படை "சமாதானப் படை" எனும் போர்வைக்குள் அனுப்பி வைக்கப்பட்டது. (அது 32 மாதகால தனது "சமாதான நடவடிக்கைளை" செய்து கொண்டிருக்கும் போதே பிரேமதாசவால் அவமானப்படுத்தி விரட்டப்பட்டது.) இன்று சந்திரிகாவின் ஆட்சியில் மனிதாபிமானப் போர்வையில் அனுப்பப்படுகிறது.

தணிக்கை

# வேட்டை தணிக்கை

# உலங்கு தணிக்கை

தென்னிந்திய கரையோரங்களில் முழு அளவில் தயார் நிலையில் நிலைகொண்டுள்ளன.

கடந்த வாரம் ஜெனரல் றொகான் தலுவத்த இந்தியாவிடமிருந்து, புலிகளை எதிர்கொள்வதற்கான இராணுவத் தந்திரோபாயங்கள், புலனாய்வு உதவிகள், மற்றும் இராணுவ நடவடிக்கைகள் போன்ற விடயத்தில் உதவிகளைக் கோரியிருந்தார். இலங்கைப் படைக்கான இந்த "மனிதாபிமான" உதவிகளை வழங்குவது குறித்து இந்த மாதத்தின் இரண்டாவது கிழமையிலேயே தீர்மானிக்கப்பட்டாகி விட்டது. கடலோரப் பாதுகாப்புப் படையின் கூட்டு முயற்சியுடன் " ஒப்பரேஸஷன் பாஷா" எனும் பெயரில் இதற்கான ஒத்திகையும் தென் கரையோரங்களில் நடத்தப்பட்டிருக்கிறது. காசின் ரக டெஸ்ட்-



ராயர்ஸ் மற்றும் கண்ணி வெடி அகற்றும் கப்பல்கள், கஞ்சர் ரக பாதுகாப்பு கப்பல்களும் இதில் கலந்து கொண்டுள்ளதுடன் தற்போது முன்னணிக் கப்பல்கள் இக்கடலோர எல்லைகளில் நிறுத்தப்பட்டுள்ளன. இந்த ஒத்திகையில் கடற்படை விமானங்களின் ஒரு பிரிவும் பங்கேற்றதாக இந்திய அரச பிரசார விடயமாகி விட்டது. எனவே இந்தியாவின் தேசிய நிலைப்பாட்டிலிருந்து தான் இதனைக் கணிக்க முடியும்.

தற்போதைய இலங்கைச் சூழ்நிலை இந்திய மூலோபாய தந்திரோபாயங்களை பரிசோதனைக்கு உள்ளாக்கிய நிலையில் இந்தியா இம்மாத ஆரம்பத்தில் டில்லியில் சர்வகட்சி மாநாடொன்றைக் கூட்டி ஒரு நான்கம்சக் கொள்கை நிலைப்பாட்டை வரைந்தது.

அதன்படி,

1. ஈழப்பிரச்சினையில் இந்தியாவின் ராணுவத் தலையீடு கூடாது.

2. இலங்கையின் ஒற்றுமைக்கும் இறைமைக்கும் மரியாதை அளிக்க வேண்டும்.

3. இலங்கை சிறுபான்மைத் தமிழர்களுக்கு பாதுகாப்பு வேண்டும்.

4. இலங்கையின் அரசியலமைப்புக்கு உட்பட்ட வகையில் தமிழர்களுக்குத் தீர்வு வழங்கப்பட வேண்டும்.

"எந்த மாதிரி இன்டரஸ்ட், இந்தியன் இன்ட்ரஸ்ட் இன்வோல்மன்ட்டா, சிறிலங்கா கவர்ன்மன்ட் இன்ரஸ்ட்ல இன்வோல்மன்ட்டா இல்லன்னா, டமில் பொபியுலேசன் இன்ரஸ்ட் இன்வோல்வ்மன்ட்டா, டெல்லி மேல டெபினேட்லி ஒரு பிரஷர் இருக்கு இன்வோல்வ்மன்ட் ஆகனும்னு. வட் கைன்ட் ஒப் இன்வோல்மன்ட் என்றது தான் முக்கியம்."

அவர் மேலும் தெரிவிக்கையில் "இலங்கையில் ஜனநாயக ரீதியில் பதவிக்கு வந்த அரசாங்கம் ஒன்று உண்டு. அதன் ஐக்கியத்துக்கும், இறைமைக்கும் இந்தியா உத்தரவாதமளித்திருக்கிறது. 1987 இந்திய - இலங்கை உடன்படிக்கை கூட அந்த ஐக்கியம், சகோதரத்துவம் என்கிற அடிப்படையில் அல்லவா இந்தியா தலையிட்டிருந்தது. இதைத்தான் இந்தியன் நலன், அல்லது தந்திரோபாய நலன் என்று சொல்வோம்.

தணிக்கை

இந்த இரு நலன்களும் மோதும் இடத்தில் தான் இந்திய தலையீடு ஆகும்...

தணிக்கை

தணிக்கை

தணிக்கை

சந்திரிகாவின் தாயார் சிறிமாவின் ஆட்சியில் 1971இல் இலங்கையில் இடம் பெற்ற ஏப்ரல் கிளர்ச்சியின் போது இளைஞர்களை அழித்தொழிக்க முதலாவது தடவையாக இந்திய இராணுவம் இந்திரா காந்தியின் அரசாங்கத்தால் அனுப்பி வைக்கப்பட்டது. 1987இல் இலங்கை இந்திய ஒப்பந்தத்தைத் தொடர்ந்து தமிழர்

அது போல 22ஆம் திகதி அன்று "சண்டே லீடர்", மற்றும் "இரிதா பெரமுன" சித்தர, முத்துஹர போன்ற பத்தரிகைகள் தணிக்கையை மீறிய குற்றச்சாட்டுக்காக மூடப்பட்டுள்ளன. கடந்த 19ஆம் திகதி உதயன் பத்திரிகை சீல் வைக்கப்பட்டது. தணிக்கைக்கு தமது செய்திகளை அனுப்புவதற்கு எவ்வித வாய்ப்புகளுமின்றி வெறும் ஒரு தாளிலேயே பிரசுரித்து வந்த உதயன் பத்திரிகை மூடப்பட்டது. யாழ்ப்பாணத்திலிருந்து அது வரை வெளிவந்து கொண்டிருந்த ஒரே ஒரு பத்திரிகை அது. அதற்கு முன் பி.பி.சி. தடை செய்யப்பட்டது. பல பத்திரிகையாளர்கள் தாக்கப்படுவது சகஜமாகி வந்துள்ளது.

சிறிமாவின் ஆட்சியில் 1971இல் இவ்வாறான தணிக்கை போடப்பட்டது.

"இந்தியா இலங்கைக்கான 'மனிதாபினமான' உதவியில் இறங்கியிருக்கிறது.

தணிக்கை

தணிக்கை

தணிக்கை

'மனிதாபிமானம்' வந்தது? அது தான் இந்தியா."

1974இல் தவச பத்திரிகைக் காரியாலயம் சீல் வைக்கப்பட்டது. அதன் பின்னர் 17 வருடங்களுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி

நன்றி - நூலகத்திட்டம்



அரசியலிலிருந்து தூக்கி வீசப்பட்டது. இப்போது சண்டே லீடர் பத்திரிகையானது 6 மாதங்களுக்கு மூடப்பட்டதைப் பார்க்கும் போது இது அரசியல் நலன்களைக் கொண்ட இறுக்கமான காய் நகர்த்தல் என்பதைத் அறியலாம். இன்றைய நிலையில் ஓகஸ்ட் பொதுத் தேர்தலை மோசமான அடக்கு முறைகளைக் கையாண்டு வெல்வதற்கான தந்திரோபாயங்களாகவே இதை தென்னிலங்கையின் பல நோக்கர்கள் தெரிவிக்கின்றனர். சிங்கள பௌத்தத்தைப் பாதுகாப்பதற்காக இது போன்ற அத்தனைக்கும் தோள் கொடுக்க சிங்கள சிவில் சமூகம் தயாராக இருப்பது முக்கியமாக அவதானிக்கத் தக்கது. 22ஆம் திகதி பி.பி.சி. சிங்கள சேவைக்கு செவ்வியளித்த சுதந்திர ஊடகவியலாளர்கள் அமைப்பின் இணைப்பாளர் வருண கருணாதிலக்க "பல ஊடகவியலாளர்கள் கூட இதனை சிங்கள இனத்தின் நலனுக்காக இணங்கிப் போக வேண்டியிருக்கிறது என்கின்றனர். அதற்காக எதனையும் விட்டுக் கொடுக்கத் தயாராக இருக்கின்றனர். இதற்கெதிரான பலமான அமைப்பொன்றைக் கட்டக் கூட இது தடையாக இருக்கின்றது. இல்லையென்றால் இவ்வளவு இலகுவாக இத்தனையையும் அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்த எவ்வாறு முடிந்தது" என்கிறார்.

இவ்வாறான அரசியல் சூழ்நிலையில் தான் இந்தியா இலங்கைக்கான "மனிதாபிமான" உதவியில் இறங்கியிருக்கிறது. குடாநாட்டில் தொடர்ந்து இடம்பெற்று வரும் வான் தாக்குதலில் கொல்லப்படும் மக்கள் மீது



ஏற்படாத "மனிதாபிமானம்" அப்பாவி பொதுமக்கள் மீது குண்டு போடும் படை மீது இந்தியாவுக்கு எங்கிருந்து வந்தது? அது தான் இந்தியா.

ஒரு புறம் ஐரோப்பிய பாராளுமன்றம் புலிகளைக் கண்டித்து அறிக்கை வெளியிடுகிறது. பிரான்ஸ், சீனா, ரஸ்யா, இஸ்ரேல், பாகிஸ்தான், அமெரிக்கா என பல நாடுகளும் இலங்கைக்குக் கை கொடுக்கின்றன. அமெரிக்காவிடம் இலங்கை உதவி கோரியதை அமெரிக்கா பரிசீலித்து வருகிறது. பிரித்தானியா ஐக்கிய நாடுகள் படையை இலங்கைக்கு அனுப்ப, ஐ.நா.வின் பாதுகாப்புச் சபையில் பிரேரணை முன்வைத்தால் அதனை தமது வீட்டோ அதிகாரத்தைப் பாவித்து முறியடிப்பதாக சீனா, ரஷ்யா என்பன அறிவிக்கின்றன. இதுவரை இலங்கைக்கும் புலிகளுக்கும் மட்டுமே தரகராக இருந்த நோர்வே நாடானது அதன் அமெரிக்க விஜயத்தின் பின்னர் இந்தியா, இலங்கை, புலிகளுக்கு இடையில் தான் ஒரு தரகராக இருக்கப் போவதாக அறிவித்திருக்கிறது. அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் பல இந்தியா தலையிடுவதை விரும்புகின்றன. இந்தியாவும் தனக்கு வாய்ப்பான இந்த சூழலைப் பயன்படுத்தி தனது காலடிக்குள் ஒரு பூட்டானைப் போல நேப்பாளைப் போல ஒரு நாட்டை உருவாக்கலாமா என்பதற்கான நடவடிக்கையில் குதிக்கிறது.

இலங்கையின் நிலைமை குறித்து பதட்டத்துடன் உள்ள சிங்களப் பேரினவாதம் புதிய வியூகங்களை வகுத்து வருகிறது. சம்பிக்க ரணவக்கவின் 22ஆம் திகதி லங்காதீப கட்டுரையில் "அந்நிய இராணுவ அரசியல் தலையீடு எப்போதும் நேருவதற்கான வாய்ப்புகள் கிட்டிய தூரத்தில் தெரிகின்றன. முழு நாடும் இரத்தத்தால் தோய இடமுண்டு. இது நிச்சயம். இதனைத் தடுப்பது எப்படி? இதனைத் தடுப்பதற்குரிய ஒரே ஒரே வழி மட்டும் தான் இருக்கிறது. அது தான் துரிதகதியில் பலமான சிங்கள இராணுவ அரசியல் தலைமையை தென்னிலங்கையில் ஏற்படுத்துவதே." இது பேரினவாதத்தின் ஒரு இராணுவ அரசியல் சதிக்கான பிரகடனம்.

இந்திய தலையீட்டை தற்போது நளின் டி சில்வா வரவேற்கிறார். ஆனால் எச்சரிக்கையுடன். 22 ஆம் திகதி வெளியான திவயின பத்திரிகையில் அவரது கட்டுரையில் "இந்தியா அரசியலமைப்பு ரீதியாக இந்து அரசாக இல்லாது விட்டாலும் அது மறைமுகமாக இந்துத்துவத்தைத் தான் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. பிரித்தானியா அரசியலமைப்பு ரீதியில் கிறிஸ்துவத்தை ஏற்றுக் கொண்ட நாடு, நோர்வேயும் அரசியலமைப்பு ரீதியாக கிறிஸ்துவத்தை ஏற்றுக் கொண்ட நாடு. உங்கள் யாரையாவது ஏனென்று நாங்கள் கேள்வி கேட்டோமா? பின் ஏன் எங்களை சிங்கள பௌத்த நாடாக ஏற்றுக் கொள்கிறீர்கள் இல்லை... புலிகளைத் தோற்கடிக்க எங்களுக்கு இந்தியா உதவி செய்ய வேண்டும். ஆனால் அது உதவியுடன் மட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும். எங்களது தீர்வினை அமுல்படுத்த ஆதரவு தருவது தான் இந்தியாவின் பணியேயொழிய, எங்களுக்குத் தீர்வு வழங்குவதற்கு இந்தியா முற்படக்கூடாது" என்கிறார்.

எதிர்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி 19ஆம் திகதி பாராளுமன்றக் கட்டிடத்தில் கூடி இந்தியா பற்றி ஆராய்ந்த போது, அதில் உள்ளவர்கள் பலர் இந்தியாவின் தலையீட்டை ஏற்றே கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அவர்களின் கணிப்பின்படி இரு தரப்பையும் நிர்ப்பந்திக்கும் வல்லமை இந்தியாவுக்கு மட்டும் தான் இருக்கிறது. ஒரு வேளை புலிகள் ஏற்க மறுக்கும் பட்சத்தில் புலிகளை நிர்ப்பந்திக்கும் பலமும், இந்தியாவுக்குத் தான் உண்டு. நோர்வேக்கு அந்தப் பலம் இல்லை என்கின்றனர்.

இப்படி இந்தியா என்பது தீர்க்கமான ஒரு பாத்திரத்தை ஆற்றிவருவதும், அதற்கு உலக அளவில் ஆதரவிருப்பதும், இந்தியாவின் அணுகுமுறைகள் பேரினவாத நலன்களுக்கு மாத்திரமே சாதகமாக இருப்பதும் இன்றைய நிலை.


தமிழ் மக்களின் இன்றைய போராட்ட நிலைமையில் தங்களுக்கு தாங்கள் மட்டும் தான் என்கிற நிலை தான் இருக்கிறது. தந்திரோபாயங்களை கவனமாக நகர்த்தவேண்டிய காலமிது. புலிகள் தரப்பில் இதுவரையான அணுகு முறைகள் மிகவும் கவனமாகவே இருப்பதாகப் படுகிறது. இந்தியா அடக்கப்படும் இனங்களின் எதிரி என்பதை மீளவும் உலகுக்கு உறுதி செய்யும் தறுவாயில் ஆயத்தமாக இருக்கிறது.

O

# கொக்கக்கோலாவின் இன ஒதுக்கல்!

கறுப்பின மக்களின் முன்னேற்றத்திற்கான தேசிய அமைப்பு National Association for the Advancement of Colored People - N.A.A.C.P. (அட்லாண்டா நகரில் உள்ள) கொக்கக்கோலா கம்பனியில் கடமையாற்றும் கறுப்பின தொழிலாளர்களுக்கு எதிரான இன ஒதுக்கலைக் கண்டித்து கொக்கக்கோலா பானத்தை பகிஷ்கரிக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது.

உலகத்தின் மிகப்பெரிய Soft Drink கம்பனியான கொக்கக்கோலா அங்கே வேலை செய்யும் கறுப்பின தொழிலாளர்களை இன ஒதுக்கல் செய்வதுடன் இவ் ஒடுக்கு முறையை எதிர்ப்பவர்களை அல்லது இது சம்பந்தமான கேள்வி எழுப்புபவர்களை வேலைநீக்கம் செய்தல் அல்லது நிந்தித்தல் மூலம் பழிவாங்க முயல்வதாக NAACP குற்றம் சாட்டுகின்றது. ஆனால், மேற்படி கொம்பனி இக்குற்றச்சாட்டை மறுத்துள்ளது. எனினும் சென்ற வருடம் இங்கே வேலை செய்த, இப்போது வேலை செய்து கொண்டிருக்கும் கறுப்பின தொழிலாளர்கள் இக்கம்பனி சம்பளம், பதவி உயர்வு போன்றவற்றில் கடைப்பிடிக்கும் கொள்கைக்கு எதிராக வழக்கொன்றைத் தொடுத்துள்ளார்கள். இதை ஏற்றுக் கொண்ட நீதிமன்றம் மேற்படி வழக்கிற்கு (Class action status) வழங்குவது சம்பந்தமாக யோசித்துக் கொண்டிருக்கின்றது.




இது சம்பந்தமாகக் கருத்துத் தெரிவித்த பிராந்தியப் பணிப்பாளர் (NAACP (Regional Director) Rev. Joseph Wheeler) கொக்கக்கோலா நிர்வாகம் கறுப்பினத் தொழிலாளர்களுக்கு எதிரான இனவாதப் பழிவாங்கலைத் தொடர்ந்தால் கொக்கக்கோலாவை பகிஷ்கரிக்கும் போராட்டத்தில் ஈடுபட வேண்டிவரும் என எச்சரித்துள்ளார். மேலும் இவ்வருட ஜனவரி மாதத்தில் 6000 தொழிலாளர்களைக் குறைப்பதற்கு (20% of the work force) திட்டமிட்டுள்ளதாக அறிவித்திருந்தது.

மேற்படி கூட்டத்திற்கு ஒழுங்கு செய்தவரும், Black human resources நிர்வாகியுமான Larry Jones இன் குற்றச்சாட்டு பின்வருமாறு "பயமான சூழ்நிலை, பயமுறுத்தல், சிலவேளைகளில் மிகமோசமான (ugly shurs) இனக்குரோத சீண்டல் போன்றவற்றிற்கு எதிராகச் செயல்பட்ட தொழிலாளர்கள் நிர்வாகத்தால் பாரபட்சமாக நடாத்தப்பட்டுள்ளார்கள்." இதுதான் இன்றைய உலகமயமாக்கலின் பின்னாலுள்ள சூட்சுமமும் கூட.

எமது நாட்டிலும் கொக்கக்கோலாவைக் குடிப்பதைக் கூட பெருமையாக நினைக்கும் அளவிற்கு நாம் எம்மளவிற்கு நக்கிப்பிழைக்கும் கலாசாரத்திற்கு அடிமைப்பட்டுள்ளோம் என்பதை இப்போதாவது விளங்கிக் கொள்வோமா? எமது நாட்டின் சுவாத்தியத்திற்கு உகந்த மிகவும் பொருத்தமான இளநீர், இலைக்கஞ்சி, கஞ்சி, கூழ், மோர் என்ற மிகவும் சிறந்த பானங்கள் இருக்க அவற்றை ஒதுக்கிவிட்டு கொக்கக்கோலாவை நாடுகின்ற மடமையை எப்போது நாம் கொளுத்துவது? நாளைக்கு ஒரு அமெரிக்கக் கம்பனி இலைக்கஞ்சியின் உரிமத்தை கையகப் படுத்திக் கொண்டு ஏதோ தான் தான் கண்டுபிடித்த மாதிரி கதை அளந்து கொண்டு எதோ போத்தலிலோ ரின்னிலோ அடைத்து நன்றாகக் கவர்ச்சியாக விளம்பரம் செய்தால் எம்மவர்கள் அவற்றை விழுந்தடித்துக் கொண்டு வாங்க மாட்டார்களா? என்னே எம்மவரின் மடமைத்தனம் எங்களுடைய உணவே மருந்தாகவும், மருந்தே உணவாகவும் கண்ட மிக முன்னேறிய கலாசாரம் என்பதை எப்போது உணரப் போகின்றோம்?

காலம் காலமாக எமது வாழ்வுடனும் வளத்துடனும் பின்னிப் பிணைந்த எமது உணவு முறைகள், பானங்கள் இன்று சர்வதேசக் கம்பனிகளால் கைப்பற்றப்பட்டு அவற்றிற்கான விற்பனை உரிமம் கூடப்பெறப்பட்டு விடுகின்றது. உதாரணத்திற்கு அண்மையில் ஒரு ஜப்பானிய கம்பனி கறியை கண்டுபிடித்தது தான் என்று W.T.O. உலக வர்த்தக ஸ்தாபனத்திடம் உரிமத்தைப் பெற்றுள்ளது. இது நடைமுறைக்கு வருமானால் , சிறீ கதிரேசன் மூத்திர ஒழுங்கையில் குப்பைகளின் மத்தியில் கறி சமைக்கின்ற முருகன் ஹோட்டலும், பிள்ளையார் உணவகமும் கூட மேற்படி ஜப்பான் கம்பனிக்கு கறிக்குக் கப்பம் கட்ட வேண்டி வரும்.

எம்மத்தியிலுள்ள எந்தவொரு அமைப்பாவது கொக்கக்கோலா பானம் எமது சுற்றுச் சூழல், சுகவாழ்விற்கு உகந்ததா? இல்லை எமது பாரம்பரிய பானங்கள் சிறந்தனவா என்ற ஆய்வை குறைந்த பட்சம் கேள்விளை எழுப்பக்கூட முனைந்தனவா? இல்லையே.

இவர்களுக்கு எங்கே தெரியப் போகின்றது கொக்கக்கோலாவின் பின்னாலுள்ள இனப்பாகுபாட்டை? நிறவெறி செயல்பாட்டை? உலகத் தொழிலாளர்களுடன் ஒன்றுபட்டு எழுவோமா? இல்லை நாமும் தமிழ் சிங்கள) இனவாதத்தினுள் மூழ்கி வீழ்வோமா?

இக்கட்டுரையின் தொடர்ச்சியில் முக்கியமான ஒரு சுட்டிக் காட்ட வேண்டிய உடனடித் தேவையை மார்ச் 09 - 22 / 2000 சரிநிகர் இதழ் 192 இல் பக்கம் 13இல் வெளிவந்த "இரசிகமணி கனக செந்திநாதன் நினைவு" என்ற கட்டுரையில் கடைசிப்பந்தியில் வந்த சில விடயங்கள் ஏற்படுத்தியுள்ளது.

இக்கட்டுரையின்படி பேராசிரியர் சிவத்தம்பி அவர்களின் பின்வரும் கூற்று எமது ஆழ்ந்த ஆய்வுக்கு உட்பட்ட விடயமாகும். அவரது கூற்று இவ்வாறு தான் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. "அதாவது

நன்றி - நூலகத்திட்டம்



# செவியில் விழுந்து இதயம் நுழையும் இசை! கோபுரத்தின் விரிசலில் விழுந்த விதை!!

ஏதற்காக இந்தத் தமிழ் மக்கள் இசை விழா என்ற கேள்வியை எதிரிகள் எழுப்பும்போது அதற்குப் பதில் சொல்லிவிடுகிறோம். தமிழிசைக் களவு பற்றியும், அதை அம்பலப்படுத்த வேண்டிய அவசியம் பற்றியும், மாற்றாகத் தமிழ் மக்களிசையைப் படைக்க வேண்டிய தேவை பற்றியும் விளக்கிய வருகிறோம்.

ஆனால், இதே கேள்வியை வேறு கோணத்திலிருந்து எழுப்புகிறார்கள் சில நண்பர்கள். போராட்டம், தியாகம், புரட்சி என்று பேசவேண்டிய புரட்சியாளர்கள் குரல், துத்தம், கைக்கிளை என்றும் சட்ஜம், ரிசபம், காந்தாரம் என்றும் பேசிக்கொண்டிருப்பது தேவையா என்று கேட்கிறார்கள்.

இவ்வாறு கூறுபவர்கள் தாம் விரும்பும் வகையில் புரட்சியில் ஈடுபடலாம் என்பதும், நாம் இசைவிழா நடத்துவதன் காரணமாக அவர்களது புரட்சிப்பணி தடைப்பட்டு விடவில்லை என்பதும் ஒரு புறமிருக்கட்டும். திருவரங்கம் கருவறை நுழைவுப் போராட்டம் நடத்திய போதும் இதே வகையான கேள்வியை இதே வகையறாவைச் சேர்ந்த நண்பர்கள் எழுப்பினார்கள் என்பதை மட்டும் வாசகர்கள் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

அரசியல் பொருளாதார அரங்குகளில் மட்டுமின்றி இனம், மொழி, சாதி, பால் மற்றும் பண்பாட்டு ரீதியான ஒடுக்குமுறைகள் ஆகிய அனைத்தையும் உரிய வகையில் உரிய தருணத்தில் எதிர்த்துப் போராடுவது தான் புரட்சியாளர்களின் பணி. இதுவும் ஏற்கெனவே பலமுறை கூறப்பட்ட பதில் தான். அந்த வகையில் தமிழிசைக் களவு பற்றிய தரவுகளையும், தமிழ்ச்செவ்வியல் இசை மரபு பார்ப்பனிய மயமாக்கப்பட்டது பற்றியும் பலவாறாக விளக்கியும் இருக்கிறோம். அவற்றை மீண்டும் ஒருமுறை விளக்குவதும் தற்போது நம் நோக்கமல்ல.

"கர்நாடக இசையோ, நாட்டுபுற இசையோ, திரையிசையோ யாருக்கு எது பிடிக்கிறதோ அதைக் கேட்டு விட்டுப் போகட்டும். நமக்குப் புரட்சிக் கருத்துக்களைச் சொல்ல இசை வேண்டுமென்றால் நாட்டுபுற இசையில் பாட்டெழுதிப் பாடிவிட்டுப் போவோம். இப்போது புரட்சி நடத்தும் வழியைப் பார்ப்போம். அதிகாரம் நம் கைக்கு வரட்டும். அப்புறம் நமக்கான இசையை ஆற அமர உருவாக்குவோம்" என்று பேசும் நண்பர்களின் கருத்தை மட்டும் இப்போது கவனிப்போம்.

ரத, கஜ, துரக, பதாதிகளுடன் தான் போர்க்களத்தில் இறங்க முடியும் என்றோ, இசை உள்ளிட்ட ஒவ்வொரு அரங்கிலும் எதிரிகளுடன் மோதுவதற்குத் தேவையான நமது அணி வரிசையைத் தயார் செய்யாமல் களமிறங்கவே முடியாது என்றோ நாம் கூறவில்லை.

எனினும், இசைக்கு ஒரு இயக்கம் தேவையா என்று கேட்கும் இந்தத் துடிப்பு மிக்க புரட்சிக்காரர்கள் இதே கேள்வியை இலக்கியம் குறித்தும் கேட்டுப் பார்க்க வேண்டும்.

"ராமாயணமோ, மகாபாரதமோ, குமுதமோ, குங்குமமோ, பாலகுமாரனோ, பட்டுக்கோட்டை பிரபாகரோ... எதையோ இளைஞர்கள் படித்துக் கொள்ளட்டும் சிறுகதையும், கவிதையும், கட்டுரையும் எழுதுவதற்கு நமக்கென்று எழுத்தாளர்கள் எதற்கு, பத்திரிகை எதற்கு, இலக்கிய அமைப்பு எதற்கு - நமக்கு வேண்டியது போராட்டம் - புரட்சி" என்று சொல்லிப் பார்க்கட்டும்: அப்பொழுது புரியும் அவர்களுடைய வாதத்தின் முரண்பாடு!

பத்திரிகை படிப்பவர்கள் அதிகமா பாட்டுக் கேட்பவர்கள் அதிகமா என்ற கேள்விக்கு விடை

> காதலைப் பாலியல் வெறியாகவும், மகிழ்ச்சியைக் களிவெறியாட்டமாகவும், துயரத்தை விரக்தியாகவும் மடைமாற்றி விடுவதன் மூலம் மக்களின் இசை ரசனையையும் வாழ்வியல் மதிப்பீடுகளையும் அதனூடாகச் சமூக உணர்வையும் சிதைப்பதில் திரையிசை வெற்றி பெற்றுள்ளது.

தேட பட்டிமன்றம் தேவையில்லை. படிப்போரைக் காட்டிலும் பாட்டுக் கேட்கும் இசை ரசிகர்கள் பல்லாயிரம் மடங்கு அதிகம். செவியில் விழுந்து இதயம் நுழையும் இந்த இசை வெறும் காற்றைப் போலக்கேட்பவர் மீது தன் சுவடைப் பதிக்காமல் வெளியேறி விடுவதில்லை. கேட்போரிடம் ஒருவகை ரசனையை ஏற்படுத்தத் தான் செய்கிறது.

ஒரே அரசியல் கொள்கையை ஏற்றுக்கொண்டு ஒரே அமைப்பில் இயங்குகின்ற பலருக்கும் இசை ரசனை ஒரே விதமாக இருப்பதில்லை வேறுபடுகிறது. அனைவருக்கும் இசை ரசனை ஒரே மாதிரியாகத் தான் இருக்க வேண்டும் என்பதோ அவ்வாறு ஆக்கி விட வேண்டும் என்பதோ நம் வாதமல்ல. மாறாக, இந்த இசை ரசனையின் தன்மையை, அதனுடைய அழகியலின் சரியான - தவறான, தரமான மலினமான நுட்பமான கொச்சையான தன்மைகளை இனம்பிரித்து அறிய இயலாதவர்களாக இருக்கிறோம் என்பதை மட்டுமே குறிப்பிடுகிறோம்.

ஒரு சிறுகதை அல்லது நாவலை ஆளும் வர்க்க இலக்கியம், பெண்ணடிமைத் தனத்தை ஆதரிப்பது, சாதி ஆதிக்கத்தை நியாயப்படுத்துவது என்று விமர்சிப்பதைப் போல இசையை விமர்சிக்க முடிவதில்லை. ஒரு கவிதையை விமர்சிப்பதைப் போலக் கூட இசையை விமர்சிக்க இயலுவதில்லை. ஏனென்றால் கவிதை என்பது



சொற்களால் தீட்டப்படும் மன உணர்வு, இசையோ ஒலியால் தீட்டப்படும் மன உணர்வு.

எனவே தான் பாடல் வரிகளை முற்போக்கானதென்றோ பிற்போக்கானதென்றோ கூறமுடிகின்ற நம்மால் அந்தப் பாடலைச் சுமந்து வரும் இசையை அவ்வாறு விமர்சிக்க இயலுவதில்லை. இசை குறித்த நமது கருத்து அநேகமாக "பிடித்திருக்கிறது - பிடிக்கவில்லை" என்ற வரம்பைத் தாண்டுவதில்லை. பல சந்தர்ப்பங்களில் நமக்குப் பாட்டுப் பிடிப்பதில்லை - ஆனால், அதன் இசை பிடித்து விடுகிறது.

கொக்கோ கோலா பிரியர்களுக்கு அந்தப் பானத்தின் சுவையை விளக்கி அது தனக்கு ஏன் பிடித்திருக்கிறது என்று கூறும் திறனில்லாமல் போனாலும் அவர்கள் அச்சுவையின் அடிமைகள்: பின்னர் மெல்ல மெல்ல அதனூடாக அந்தப் பண்பாட்டின் அடிமைகள்.

கோபுரத்தின் விரிசலில் விழுந்த விதை மரமாகி கோபுரத்தையே பிளப்பதைப் போல, செவிகளில் நுழையும் இசை ரசனை முற்போக்காளர்களின் இதயத்தையும் பிளக்கவோ,

> கோபுரத்தின் விரிசலில் விழுந்த விதை மரமாகி கோபுரத்தையே பிளப்பதைப் போல, செவிகளில் நுழையும் இசை ரசனை முற்போக்காளர்களின் இதயத்தையும் பிளக்கவோ, பிசையவோ முடியும். சாதாரண மக்கள் மீது அது ஏற்படுத்தும் தாக்கம் பற்றியோ விளக்கத் தேவையில்லை.

பிசையவோ முடியும். சாதாரண மக்கள் மீது அது ஏற்படுத்தும் தாக்கம் பற்றியோ விளக்கத் தேவையில்லை.

இத்தனைக்கும் பிறகு "ரசியாவிலும் சீனாவிலும் இசைவிழா நடத்தித் தான் புரட்சி செய்தார்களா?" என்று கேட்கக்கூடியவர்கள் இருக்கிறார்கள். ரசியாவிலும், சீனாவிலும் திரை இசை, ஒலி நாடாக்கள் இலட்சக் கணக்கில் விற்கவில்லை. தேனீர்க்கடைகள் முதல் தொழிலகங்கள் வரை எங்கும் இந்த இசை காற்றில் கலந்த போதை மருந்தாகப் பரவியிருக்கவில்லை. அமெரிக்க பாப் பாடலை மறுநாளே மொழிமாற்றம் செய்தும், செய்யாமலும் ஒளிபரப்பும் தொலைக்காட்சிகள் இல்லையென்ற சில அற்ப உண்மைகளை மட்டும் அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

ரசியாவிலும் ஏனைய நாடுகளிலும் புரட்சியை ஆக்க ஒரு வேளை இசை பயன்படாவிட்டாலும், அழிக்கப் பயன்பட்டிருக்கிறது என்பதையும் அவர்கள் நினைவுப்படுத்திக் கொள்ள வேண்டும். போலி சோசலிசம் வீழ்ந்ததற்கு அதன் உள் முரண்பாடுகளே முதற்காரணம் என்ற போதிலும் அந்த வீழ்ச்சியைக் கொண்டாட வரவழைக்கப்பட்ட மேற்குலகின் முதல் தேவதூதன் மைக்கேல் ஜாக்சன் என்பதையும், அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நுகர்வியம், இன்பவெறி, தனிநபர்வாதம், போலி மனிதாபிமானம் இவையனைத்தும் கலந்த மேற்கத்திய பொப் இசை இன்றைய உலக இசையாக சந்தைப்படுத்தப்படுவதையும் இந்தப் பொழுது போக்குத் தொழிலின் குடுமி அமெரிக்காவின் கையிலிருப்பதையும், அதை வர்த்தகம் உள்ளிட்ட அனைத்து வர்த்தகங்களைக் காட்டிலும் இந்தப் பொழுது போக்கு வர்த்தகத்தில் தான் பெரும் பணம் புரள்கிறது என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.



இவையெதையும் புரிந்து கொள்ள மறுக்கும் மேதாவிகள், "நாட்டுப்புற இசைக்குள் புரட்சிகரக் கருத்தைப் புகுத்தி விட்டால் கிடைப்பது புரட்சிகர இசை"; கர்நாடக இசையின் தெலுங்கு - வடமொழிப் பாடல்களின் இடத்தில் தமிழின உணர்வைச் செருகிவிட்டால் தமிழர் விடுதலைக்கான இசை" என்று மாற்று இசைக்குப் பல மலிவான கலபமான சூத்திரங்களை முன்வைக்கிறார்கள்.

"நாட்டுப்புற இசை அல்லது செவ்விசையை மட்டும் தான் பயன்படுத்துவேன்" என்பதற்கும் எண்சீர் விருத்தில் தான் கவிதை எழுதுவேன் என்பதற்கும் வேறுபாடில்லை. நமது தேவையின் வீச்சையும், மேற்கூறிய இசைமரபுகளின் வரம்புகளையும் புரிந்து கொள்ள வேண்டும். உலகளவிலான பழங்குடி மக்கள் இசை முதல் நவீன இசை வரை அனைத்தும் நமக்கு வேண்டும். மக்கள் விடுதலைக்கான இசையை உருவாக்க விழையும் நமக்கு உலக விடுதலை இயக்கங்கள் உருவாக்கிய இசையனைத்தும் வேண்டும்.

அடிமைத்தனத்தைப் பேணுவதற்குத் தேவையான அனைத்தும் உலக முழுவதிலிருந்தும் எதிரி சேகரிக்கின்றான். உணவு, உடை, முதல் இசை ரசனை வரை அனைத்திலும் ஒரு படித்தான தன்மையைத் திணிக்க முயல்கிறது அமெரிக்க ஏகாதிபத்தியம். இந்த ஆதிக்கத்திற்கெதிரான குரல்களுடன் நமது இசை இணைந்து ஒலிக்க வேண்டும். இந்தத் துறையில் எதிரியை எதிர்த்து நிற்பதும் முறியடிப்பதும் அவ்வளவு எளிதான காரியமல்ல.

ஏனென்றால், அரசியல் கருத்துக்கள் முதல் இசை ரசனை வரை அனைத்து விசயங்களிலும் ஆற்றோடு போவதற்குத் தான் மக்கள் பழக்கப் படுத்தப்பட்டிருக்கிறார்கள். அதற்கு இசைந்ததாக உள்ளவை அனைத்தும் இயல்பானவையாகவும், முரண்படுபவை அனைத்தும் உறுத்துபவையாகவும் அவர்களுக்குத் தோன்றுகிறது.

குமுதம் - ஆனந்த விகடன் போன்ற பத்திரிகைகள் வாசகரிடம் - எதையும் கோருவதில்லை - ஐந்து ரூபாய் காசைத் தவிர. ஆனால், புதிய கலாசாரம் போன்ற இதழ்களோ வாசகரின் கவனத்தையும் அக்கறையையும் கோருகின்றன. குமுதம் போல அதை 'மேய' முடிவதில்லை.

இந்த எடுத்துக்காட்டு இசைக்கும் பொருந்தும். எதைத் தின்கிறோம் என்ற உணர்வில்லாமல் சோளப்பொரி கொறிக்கும் நுகர்வோரின் நிலையில் தான் இன்று மக்கள் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

எனவே முற்போக்கான புரட்சிகரமான பாடல்களைக் கேட்க நேரும் போது அவற்றைத் திரையிசையுடன் ஒப்பிட்டுத் தான் மதிப்பீடு செய்கின்றனர். நமது பாடல்களின் கருத்துக்கள் ஒருவேளை அவர்களைக் கவர்ந்தால் அதற்காகப் பாராட்டுவார்கள். ஓரிரு முறை கேட்பார்கள் ஆனால், சலிக்காமல் நூறுமுறை திரையிசையைக் கேட்கிறார்களே அந்த 'கௌரவத்தை' நம் பாடல்களுக்கு அவர்கள் வழங்குவதில்லை.

"அதற்கென்ன செய்ய முடியும்? பிரச்சாரப் பாடல்களை யார் தான் மீண்டும் மீண்டும் கேட்க விரும்புவார்கள்?" என்று நமது நண்பர்கள் சமாதானம் கூறலாம். விரும்புதலும் விரும்பாமையும் அவர்கள் மீது திணிக்கப்பட்டவை என்பதை அவர்கள் மறந்து விடுகிறார்கள்.

உண்மையில் பிரச்சாரப் பாடல் என்று கூறப்படும் இந்தப் பொதுவான முத்திரையே ஆளும் வர்க்கத்தால் தயார் செய்யப்பட்டதாகும்.

அரசியல் பொருளாதாரம், முதல் அழகியல் மதிப்பீடுகள் வரையில் அனைத்திலும் தனக்கு எதிரான கருத்துக்களைக் கொண்ட புரட்சியாளர்களுடன் கருத்து மோதலில் ஈடுபடுவதைத் தவிர்க்கவே ஆளும் வர்க்கம் முயல்கிறது. தீவிரவாதிகள் என்று முத்திரை குத்துவதன் மூலம் அவர்களது அரசியலையே இருட்டடிப்பு

நன்றி - நூலகத்திட்டம்



செய்கிறது.

அதுபோலவே பிரச்சாரப் பாடல் என்ற முத்திரையும், அவற்றில் கலைத்தரம், இசைத்தரம் இருக்காது என்பதைக் கூறாமல் கூறுகிறது. எனவே அவை இரசனைக்கு உரியவை அல்ல என்று முன்னறிவிப்புச் செய்கிறது.

தன்னுடைய ராமன் பொம்மை-ய்ய காவிரியில் தொலைத்து விட்டதற்காகத் தியாகய்யர் கண்ணீர் விட்டெழுதிய பாடல் 150 ஆண்டு-களுக்கு பின்னும் கலைத்தரம் கொண்டதாக நீடிக்க முடியும் என்றால், நேற்று தாமிரவருணியில் முக்கிக் கொல்லப்பட்ட தொழிலாளர்களைப் பற்றிய பாடலில் ஏன் உணர்ச்சியும் கலைத்தரமும் இருக்க முடியாது? அவ்வாறு ஏன் இசையமைக்க முடியாது?

"திருப்பாச்சி அரிவாளை தீட்டிக்-கிட்டு வாடா வாடா" என்று சாதிப் பெருமையை ஊதிவிடும் பாடல் கலைத்தரம் கொண்டதாக இருக்க முடியும்: ஆனால், "வெட்டறிவாள் எடடா" என்ற மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் ஏகாதிபத்திய எதிர்ப்புப் பாடல் கலைத்தரமற்ற பிரச்சாரப் பாடலாகத் தான் இருக்க முடியுமா?

கம்யூனிஸ்ட் இலக்கியத்திற்குக் கலைத்தரம் இருக்க முடியாது. பிரச்-சாரப் பாடலுக்கு இசைத்தரம் இருக்க முடியாது போன்றவை எல்லாம் ஆளும் வர்க்கம் தனது வாய் வழியா-கவும் ஆசனவாய் வழியாகவும் வெளியிடும் கருத்துக்கள்.

அவற்றை எதிர்கொண்டு முறி-யடிப்பதற்குப் பதிலாக "போராட்டம்" புரட்சி செய்ய வேண்டியவர்களுக்கு குரல், துத்தம், தேவையா" என்று கேட்பது ஒரு வகையில் ஆளும் வர்க்-கக் கருத்துக்கு ஒத்து ஊதுவது ஆகும். இன்னொரு வகையில் பார்த்தால் இது தமது அறியாமையையே பெருமை-யாகச் சித்திரித்துக் கொள்ளும் வாய்ச்சவடாலும் கூட.

வாய்ச்சவடால் மூலமே புரட்சி செய்யலாம் என்று நம்புவோருக்கு வேண்டுமானால் இசைக்கருவிகள் தேவைப்படாமல் போகலாம். நமக்குத் தேவைப்படுகிறது.

காதலைப் பாலியல் வெறியாக-வும், மகிழ்ச்சியைக் களிவெறியாட்ட-மாகவும், துயரத்தை விரக்தியாகவும் மடைமாற்றி விடுவதன் மூலம் மக்க-ளின் இசை ரசனையையும் வாழ்வியல் மதிப்பீடுகளையும் அதனூடாகச் சமூக உணர்வையும் சிதைப்பதில் திரையிசை வெற்றி பெற்றுள்ளது.

சந்தையின் ரசனைக்கேற்ப உரு-வாக்கப்படும் இந்த இசையே காலத்-திற்கேற்ற இசை என்று கொண்டாடப்-படுகிறது. இன்னொருபுறம் காலா-வதியாகிப் போன மன உணர்வுகளை வெளிப்படுத்தும் தியாகய்யர் போன்-றோரின் இசை காலங் கடந்த இசை-யாக, திரையிசைக்கு மாற்றாக முன் நிறுத்தப்படுகிறது.

நுகர்வோரை ரசிகராக மாற்று-வதும், அடிமையை சுதந்திர மனிதராக மாற்றுவதுமே நமது இலட்சியம். இதைச் சாதிக்க வேண்டுமெனில் வெகுசன ரசனையின் இசை, மொழியை, அதன் தன்மையை நாம் அறிந்திருக்க வேண்டும். வெகுசன அடிமைத்-தனத்தின் ஆன்மாவையும், விடுதலை வேட்கைக்கான அதன் மொழியையும் நாம் அறிந்திருக்க வேண்டும். இசை நுட்பங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும். இது ஒரு கடினமான ஆனால் அவசியமான பணி.

நாம் காலத்தைக் கைப்பற்ற வேண்டியவர்கள். நமக்குத் தேவை அதற்கான இசை. அந்த வகையில் நம்-முடைய இசை நாம் வாழ்கின்ற காலத்தின் இசையில் குறுக்கிட வேண்-டும். மக்களின் இதயத்தை வெல்ல வேண்டும். "புரட்சிப் போரின் ஒரு சிப்பாய்" தான் நமது இசைப் பாடல் சிப்பாய்க்குப் போரிடத் தெரிந்திருக்க வேண்டும் என்பதைச் சொல்ல வேண்டுமா என்ன?


**– மருதையன்**

**நன்றி: புதிய கலாசாரம்**

◎

# ஒரு வழி மறிப்புக்கு எதிர்ப்புக் குரல்!

பாரதியார் ஒரு கவிஞரல்ல. மஹாகவியோ நீலாவணனோ எழுதியவைகள் கவிதை-களுமல்ல. சேரன், ஜெய-பாலன் உட்பட ஈழக்கவிஞர் பலர் எழுதியதெல்லாம் சிறுகதைச் சித்திரங்களும் சம்பவ விவரிப்பு-களுமே. இந்த அதி அற்புதமான உண்மைகளெல்லாவற்றையும் சரிநிக-ரில் கருணாகரனின் கவிதைகள் பற்றி 'போஸ்' அவர்கள் எழுதிய குறிப்பைப் படித்தவர்கள் கண்டுபிடித்திருப்பார்கள். சம்பவ விபரிப்பு-



களும் கோசங்களும் கவிதைகளல்லத் தான். ஆனால், உணர்-வின் மொழியான கவிதை உருவாகு-வது வெற்றுவெளியில் அல்ல. உணர்வு ஏதோ ஒரு நிகழ்வால், கருத்தால் சலனத்தால் தான் ஏற்படுகின்றது. இந்த உணர்வை கவிதையாக்குவது கவிஞ-ரின் திறனைப்பொறுத்தது. உணர்வு பிறக்கும் அந்த அடிப்படை எத்தக்-கவிதையிலும் புலப்பட்டே தீரும். அது வெளிப்படையாக சில கவிதைகளில் தெரியும். சில கவிதைகளில் அது உள்ளோட்டமாகப் புரியும்.

எந்தக் கவிதையிலும் கவிதை நிகழும் காலமும் சூழலும் துலங்கும். காலமும் சூழலும் துலங்காத கவிதை-கள் இருண்மைக் கவிதைகளாக அமை-ந்து சடுதியாக உதிர்ந்து போகின்றன. எமது சூழலில் இந்தத் தசாப்தத்தில் அதிகமான கவிதைகள் 'இரண்டும் கெட்டான்' தன்மையாக அமைந்து, எழுதிய மை காய்வதற்கு முன்பே மறைந்துவிடும் நிலையில் இருக்-கின்றன. தமிழ்க் கவிதையைப் பொறுத்தோ அல்லது உலகக் கவிதை-களைப் பொறுத்தோ பேச முற்பட்டால் நான் முன்குறிப்பிட்டிருக்கும் காலத்-தினதும் சூழலினதும் துலங்கலை அவ-தானிக்க முடியும்.

ஒரு கவிதையினூடாக தென்னாபிரிக்காவின் கறுப்பர்களின் துயரத்தை அறிந்தோம். ஒரு கவிஞன் மூலமாக பாலஸ்தீனத்தின் கண்ணீரை-யும் கொதிப்பையும் தெரிந்து கொண்-டோம். ரஷ்யாவின் ஸ்ராலின் காலத்-தை கவிஞை அன்னா அக்மத்தேவா மூலம் புரிந்தோம். இந்தக் கவிதை-களிலும் இவ்வாறான கவிதையைத் தந்த கவிஞர்களிலும் சம்பவ விபரிப்பும் சிறுகதைச் சித்திர மொழியும் சொற்-களும் இல்லையா? அப்படி இருப்பதால் கருணாகரனோ அல்லது பிறரோ எழு-தலாம் என்ற நியாயத்தை நான் முன்வைக்கவில்லை. ஆனால், கவிஞ-ரின் மனம் எவ்வாறு உணர்வு பெறுகிற-தோ அது அவ்வாறு தான் கவிதையாக உருப்பெறமுடியும். இது தவிர்க்க முடியாதது. கவிஞர் - அவர் வாழும் சூழல் - அவர் வாழும் காலமும் கவிதை எழுதப்படும் காலமும் - அது வெளியிடப்படும் காலமும் சூழலும் - கவிதையை வாசகர்கள் உள்வாங்கும் முறைமையும் சூழலும் எனப்பலவற்றை மனங்கொண்டு தான் இன்றைய ஈழக்-கவிஞர் தனது கவிதையை எழுத-வேண்டியிருக்கின்றது. இது ஈழக்-கவிஞருக்கு மட்டும் நேர்ந்துள்ள விதியல்ல. உலகம் முழுவதிலும் காலத்-துக்குக் காலம் நிகழ்ந்து வரும் தவிர்க்க முடியாதவாறு அமைகின்ற - ஒரு நடைமுறையுமாகும்.

இந்திய சுதந்திரப் போராட்டம் நிகழ்ந்த போது அதுபற்றிப் பாரதி பாடிய விதத்தைப் படிப்பவர்கள் புரிந்து கொள்ள முடியும். போராட்டம் பற்றிய கனவும், அதன் மகிமையும் சில கவி-தைகளில் பேசப்படுகின்றது. போராட்-டத்தில் ஈடுபடுவதற்கு அழைப்பு விடுக்கின்றார். போராட்டத்தை முன்-வைத்து சுயலாபம் பெறுவோர் பற்றியும் வழிதவறியோர் பற்றியும் அவர் சாடு-கிறார். விடுதலைக் கனவு கருகும்போது அந்தத் துயரத்தை அவர் வெளிப்-படுத்துகின்றார். இவ்வாறான உணர்வு-களைப் பேசும் கவிதைகளில் அன்றைய காலமுகமும் சூழலின் தோற்றமும் நன்கு புலப்படுகிறது. இந்தக் கவிதை-களெல்லாம் கோஷங்களாகவோ விபரிப்புகளாகவோ கதை கூறுபவை போலவோ தான் அமைந்திருக்கின்றன. பாரதியின் கவிதைகள் பலவற்றிலும் கோஷங்களும் சம்பவ விபரிப்புகளும் தானே மேலோங்கியிருக்கின்றன. அவரின் வசன கவிதையைப் போஸ் படித்திருந்தால் அதில் அவர் எவ்வாறு எழுதியுள்ளார் என்பதைப் புரிந்து-கொள்வார். பாரதியின் வசன கவிதை-கள் தமிழில் புதுமையாகவே இன்னும் கருதப்படுகின்றன.

பாரதிமட்டுமல்ல, ஈழத்தின் மிக முதன்மையான கவி ஆளுமைகளாகக் கருதப்படும் மஹாகவி, நீலாவணன், முருகையன், மு.பொ, சு.வி. எல்லோ-ரும் எவ்வாறு தமது கவிதைகளை வெளிப்படுத்தியுள்ளனர்? யாழ்தேவி ரயிலில் விடுமுறையில் கொழும்பி-லிருந்து யாழ்ப்பாணம் வரும் காட்சியை விபரிக்கின்றார் மஹாகவி. நீலாவண-னின் 'பாவம் வாத்தியார்' கவிதையில் ஒரு கிராமத்தில் ஒரு ஆசிரியரின் வாழ்க்கையும் செயற்பாடுகளும் சொல்லப்படுகின்றது. இக்கவிதை-யினூடு நாம் பெறும் உணர்வு சாதார-ணமானதல்ல. எமது சமூகச் சூழலில்



இயங்கும் கவிதையாக இவை இருக்-கின்றன. இதேபோல் சேரனின் 'கானல்-வரி' கவிதையையும் குறிப்பிடலாம். சேரனின் பெரும்பாலான கவிதைகள் நமது சூழலினதும் காலத்தினதும் அடையாளத்தைக் கொண்டமைந்-தவை. 'கானல்வரி'யில் யாழ்ப்பாணத்-தின் இளம்பெண் - சீதனத்தாலும் பிற ஆசாரங்களாலும் வதைபடுவதை மிகச்சிறப்பாக வெளிப்படுத்தியிருக்-கின்றார். இந்த இடத்தில் ஜெயபாலனின் 'உயிர்த்தெழுந்த நாட்கள்' கவிதையும் ஞாபகத்திற்கு வருகின்றது. 1983ல் நிகழ்ந்த இனக்கலவரத்தையும் அதில் சம்பவித்த நிகழ்வுகளையும் சொல்-கிறார் வ.ஐ.ச.ஜெயபாலன்.

மு.பொ. தனது 'வீரத்தைத் தூக்கு' என்ற கவிதையில் பூவரசம்குளம் படுகொலையை விபரிக்கின்றார். இப்படி ஈழக்கவிதைகள் பெருமளவுக்கு இத்தகைய ஒரு பண்பினூடாகவும் கவிதை முறைமையினூடாகவும் வெளிக்கிளம்பி உணர்வின் மொழியாக - கவிதையாக - ஈழக்கவிதைக்கு வளம் சேர்த்துள்ளன.

ஒரு கவிதையைப் படிக்கும்-போது ஒரு பொருளை அல்லது ஒரு நிகழ்வை அல்லது ஒன்றை கவிமனம் உணரும் முறையை நாம் உணருகின்-றோம். இந்த உணர்வு நான் முன்-சொன்னவர்களின் கவிதைகளில் இடம்பெறவில்லையா?

போஸ் வலியுறுத்தும் கவிதை என்பது வெறுமனே சொற் சித்திரங்-களாக அமையும் வரிச்சேர்க்கைகள்-தான். அதற்கு பண்பாட்டின் அடை-யாளம் இருக்காது. காலமும் சூழலும் தெரியாது. வெறும் பிண்டமாக அந்தர-வெளியில் சஞ்சரிக்கும் சொற்களைத்-தான் அவர் வலியுறுத்துகின்றார். பிற-மொழிச் சொற்களை இரவல்பெற்று தனிமனிதனின் உள்ளுணர்வுக் குழை-யல்களென எழுதிக் குவிக்கப்படும் - ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத வரிகளால் நிரப்பப்படும் - கவிதை என்ற வரிகுவியல்கள் கவிதைகளா?

ஈழக்கவிஞர்களின் கவிதைகளில் வாழ்க்கை பேசப்பட்டது. வாழ்க்கை-யைப் பற்றிய நோக்கங்கள் முன்வைக்-கப்பட்டன. இன்றும் இதுவே பிரதான-மான பண்பாக இருக்கின்றது. காலத்-தினதும் சூழலினதும் அடையாளம் இவற்றில் துலங்குகின்றது. இந்தச் சிறப்பம்சங்களால் தான் தமிழகத்துத் தமிழ்க்கவிதைகளைவிட ஈழத்துத் தமிழ்க்கவிதைக்கு முக்கிய இடமும் தீவிர அவதானிப்பும் கிடைத்தது. தமிழகத்தின் பல கவிதைகள் 'உணர்-வின் மொழி' என்று போஸ் கூறும் கவிதைகளாக அமைந்து, பிறந்த-வுடனேயே மரணமடைந்துவிடும் நிலையில் எப்போதும் இருக்கின்றன. இவை அனேகமாக செய்யப்படும் கவிதைகளாக அமைகின்றன. இந்தப் போக்கை நீண்டகாலமாக பல விமர்-சகர்கள் கண்டித்தும் எதிர்த்தும் வந்-துள்ளார்கள். அண்மையில் பா.அகில-னின் கவிதைகளைப் பற்றி எழுதும் போது வெட்கட்சாமிநாதன் கூட இதனை மீளவும் குறிப்பிட்டுள்ளார்.

கவிமனம் ஒரு உணர்வைப்பெறு-வதற்கு ஒரு பொருளோ ஒரு நிகழ்வோ எதுவோ ஒன்று அடிப்படையாகின்றது. சூனியத்தில் எந்த உணர்வும் உருப்-பெறுவதில்லை. உணர்வு உருக்கொள்-ளும் அடிப்படைகளைப் புறக்கணித்தால் போஸ் கூறுவதைப்போல "நடந்த-வற்றிற்கும் தனக்கும் எந்தவித சம்பந்-தமும் இல்லை என்பதான போக்கில்..." படைப்பு இருக்கும். இதுவே படிப்பாளி-யையும் படைப்பாளியையும் 'நெருங்க-விடாமல் அந்நியப்படுத்தி விடுகிறது.

இங்கே போஸ் குறிப்பிடும் இன்னொரு விடயத்தையும் கவனிக்க-வேண்டியுள்ளது. "கவிதை எழுத உந்தும் நிகழ்வுகளுக்கு - உணர்தல்கள் - நேரடியாக முகங்கொடுக்காமல் மூன்-றாந்தரப்பின் மூலம் அதாவது சம்ப-வங்கள், செய்திகளை ஊடகங்களின் மூலம் - கேட்டல் அல்லது பார்த்தல் மூலம் - ஒரு வித மங்கிய உணர்வு நிலையை எய்துதல் அனேக பொழுது-களில் நடந்தவற்றிற்கும் தனக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்ப-தான போக்கில் படைப்பில் இருந்து விலகிநின்று படைப்பாக்கத்தில் ஈடுபடு-தல்" தவறானது என்கிறார். சம்பவங்-களுடன் நேரடியாக இணைந்திருத்தல் அல்லது அவற்றை நேரடியாக நின்று பார்த்தல் மட்டும் தான் படைப்பை எழுத அடிப்படைத் தகுதியாகின்றது என்பது தவறானது. இதனைத் தான் தலித் படைப்பாளர்களும் வலியுறுத்து-கின்றார்கள். தலித்துகளால் மட்டும்தான் தலித் பிரச்சினையை உணரமுடியும் என்பது அவர்களின் வாதம். ஆனால், ஒரு சம்பவமோ, பிரச்சினையோ, துயரமோ அதனை ஒரு படைப்பாளி அந்தத் தளத்துக்கு தன் உணர்வின்-மூலம் பயணித்து அதை முழுமையாக உணர்ந்து தன்படைப்பில் கொண்டு வரமுடியும். படைப்பாளியின் உணர்வு பொதுமையானது. அவன்/அவள் எல்லைகளுள் முடக்கம் கொள்பவன்/ள் அல்ல. இதனால் தான் படைப்பாளி பேதங்களற்றவனாகின்றான்/ள். ஒரு-வரின் துயரத்தை தன் துயரமாக அவன(ள)ால் உணர முடிகின்றது. சகலருக்குமான குரலாக அவன(ள)ால் ஒலிக்க முடிகின்றது. ஒரு நிகழ்வையோ ஒரு பொருளையோ எதன்மூலம் கேட்டாலும் பார்த்தாலும் அறிந்தாலும் ஒரு நேர்த்தியான படைப்பாளி அதனுடன் நேரடியான உறவு கொள்வதான உணர்வுத்தளத்தில் நின்று தன் படைப்பில் இயங்குவார். இதனால்தான் கறுப்பின மக்களின் துயரத்தை வெள்ளையினப் பெண்ணான நடின் கோடிமரால் உணர முடிந்தது. நேரடியாக அனுபவம் கொள்ளாத உணர்வுகள் படைப்பாக்கம் பெறமுடியாது என்றால் ஒரு படைப்பாளி எத்தனை படைப்புகளை அல்லது எத்தகைய படைப்புகளைத் தரமுடியும்? சுயஅனுபவம் மட்டும் தான் படைப்பு என்றால் அது படைப்புக்கு அப்பால் சுயகுறிப்பாக அமைந்து விடும் அபாயமும் அதில் உண்டு.

போஸ் சொல்கிறார்- "சம்பவங்-களை செய்திகளை" என்று. செய்தி என்றால் ஒன்றைப் பற்றிய தகவலா-கிறது. இதனை அவர் உணர-வில்லையா?

ஒரு கவிதையைப் படிக்கும் வாசகர் அந்தக் கவிதையூடாக படைப்-பாளியின் - கவிஞரின் - மனவுலகத்தை உணர்ந்து கொள்கின்றார். அத்தோடு படைப்பாளி இயங்கும் தளத்தை - காலத்தையும் சூழலையும் கூட உணரு-கின்றார். பாலஸ்தீனக் கவிதைகளைப் படிக்கும்போது அவர்களின் பண்பாடும் நிலக்காட்சிகளும் அரசியல் பிரச்சினை-களும் வாழ்க்கைக் கோலங்களும் மனித உணர்வுகளும் புலப்படுகின்றன. நீக்ரோக்களின் கவிதைகள் அவர்கள் பண்பாட்டையும் உணர்வையும் சூழ-லையும் காலத்தையும் உணர்த்த-வில்லையா? இவையெல்லாம் அனே-கமாக வெளிப்படையானவை. சம்பவ விபரிப்புகளாகவும் கதை கூறுவன-போலவும் தோன்றும் உணர்வின் படிமங்களே!

கருணாகரனின் கவிதைகள் முழுவதையும் படிக்க முடியவில்லை. ஆனால், போஸ், குறிப்பிடுவதைப் பார்த்தால் கருணாகரனின் கவிதை-களும் பண்பாட்டின் முகமாகவும் காலத்தின் சுவடாகவும் சூழலின் விபரிப்பாகவும் இணைந்த உணர்வின் மொழியாகவே அமைந்திருக்கும் என நம்புகின்றேன். கருணாகரனின் கவி-தைகளை உதிரிகளாக அவ்வப்போது படித்தவற்றை மனங்கொண்டு பார்த்-தால் கருணாகரன் இக்காலத்தின் உணர்வு நிரம்பிய ஒரு நேரிய கவிஞ-னாகவே செயற்பட்டு வருகின்றார் என்பது திண்ணம். ஆனால், அவர் கவிதைளைப் பற்றிய சரியான மதிப்-பீட்டை காலம் தான் செய்யும்.

**கனக.சுரேந்திரன்**
**வவுனியா.**

நன்றி - நூலகத்திட்டம்

# சிங்கத்து மனை

சி. புஷ்பராஜா

எனது பள்ளிக்கூடத்துக்கும், எனது வீட்டுக்கும் இடையிலுள்ள அந்த சிறிய ஊரின் உட்பகுதியில் இல்லாமல் பல நகரங்களையும், கிராமங்களையும் இணைக்கும் பெரியதொரு வீதியின் ஓரத்தில் - ஊரின் மத்தியிலேயே அமைந்திருந்தது அந்தப் பெரிய வீடு. நான் சிறுவனாக பள்ளிக்கூடம் செல்லும் காலத்திலிருந்தே அந்த வீடு அப்படியேதான் இருக்கிறது. பேய்பிடித்த வீடு என அந்த வீட்டை ஊரில் சொல்வார்கள். சுருக்கமாக அது ஒரு பேய் வீடு ஆகியது. பல காலமாக பராமரிக்கப்படாததால் சிதிலடைந்துபோய், அந்த வீட்டில் எப்போதும் வெளவால்களின் சத்தமும் ஆந்தைகளின் கூவலும் கேட்டுக்கொண்டேயிருக்கும். வீட்டைச் சுற்றிவர பற்றைகளும், புற்புதர்களும் சில புற்கள் ஆளுயரத்துக்கும் வளர்ந்திருக்கும், எல்லோராலும் கைவிடப்பட்ட ஒரு பைத்தியம் பிடித்த கிழவன் போல் அந்த வீடு எனக்குத்தோன்றும்.

நெடுங்காலமாகவே எனக்கு ஒரு ஆசை, அந்த வீட்டுக்குள் போகவேண்டும், அதற்குள் என்ன இருக்கிறது எனப்பார்க்கவேண்டும் என. பிசாசு இவைகளில் எனக்கு எப்போதும் நம்பிக்கையில்லையென்பதுடன் அப்படியொன்றும் பயமுமில்லை. ஆனால், எனது நண்பர்கள் எப்பவும் "டேய் அது பேய் வீடுடா உள்ளே போனால் அவ்வளவுதான் திரும்பி வர முடியாது" என சொல்லி என்னைப் பயமுறுத்திக் கொண்டேயிருப்பார்கள்.

"யாரோ மொட்டை வேலராம், பிள்ளை குட்டிகளோடு நல்லாயிருந்த மனிசனாம்: "ஊரார் கதைத்துக்கொள்வார்கள், அவருடைய வீடுதானாம் இந்த வீடு. இப்போ மொட்டை வேலர் எங்கே? யாருக்கும் விபரமாகத் தெரியாது. அவரது பிள்ளைகள் எங்கே? கேட்டால் ஆளுக்கொரு கதை சொல்லுகிறார்கள். அந்த வீடு மொட்டை வேலருடைய வீடு என்பதைத்தவிர பெரிதாக ஒன்றும் அறிந்துகொள்ள முடிவதில்லை. ஆளுக்கு ஆள் கெட்டதாகவும் நல்லதாகவும் தங்கள் மனது போனபடி மொட்டை வேலரைப்பற்றியும் அவர் குடும்பத்தைப்பற்றியும் கதைப்பவைகள் சில வேளைகளில் எனது காதில் விழத்தான் செய்கிறது.

அடிக்கடி மொட்டை வேலரைப்பற்றி நான் நினைப்பதுண்டு. இந்தப்பெரிய வீட்டில் குடும்பத்துடன் எப்படியெல்லாம் வாழ்ந்திருப்பார்? தனது மனைவி குழந்தைகளுடன் இந்த வீட்டில் அவர் வாழ்ந்த வாழ்வு இனிமையாகத்தானே இருந்திருக்கும். மொட்டை வேலரின் வாழ்வை மீண்டும் மீண்டும் கற்பனை பண்ணிப்பார்ப்பேன். உலகம் பலதும் பேசும் அதுவல்ல என் கவனம், எனது தலையிடியெல்லாம் மொட்டை வேலர் என்ன ஆனார்?


அந்த வீட்டைக்கடக்காமல் நான் எனது வீட்டிலிருந்து எங்கும் போக முடியாது. அப்படி அந்த வழியால் போகும் ஒவ்வொரு முறையும் அந்தப் பேய்வீட்டைப் பார்க்காமல், பார்த்து ஏதாவது கற்பனை பண்ணாமல் போக முடிந்ததில்லை.

இந்நிலையில் தான் அண்மையில் எனது அம்மம்மா மொட்டை வேலர் பற்றியும், அவர் குடும்பம் பற்றியும் அந்த வீட்டைப்பற்றியும் சொன்ன கதைகள் கேட்டு நான் ஆடித்தான் போய்விட்டேன். அம்மம்மாவின் கதை கேட்டபின்பு அந்த வீட்டுக்குள் போகவேண்டும் என்ற என் ஆசை வேகமெடுத்தது.

இன்று அந்த வீட்டுக்குள் போவதென முடிவெடுத்து பற்றைகளையும், மண்டிக்கிடந்த புதர்களையும் அகற்றி உள்ளே நடந்தேன். வெட்டப்படாது இருந்த பற்றைகளும், புதர்களும் உடலில் பட்டு சொறியத்தொடங்கியது. வீட்டை அண்மிக்க துர்நாற்றம் வீசியது. வெளவால்களின், ஆந்தைகளின் சத்தங்களைவிட வேறு வேறு வினோதமான சத்தங்களும் கேட்பதுபோலொரு உணர்வு. முன்வாசலைத் தள்ளித்திறக்க முயன்றேன். நீண்ட முயற்சிக்குப்பின் திறக்க மனமில்லாததுபோல் முக்கி முனகி அனுகலுடன் கதவு திறந்து கொண்டது.

உள்ளே மெதுவாகக் கால் வைத்தேன்.. கண்கள் சுழல்வதுபோல்.. உயிர் குளிர்வதுபோல், உடல் எங்கோ மிதப்பதுபோல்... எல்லாம் குழப்பமாகி, எல்லாமே நானாகி... ஒரு மெய்மறந்த நிலையில்... என்னையே இழந்து.....

"மொட்டை வேலர் நல்ல மனிசன் தான், ஆனால், அவற்ற பிள்ளைகள் சொத்துக்காகவும், சுகத்துக்காகவும் அடிக்கடி அடிபட்டுக்கொள்வார்கள், "அம்மம்மாவின் வார்த்தைகள் எதிரொலிப்பது போலிருந்தது. "கடைசியிலை ஒருத்தனை ஒருத்தன் அடிச்சுச் சாக்கொண்டு மிஞ்சினவன் தலைமறைவாக.. மனம் தாங்காத மொட்டைவேலர் இரவோடு இரவாக ஊரைவிட்டே ஓடியவர் தான். அதன் பிறகு அந்த வீட்டுக்கு யாரும் திரும்பவில்லை...." "அந்த வீடு மோனை உண்மையாகவே பேய்பிடித்த வீடுதான்" உறுதியாக அம்மம்மாவின் வார்த்தைகள்.



குங்குலியப் புகையின் வாசனைபோல் வீடெங்கும் வாசனையாக இருந்தது, மெதுவாக... மேலும் எனது காலடிகளை எடுத்து உள்ளே வைத்தேன். அதொன்றும் பேய்வீடு போல் தெரியவில்லை. அங்கும் இங்குமாக நிதானமின்றி எறியப்பட்ட வீட்டுப்பொருட்கள் கதிரைகள், மேசைகள் என ஒழுங்கீனமாக இருந்ததென்னவோ உண்மைதான். பேய் அமைதி என்பார்கள் அப்படியொரு அமைதி வீட்டில். மேலும் காலடிகளை எடுத்து வைத்து முன்னே சென்றேன்.

"வா தம்பி, நீயர்வது எங்கள் குறைகேட்க வந்தாயே அது போதும்" குரல் கேட்டுத் திடுக்கிட்டு குரல் வந்த திசை பார்த்தேன். நடுத்தர வயதென்று சொல்ல முடியாவிட்டாலும் கிழவியல்ல என்னும் முகம் கொண்ட பெண்ணைப் பார்த்தேன். சோகம் அப்பிய சிரிப்பு. நான் கேட்டேன்... அவள் சொன்னாள்... நான் அறிந்துகொண்டேன். அவள் மொட்டை வேலரின் மனைவி. அந்தம்மாள் நடந்துகொண்டேயிருந்தாள். என்னை வரும்படி கை அசைத்து எங்கே அழைக்கிறாள்? நடுக்கூடம்வரை என்னை அழைத்தவள் பின்பு ஒரு அறையினுள் புகுந்து கொண்டாள். வரவேயில்லை.

சுற்றிவர நோக்கினேன். நல்லாயிருந்த குடும்பம் தான்.. வீட்டுப்பொருட்கள் சாட்சி சொல்லியது. தேக்கமரங்களாலும், வேப்ப மரங்களாலும் செய்யப்பட்ட அழகான வேலைப்பாடுகளைக்கொண்ட கதவுகள் - நிலைகள், யன்னல்கள் எல்லாமே சாட்சி சொல்லியது நல்லாயிருந்த குடும்பம் தான். வேதனை என் மனதைக் கௌவிக்கொள்ள செய்வதறியாது நின்றவேளையில் எங்கிருந்தோ திடீரெனக் கேட்ட அடிதடிபோல் அல்லது சண்டை செய்வது போன்ற சத்தங்கள் என்னைத்தடுமாற வைத்தன. அங்குமிங்குமாகக் காலடிகளை எடுத்து வைக்க முயன்றேன். ஆனால், முடியவில்லை. எனது உடலெல்லாம் ஏதோ செய்வது போன்ற உணர்வு. அடிதடி சத்தத்தைத் தொடர்ந்து இப்போ பெரும் அழுகுரல்கள் கேட்கின்றது. வீட்டின் எந்தப்பகுதியிலிருந்து அழுகுரல்கள் வருகிறதென என்னால் நிதானிக்க முடியவில்லை. கண்கள் மயங்குவதுபோல் கொஞ்சம் கொஞ்சமாக அழுகுரல்கள் அடங்கிக் கொண்டுபோகிறது.

அதோ அந்த வீட்டின் ஒரு மூலையில் அழகிய ஒரு பெண் குந்தியிருந்து விம்மிக்கொண்டிருந்தாள். இதுவரை என் கண்களில்படாத இவள் எப்படி அங்கே வந்தாள்? மெதுவாக நகர்ந்து அவளை அண்மித்தேன். என்னைக்கண்டவுடன் ஓவென்று குரலெடுத்துக் கதறினாள். "இதில் தான் போட்டவன்கள். வெட்டியும், கொத்தியும் கிழித்தும் என் பிள்ளைகளை இங்கைதான் போட்டவன்கள்" அந்தப் பெண் காட்டிய இடத்தைப்பார்த்தேன். அங்கே கம்பளம் விரிக்கப்பட்டிருந்தது. நெற்றியை உயர்த்தி கேள்விக் குறியுடன் அவளைப்பார்த்தேன். "அடப்பாவி நம்பமாட்டாயா, இங்கதாண்டா கொன்று போட்டவங்கள் என் குழந்தைகளை" என கம்பளத்தை தூக்கி கீழே காட்டினாள். திகைத்துப் பதறியது உடல், என்னை அறியாமலே கால்களை பின்னெடுத்து வைத்தேன். அந்தப்பெண் காட்டிய இடத்தில் குண்டும் குளியுமாக இருந்தது. அதில்


நன்றி - நூலகத்திட்டம்



புழுக்களும் வண்டுகளும் பூச்சிகளும் ஓடுவதும் நெளிவதும் தெரிந்தது. "நீயாவது என்னுடன் இரு. என்னைத் தனியே விட்டுப்போகாதே" என தன் இரு கைகளையும் கூப்பி கெஞ்சுவதுபோல் நின்றிருந்தாள். ஏதோ சொல்லவெனத் திறந்த என் வாயிலிருந்து சொற்கள் வரவில்லை. அவளின் தலையை எனது கைகள் வருடிக்கொண்டிருப்பதை உணர்ந்தேன்.

குதிரைகள் ஓடுவது போல அதன் குளம்பு சத்தங்கள் அடிக்கடி அந்த வீட்டின் புறப்பகுதிகளில் கேட்டுக்கொண்டிருந்தன. திடீர் திடீர் என எருமைகள் வந்து போவதுபோலவும் எனக்கு ஒரே குழப்பமாக இருந்தது. நிதானித்து சத்தங்களை ஒழுங்காக கேட்டேன். ஆம், இரண்டும்தான். குதிரைகள் எங்கும் ஓடவில்லை. இங்குதான் இந்த வீட்டைச்சுற்றித்தான் ஓடிக்கொண்டிருக்கிறது. எருமைகளும் இந்த வீட்டைச்சுற்றித்தான் ஓடிக்கொண்டிருக்கிறது. மீண்டும் பலர் சண்டையிடுவது போலவும், பின் பல குரல்கள் அழுவதுபோலவும் இந்த வீட்டுக்குள் கேட்டுக்கொண்டேயிருக்கிறது. என்னால் பொறுத்துக்கொள்ள முடியாமலுள்ளது. மொட்டை வேலரின் மனைவி இங்கிருப்பின் மொட்டை வேலரும் இங்குதான், இந்த வீட்டில் தான் எங்காவது ஒரு இடத்தில் இருப்பார். இந்த வீட்டில் என்ன நடக்கிறது என அவரைப்பார்த்து கேட்க வேண்டும் - அறிய வேண்டும்.

பெரியதொரு வீடுதான். நடக்க நடக்க முடிவில்லாத நடைபாதைகளும், பக்கவாட்டுகளில் நிறைய அறைகளுமாக எங்கே நிற்கிறேன். எனக்குத் தெரியவில்லை? ஒரு மூலையில் திரும்பிய பொழுது அங்கும் ஒரு பெண் அழுது கொண்டிருந்தாள். என்னைக் கண்டதும் கை எடுத்துக் கும்பிட்டு ஏதோ பேசுகிறாள். அவள் பேசுவதை என்னால் புரிந்துகொள்ள



முடியவில்லை. என்னைக்கட்டியணைத்து வெதும்புகிறாள். அவளது வார்த்தைகள் புகைசூழவரும் மந்திரம் போல் ஒலிக்கிறது. என்னுடன் முதல் பேசிய பெண் இருக்கும் இடத்தைக்காட்டி ஏதோ சொல்கிறாள். திட்டுவதுபோலவும் தெரிகிறது. அவள் பொய் சொல்லுகிறாள் என சைகை மூலம் சொல்லுகிறாள். தனது உடலில் உள்ள காயங்களைக் காட்டுகிறாள். என்னை இழுத்துக்கொண்டு ஒரு அறைக்குள் போனவள் அங்கு சுட்டிக்காட்டிய இடத்தைப்பார்த்தேன். அங்கும் பூச்சிகளும், புளுக்களும் வண்டுகளுமாக, எனக்கு இப்போ வியர்த்து கொட்டத் தொடங்கியது. அந்தத் தாயின் முகத்தை உற்று நோக்கினேன். மீண்டும் கையெடுத்துக் கும்பிட்டு ஏதோ யாசிக்கிறாள். அவளது பயத்தை, அவளது வேதனையை, அவளது வேண்டுதலை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. அவளை அணைத்து ஆதாரமாக அவளின் முதுகில் தட்டிக்கொடுத்தேன்.

மொட்டை வேலர் அனைவராலும் மதிக்கப்பட்ட மனிதர். தேவையில்லாத பிரச்சினைகளில் தலையிடமாட்டார். தேவையிருந்தால் மட்டுமே வீட்டைவிட்டே வெளியே வருவார். இரக்கமுள்ள மனிதன். ஊருக்குள் நடந்து வந்தாரென்றால் ஒரு கம்பீரமாகத்தான் இருக்கும். அந்த ஊரிலேயே பெரும் பணம் படைத்தவராகவிருந்தார். பிள்ளைகள் வளரும் வரை மொட்டை வேலர் சந்தோசமாகவும், மற்றவர்களுக்கு உதவி செய்பவராவும் தான் வாழ்ந்தார். அம்மம்மா மொட்டை வேலர் பற்றி இப்படி பல விடயங்களைக் கதை கதையாகச் சொல்வாள்.

யார் அந்தப் பெண்? உடுத்தியிருந்த சேலைத் தலைப்பால் முக்காடிட்டு மெலிந்த தோற்றத்துடன் அந்தப் பெண் துயரமே உருவமாகக்கொண்டு பேச வாயெடுத்த போது மூச்சுத்திணறினாள். அடைத்த குரலில் "எல்லோரும் சேர்ந்து என் பிள்ளைகளைக் கொன்று போட்டான்கள்" என சொல்லியழுதாள். அவளும் ஒரு அறையைச் சுட்டிக்காட்டினாள். மெதுவாக எட்டிப்பார்த்தேன். கிழித்து எறியப்பட்ட சாறங்களும், தொப்பிகளும், கைக்குட்டையுமாக குவிந்து கிடந்தது. அவைகளுக்கிடையே பூச்சியும், புழுவும் வண்டுமாக... எனக்குத் தலையைச் சுற்றியது. நெஞ்சு அடைத்துக் கொண்டு வந்தது. எப்படியாவது மொட்டை வேலரைச் சந்தித்து அவரது வீட்டுக்குள் நடக்கும் துயரங்களை சொல்லி ஆறவேண்டுமென புறப்பட்டேன்.

முடிவில்லா நடை, வீடு பூராகவும் நடக்கிறேன். எங்கும் ஒழுங்கீனமாகவே இருக்கிறது. எடுத்தது எடுத்தபடி, எறிந்தது எறிந்தபடி. எல்லாம் கடந்து நடக்கிறேன். திடீரென எங்கிருந்தோ வேப்பம் பூவின் மணம் கமழ வாசனை வருகிறது. அந்த இடத்தில் நின்று நிதானித்தேன். வேப்பம் பூ வாசனை மட்டுமல்ல, கற்பூர வாசனை, சாம்பிராணி வாசனை என எல்லாம் கலந்த அல்லது ஒன்றன் பின் ஒன்றாக வாசனை வரும் திசையை நோக்கினேன். அங்கே ஒரு அறையிருப்பது தெரிந்தது. மெல்ல அறையின் கதவைத்திறக்க முயன்றேன்... சுலபமாகத் திறந்து கொண்டது. அங்கே நான் கண்ட காட்சி என்னை அதிர வைத்தது. கால்களை மடித்து, மடித்த முழங்கால்களின் மேல் கைகளை நீட்டி விரித்து வைத்தபடி நிஷ்டை நிலையில் இருக்கும் மனிதன் யார்...? நிச்சயமாக அது மொட்டை வேலர்தான். அவரின் கண்களிலிருந்து கண்ணீர்த் துளிகள்... உற்றுப்பார்த்தேன். இல்லை.... இரத்தம் கண்ணீராக வடிகிறது. "ஐயா" என உரக்கக் கத்தினேன்.

என் உடலெல்லாம் ஏதோ கொத்தியது போல் சிறிய சிறிய காயங்கள். வெளவால்கள் உரத்துக் கீச்சிட்டு அங்கும் இங்கும் பறந்து கொண்டிருந்தன. வாசற் கதவைக் காலால் உதைத்து வெளியேறினேன்."அது பேய் வீடுடா, அது சிங்கத்து மனையடா, வாழ்வைத் துலைத்து நாசமாய்போன இடமடா..." அம்மாவின் குரல் என் காதுகளில் ஓங்கி ஒலித்தது.

◎

மேடு பள்ளமான றோட்டில் பிரயாணிகளை தாலாட்டிக் கொண்டு நகரும் பஸ். அதில் தூங்கி வழிந்து கொண்டு வருபவர்களும், ஆந்தையைப் போல் விழித்துக் கொண்டு இருக்கும் மனிதர்களுமென பல்வகை மனிதர்கள். அந்த பஸ்ஸில் பிரயாணம் செய்யும் ஒரு இளம் குடும்பஸ்தர். அவருக்கு அருகில் ஒரு வயோதிபர்.

அந்த வயோதிபரால் நிமிர்ந்து இருக்க முடியாமல் தூங்கி வழிந்தபடி வாய்க்குள் புகையிலையை போட்டுக் குதப்பியபடி, இடைக்கிடை அந்தக் குடும்பஸ்தர் மீது சரிந்தார். இடையே ஒரு முறை எழும்பி இளம் குடும்பஸ்தரையும் தாண்டி பஸ்ஸிற்கு வெளியில் குதப்பலைத் துப்புகின்றார். இதனால் அரியண்டப்பட்டு முகத்தைச் சுழிக்கிறார் இளம் குடும்பஸ்தர்.

மீண்டும் சாய்ந்து விழுகிறார் வயோதிபர். அவரைக் கையால் தள்ளி விடுகிறார் குடும்பஸ்தர். தொடர்ந்தும் பஸ் போய்க் கொண்டிருக்கிறது. முடங்கிய தலையுடன் தூங்கி வழிந்து கொண்டிருந்த வயோதிபர் பஸ்ஸின் ஆட்டத்திற்கு ஏற்ப ஆடிக் கொண்டிருந்தார். நேரம் போய்க் கொண்டிருந்தது. இதனால் எரிச்சலைடைந்த இளம் குடும்பஸ்தர். திரும்பி வயோதிபரைப் பார்க்கிறார். அவருக்கு ஏதோ சந்தேகம் ஏற்பட வயோதிபரின் முகத்தில் கையை வைத்துப் பார்க்கிறார். மூச்சில்லை. அந்த வயோதிபர் இறந்து விட்டார். அதிர்ச்சிடைந்த குடும்பஸ்தர் கூப்பாடு போடுகிறார். சடலம் அநாதைப் பிணமாக ஆஸ்பத்திரியில் வைக்கப்படுகிறது. குடும்பஸ்தர் பொலிசாரினால் விசாரிக்கப்படுகின்றார். பிரேத பரிசோதனை அறிக்கை இருதய நோயினால் மரணம் என்று வருகின்றது.

வீட்டுக்கு வரும் இளம் குடும்பஸ்தர் தன் மனைவியிடம் எல்லாவற்றையும் சொல்கிறார். மனைவி அதைக் கேட்டு அழுகிறாள். தனது அண்ணனும் இதே போல் விபத்தில் இறந்த போது 3 நாட்களுக்குப் பின்பு தான் வீட்டுக்கு தகவல் தெரிந்ததாகவும், அதுவரை தாங்கள் பட்ட வேதனைகளையும், தனது அண்ணன் ஒரு அனாதைப் பிணமாக மருத்துவ மனையில் வைக்கப்பட்டிருந்தார் என்றும் சொல்லி அந்த நிமிடங்களில் அவர்கள் அடைந்த வேதனை நினைத்து அழுகிறாள். அதேநேரம் வயோதிபரின் உறவினர்கள் இதே மாதிரித் தான் கவலையடைவார்கள். அதனால் அவ்வயோதிபரின் உறவினர்களை எப்படியாவது தேடிக் கண்டுபிடித்து விடயத்தைக் கூறும்படி சொல்கிறாள்.

அந்த வயோதிபரின் பையில் 2.85 சதம் பணம் மட்டுமே இருந்தது. அவர் பற்றிய தகவல்களை அறிவதற்கு வேறு எந்த தடயங்களும் இல்லை. பொலிசார் பத்திரிகையில் ஒரு அறிவித்தலை வெளியிட்டதோடு தங்கள் கடமை முடிந்து விட்டதாக நினைக்கிறார்கள். அவ்வயோதிபரைத் தேடி யாரும் வரவுமில்லை.

இந்நிலையில் கடைசியாக மனைவியின் வேண்டுதலுக்காக அவ்வயோதிபரின் சேட் கொலரில் இருக்கும் ரெயிலர் கடையின் விலாசத்தைத் தேடிச் செல்கின்றார் இளம் குடும்பஸ்தர். அதை வைத்து அந்த வயோதிபரின் வீட்டை மிகுந்த கஷ்டத்தின் பின் கண்டு பிடிக்கிறார்.

அந்த வீட்டில் வயது முதிர்ந்த பெண்மணியும், திருமணமாகாத மகளும் வசிக்கிறார்கள். வந்த இளம் குடும்பஸ்தருக்கு சங்கடமான நிலைமை. அவர் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு தான் அந்த வயோதிபருக்குத் தெரிந்தவர் என்றும் அவரைச் சந்திக்க வந்திருப்பதாகவும் தெரிவிக்கின்றார்.

அப்போது அப்பெண்மணி (வயோதிபரின் மனைவி) கதைவாக்கில் தனக்கு வயது வந்த மகள் ஒருத்தி இருப்பதாகவும், தனது கணவர் ஒரு சூதாட்டக்காரர் என்பதோடு அவரால் தங்களுக்கு பிரயோசனம் இல்லை என்றும் அவர் அடிக்கடி சொல்லாமல் கொள்ளாமல் எங்கேயாவது போய்விட்டு பல நாட்கள் கழித்து வீட்டுக்கு திரும்பி வருவதாகவும் தெரிவித்த அதேவேளை இரண்டு நாட்களுக்கு முன் போனவர் இன்னும் வீடு திரும்பவில்லை என்றும் தெரிவிக்கின்றாள்.

தான் திருமண வீடு போன்ற விஷேசங்களுக்கு சமைத்து வாழ்க்கையை ஓட்டுவதாகவும் தெரிவிக்கும் அப்பெண்மணி, அவரால் தனக்கு கிடைத்தது பூவும் பொட்டும் தான் என்றும் அதனால் தான் விஷேசங்களுக்குச் சென்று சமைக்கக் கூடியதாக இருப்பதாகவும் தெரிவிக்கிறார்.

வந்தவர் தான் சொல்ல வந்த வயோதிபரின் மரணத்தை சொல்லாமலேயே செல்கின்றார்.


- இது பாலுமகேந்திராவின் 'கதைநேரம்' குறுநாடகத்தின் கதை.

▼ ▼ ▼

தமிழில் புகழ் பெற்ற ஒளிப்பதிவாளர், இயக்குநர் பாலுமகேந்திராவை எல்லோருக்கும் தெரியும். தனது கமரா திறமை மூலம் சிறந்த ஒளிப்பதிவாளரான இவர், சிறந்த இயக்குநராகவும் பின்னர் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டார். மூன்றாம்பிறை, அழியாத கோலங்கள் போன்ற வர்த்தக ரீதியான திரைப்படங்களையும், சந்தியாராகம், (இது ஒரு தொலைக்காட்சித் திரைப்படம்) வீடு போன்ற நல்ல திரைப்படங்களையும் நமக்குத் தந்தவர் இயக்குநர் பாலுமகேந்திரா.

வீடு, சந்தியாராகம், போன்றன சிறந்த படைப்புகள் என்பதோடு, எந்த வித சமரசங்களுக்கு அப்பால் உருவானவை என்றும் சொல்ல வேண்டும்.

தற்போது இவர் சின்னத்திரைப் பக்கமாக தனது கவனத்தைத் திருப்பியுள்ளார். இந்தியாவின் சண் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகிக் கொண்டிருக்கும் பாலுமகேந்திராவின் சின்னத்திரை தொடர் 'கதை நேரம்'. இதை சக்தி தொலைக்காட்சியின் ஊடாக இலங்கை மக்களும் பார்க்கக் கூடியதாக உள்ளது. ஒவ்வொரு திங்கட் கிழமையும் இரவு 7.30க்கு ஒளிபரப்பாகின்றது.




சக்தி தொலைக்காட்சி ஊடாக நிறையத் தொடர்கள் ஒளிபரப்பப்பட்டாலும் அவை இந்திய மசாலா சினிமாவிற்குச் சற்றும் சளைத்தவை அல்ல. அதனால் அவை பற்றிப் பேசுவது அர்த்தமற்றது. ஆனால் சினிமாவில் நம்பிக்கைக்கு உரியவர்களாய் கொள்ளப்பட்ட இரு இயக்குநர்கள் தற்போது சின்னத்திரை பக்கமாக தங்கள் கவனத்தை செலுத்தத் தொடங்கியிருப்பதால் அவை பற்றி அக்கறை கொள்ளல் அவசியமானது. ஒருவர் பாலசந்தர். மற்றவர் பாலுமகேந்திரா.

பாலசந்தர் பற்றி அதிகம் சொல்லத் தேவையில்லை. அவரின் தொடர்கள் வழமையான மசாலாத் தனங்களுக்கு சற்றும் சளைத்தவை அல்ல. ஆனால் அதில் ஒரு நேர்த்தி இருக்கும். அவ்வளவு தான். அவர் சிறந்த இயக்குனர். சிறந்த படைப்பாளி அல்ல. இதற்கு அவரது கையளவு மனசு, ஜன்னல், மர்மதேசம் போன்றவை நல்ல உதாரணம்.

பாலசந்தர் பிராமணியத்தினதும், பிராமணியம் கட்டமைத்த தமிழ் கலாசாரத்தினதும் ஒட்டுமொத்தமான காவி. பிரச்சினைகள் என்று வரும் போது மதம், கலாசாரம், சூழல், நம்பிக்கைகள், முற்போக்கு, பெண்விடுதலை எல்லாவற்றையும் போட்டு திணித்து அச்சாறு செய்து கடைசியில் முடிவைத் தராமலே (தராத முடிவுக்குள் பிராமணியத்திற்கு ஆபத்தில்லாத அவரது முடிவு இருக்கும்) போபவர். பிராமணிய கட்டுமானத்தை நாசூக்காக நிறுவுபவர். அதனால் சின்னத்திரை என்ற வகையில் பாலசந்தர் எதையும் சாதிக்கவில்லை. சிறந்த படைப்புகள் எதையும் தரவுமில்லை. அதனால் அவரை விட்டு விடுவோம்.

பாலுமகேந்திரா சற்று வித்தியாசமானவர். அவர் எதையும் வலிந்து திணிப்பது இல்லை. பாலசந்தர் போல் எல்லாவற்றையும் குழப்பி அச்சாறு செய்பவரும் அல்ல. எதையும் நோக்கி கேள்வி எழுப்புவதற்கும், நியாயமான அடுத்த அடியை வைப்பதற்கும் தயங்குபவர் என்று சொல்லலாம்.

உதாரணமாக அவரின் கதைநேரம் தொடர் ஒன்றில் வேலைக்குச் செல்லும் ஒரு பெண். அவள் ஒருநாள் வேலை விட்டு வரும் போது பஸ் கிடைக்கவில்லை என்பதால் சக ஊழியர் ஒருவரின் மோட்டார் சைக்கிளில் வீட்டில் வந்து இறங்குவாள். இதனைப் பார்த்து ஆத்திரமடையும் கணவன் அவள் மீது சந்தேகம் கொள்வதோடு, வாய்க்கு வந்தபடி திட்டுவதோடு அவளை அடிக்கிறான்.

இதனால் வேதனை அடைகின்ற அவள் சில நாட்கள் அவள் தன் தாய் வீட்டிற்கு போய்விடுகின்றாள். இதன் பின்பு தன் தவறை உணர்ந்து அவளை அழைத்து வரச் செல்கிறான் அவள் கணவன். அவளிடம் போய் sorry என்கிறான். அவள் மனதிற்குள் நினைக்கிறாள். "நீங்கள் எதை வேண்டுமானாலும் செய்வீர்கள். sorry என்ற வார்த்தையையும் விரும்பினால் சொல்லுவீர்கள் இல்லாதுவிட்டால் அதுவும் இல்லை. ஆனால் நீங்கள் கூப்பிட்டவுடன் உங்கள் பின்னால் உடனே வரவேண்டும். இது என்ன நியாயம்.இன்னும் எவ்வளவு காலத்திற்கு தான் அடிமைப்பட வேண்டுமோ" என்று அவள் சிந்திப்பதுடன் தொடர் நிறைவுறுகிறது.

இதில் அவளின் உணர்வுகள் யதார்த்தமானவை. ஆனால் அதை அவள் நேரடியாகவே அவனிடம் கேட்பதைப் போன்றோ அல்லது அவளின் உணர்வுகள் சரியானவை என்பது பற்றியோ எந்த காட்சி அமைப்பும் உருவாக்கப்படவில்லை. இது ஏன்?

முதல் தொடரில் பூவும் பொட்டுக்குமாக யதார்த்தம் என்கிற ரீதியில் சமரசம் செய்வதைப் போல், இதில் அவளின் உணர்வுகளைச் சொல்வதோடு நழுவுகின்றார். அதாவது யதார்த்தம் என்ற போர்வையில் சமரசம் செய்து கொள்கிறாரா என்று எழும் கேள்வியைத் தவிர்க்க முடியவில்லை. இவற்றுக்கெல்லாம் அப்பால் சிந்திக்கும் சக்தி இழந்தவரா அல்லது சொல்லும் சக்தி இழந்தவரா என்பது அவருக்கே வெளிச்சம்.

ஆனால் பாலசந்தர் போல் பிராமணிய கட்டுமானங்களில் நின்று புருஷனை கடவுளாக்குகின்ற (இதற்கு நல்ல உதாரணம் ஜன்னல் தொடரில் வரும் உதாரண புருஷி) வேலை பாலுமகேந்திராவிடம் இல்லை என்பது ஆறுதலான விடயம். யதார்த்தம் இது தான் அவருக்கான தளம்.

ஆனால் அவர் அதையும் தாண்டி நல்ல படைப்பக்களைத் தர வேண்டும் தருவாரா?

- ரமா

நன்றி - நூலகத்திட்டம்



# நஞ்சினில் விளையயவோ?

## ஒரு வீதி நாடகமும் சில குறிப்புகளும் பற்றிய - எனது அவதானங்கள்

'நஞ்சினில் விளையயவோ' ஒரு வீதி நாடகமும் சிலகுறிப்புகளும் எனும் கட்டுரையை சரிநிகரில் பார்த்த போது அந் நாடகம் சம்பந்தமாகவும் அக்கட்டுரை சம்பந்தமாகவும் பின்வரும் கேள்விகள் எழுகின்றன.

1. இவ்வீதி நாடகத்தின் கலையம்சத்தினை பார்வையாளர்கள் மறக்க முடியாத ஒரு கலை அனுபவமாகக் கொண்டனரா?

2. இவ்வீத் நாடகக்கருத்து மட்டக்களப்பு மக்களுக்கு எவ்வளவு துாரம் பொருத்தமானது? அது சுட்டி நிற்கும் அரசியல் என்ன?

. 3. கட்டுரையாளர் மட்டக்களப்பு எனக் குறிப்பிடுவது எந்தளவு பிரதேசத்தினை?


இக்கேள்விகளை அடிப்படையாகக் கொண்டு எனது அனுபவத்தை, புரிதலை எழுதுகின்றேன்.

வீதியில் வைத்து ஒரு கதையை, அல்லது பிரச்சினையை குறிப்பிட்ட நடிகர்கள் பேசியோ, பாடியோ, ஆடியோ வெளிப்படுத்தினால் மட்டும் அது வீதி நாடகம் ஆகிவிட முடியாது. எவ்வாறு கமரா மூலம் படம்பிடிக்கப்பட்டதெல்லாம் சினிமாவாகிவிட முடியாதோ அதேபோலத்தான் இதுவும். மேடையில் நிகழ்த்தப்பட்ட நாடகம் எதற்காக வீதிக்கு வந்ததோ அந்த நோக்கம் வீதி நாடகத்தில் முதலில் நிறைவேற வேண்டும். அந்த நோக்கம் நிறைவேறவில்லையென்றால் அது வீதியில் நிகழ்த்தப்பட்ட மேடை நாடகம் தான். வீதி நாடகத்தின் ஒவ்வொரு அளிக்கையிலும், பார்வையாளர்களும் நடிகர்களும் அதன் நோக்கம் நிறைவேறியுள்ளதா எனும் விடயத்தில் திருப்திப் பட்டுக்கொள்ள வேண்டும். 'நஞ்சினில் விளையவோ' பார்வையாளர்களுக்கு அவ்வாறானதோர் திருப்தியை ஏற்படுத்தியதா என்றால் இல்லை என்றுதான் கூறவேண்டும். இதற்குக் காரணம் அது மக்களைக் கவர்ந்து கொள்ளக்கூடிய வீதி நாடகப்பண்புகளை கலையம்சமாகக் கொண்டிருக்காததாகும். வீதி நாடகத்தின் இக்கலையம்சம் தான் அது மக்களை தன்னுள் ஈர்த்து தனது கருத்தை மக்களுக்கு மிக உறுதியாக முன்வைக்க, மக்களை அது சம்மந்தமாக ஒன்றிணைக்க, செயற்படவைக்க உதவுகின்றது. அதாவது இங்கு ஒரு கருத்தை மக்களிடம் கொண்டு செல்லுதல் என்பதிலும் மேலாக அந்தக் கருத்துடன் பார்வையாளர்களை அடையாளம் காண வைத்து அந்த ஆற்றுகையில் அவனுடைய உணர்வு பூர்வமான பங்குபற்றலையும் வளர்த்தெடுக்க வேண்டும். இந்த நடைமுறை இல்லாது வீதியில் சனத்தைக்கூட்டி ஒரு கருத்தை ஒப்புவித்துவிட்டு நடிகர்கள் சனங்களுடன் உரையாடினால் அது மக்களை ஈர்த்த ஒரு நல்ல வீதி நாடகம் எனக் கொள்ள முடியாது. அவ்வாறானால் சனத்தைக்கூட்டி மருந்து விற்பவனுடைய செயற்பாடுகளையும் நல்ல வீதி நாடகம் எனத்தான் கொள்ள வேண்டும். நஞ்சினில் விளையவோ அவ்வாறானதோர் மருந்து விற்பனை தான்.

ஒரு நல்ல கலைப்படைப்பு ஒரு முறை மட்டும் அனுபவிப்பதற்குரியதொன்றல்ல. தொடர்ந்தும் அக்கலைப்படைப்பை சுவைக்கக்கூடிய மனோபாவத்தை துாண்டுவதாக அக்கலைப்படைப்பு இருக்க வேண்டும். 'நஞ்சினில் விளையவோ' இவ்வாறு மீண்டும் மீண்டும் பார்க்கத் துாண்டுகின்ற கலைப்படைப்பாக இல்லை. இதற்கு நல்ல உதாரணம் 04.04.2000 அன்று கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற உலக நாடகதின விழாவின் போது கிழக்குப் பல்கலைக் கழக பிரதான மண்டபத்துக்கு எதிரேயுள்ள வீதியில் அளிக்கை செய்யப்பட்டது. அப்போது பார்வையாளர்கள் நிறைந்து பார்த்துக் கொண்டு நின்றனர். இங்கு பார்வையாளர்களின் எவ்வித உணர்வுபூர்வமான பங்கு பற்றலுமே காணப்படவில்லை. இவ்வளிக்கை முடிந்ததும் பார்வையாளர்கள் கூத்து நிகழ்த்தப்படவிருக்கும் கூத்துக் களரியைச் சுற்றிக்கூடினர். அப்போது கூத்தின் நிகழ்த்துகை காலதாமதமாக்கப் பட்டு கூத்துக்களரிக்கும் பக்கத்தில் மீண்டும் இவ் நஞ்சினில் விளையவோ' வீதி நாடகம் நிகழ்த்துகை செய்யப்பட்ட போது கூத்துப் பார்க்கக் கூடியிருந்த பெருமளவிலான பார்வையாளர்கள் அதனை மீண்டும் பார்க்க விருப்பமில்லாமல் எழுந்து சென்றனர். இந்நாடகத்தின் மக்கள் ஈர்ப்பின் தோல்வியை இதைவிடவேறு அளவு கோல்கள் கொண்டு பார்க்க முடியாது எனக் கருதுகின்றேன்.

எனவே கலைப்படைப்பு சம்பந்தமான குறிப்புகளை எழுதுவோர் அக்கலைப்படைப்பின் சகல கலை ஆளுமைகளையும் கண்டு அனுபவித்து எழுதும்போது வாசகர்களுக்கு அக்கலைப்படைப்பு சம்பந்தமான உண்மையான பிம்பத்தை வழங்க முடியும்.

இவ்வீதி நாடகக்கருத்து மட்டக்களப்பு மக்களுக்கு எந்தளவுதுாரம் பொருத்தமானது? அதன் அரசியல் என்ன? என நோக்குகின்றபோது இலங்கை வாழ் மக்களின் பொதுவான பிரச்சினைகளோடு மட்டக்களப்புச் சமூகத்துக்கென்ற தனித்துவமான பிரச்சினைகளும் உண்டு. இதில் எதை அச்சமூகத்தின் பிரதான பிரச்சினையாக ஒரு கலைஞர் பார்க்கின்றார்.



அது, பார்க்கப்படும் முறைமை யாது? என்பது அவருடைய அரசியல் நிலைப்பாட்டைப் பொறுத்த விடயமாகும். ஒரு போராட்ட சூழலில் மூன்றுவிதமான அரசியல் நோக்குக்கொண்ட கலைஞர்கள் இருப்பார்கள்.

முதலாவது வகையினர் அச்சூழலில் வாழும் மக்களின் உண்மையான பிரச்சினைகள் பற்றி புரட்சிகர மனோபாவத்துடன் பேசுபவர்கள்.

இரண்டாவது வகையினர் அந்தச் சூழலில் வாழும் மக்களின் பிரச்சினைகள் பற்றிப்பேசாமல் அந்த மக்களுடைய உணர்வுகளை மதிக்காமல் மக்களின் பிரச்சினைகளுக்கு எதிர்மாறான பிரச்சினைகள் பற்றிப் பேசுபவர்கள்.

மூன்றாவது வகையினர் முதலிரு வகையினரின் எந்தப்பக்கமும் சாராமல் ஊசலாடிக்கொண்டு அம்மக்களின் உண்மையான பிரச்சினைகளைத் திரிபுபடுத்தி தாம் பிரச்சினைகளாகக் கருதுவதை அந்த சூழலில் வாழும் மக்களுடைய பிரச்சினைகளாக வெளியுலகத்துக்குக் காட்டுவர், அந்த மக்களுடைய உண்மையான பிரச்சினைகளை மூடிமறைப்பதும் அவ்வாறு மூடிமறைப்பதன் ஊடாக உண்மையான பிரச்சினைகளுக்குரிய காரணங்களை அல்லது காரணகர்த்தாக்களை பாதுகாப்பதும் இவர்களுடைய நோக்கமாகும்.

இரண்டாவது பிரிவினரைவிட மூன்றாவது பிரிவினரே ஒரு புரட்சிகர சமூகத்துக்குள்ளிலிருந்து வேர் அறுக்கும் பகைவர்களாவர். இரண்டாவது பிரிவினர் புத்திசாதுர்யமாக தொழிற்பட தெரியாதவர்கள். மூன்றாவது பிரிவினரோ புத்திசாதுர்யமாக தொழிற்படக்கூடியவர்கள்.

'நஞ்சினில் விளையவோ' இவ்வாறு புத்திசாதுர்யமாக தொழிற்பட எடுத்த ஒரு முயற்சி தான்.

தண்ணீரின்றி இறக்கும் தறுவாயில் உள்ள ஒருவருக்கு தண்ணீர்தான் முக்கியமே தவிர. தண்ணீரிலுள்ள நஞ்சுத்தன்மைகள், பூச்சி, புழுக்கள் பற்றி உபதேசம் அல்ல. தண்ணீரின்றி இறப்பவருக்கு தண்ணீர் பற்றிய உபதேசம் எவ்வளவு முட்டாள்தனமோ அதைத்தான் நஞ்சினில் விளையவோ' வீதி நாடகமும் செய்தது.

மட்டக்களப்பு ஒரு தன்னிறைவுப் பொருளாதாரம் கொண்ட பிரதேசமல்ல. அதன் தலாவருமானம், எழுத்தறிவு வீதம் என்பன மிகத்தாழ்ந்த நிலையிலேயே உள்ளன. எனவே இங்கு உணவில் நஞ்சுபற்றி உபதேசிக்க முதல் உணவுக்கான வழிவகைப் பற்றிப் பேச வேண்டும். அவ்வாறு பேசுகின்ற போது இப்பிரதேசத்தின் வறுமை, அந்த வறுமைக்கான காரணங்கள் என்பன பற்றியெல்லாம் பேசவேண்டிவரும். அவ்வாறான பேச்சுக்கள் சில அதிகார மையங்களை கேள்விக்குட்படுத்தும், கூடவே வறுமைக்குத் தீர்வாக நெறியாளரின் உபதேசத்தை அவிழ்த்து விட்டிருக்கலாம். இது தர்க்கரீதியாக ஒரு கருத்தை முன்வைப்பதுடன் மக்களுடைய இன்றியமையாப் பிரச்சினை பற்றிப் பேசுவதாகவும் அமையும். ஆனால், இந்நாடகம் பற்றி குறிப்புக்கள் எழுதிய கட்டுரையாளர் இவைபற்றி கண்டுகொள்ளாது "நவகாலனியத்தினதும் பல்தேசியக் கம்பனிகளினதும் சுரண்டல்களுக்கு எதிரான உள்ளார்ந்த எதிர்ப்புணர்வு தான் 'நஞ்சினில் விளையவோ' எனலாம் என்பது தான் ஆச்சரியமானதாகும்.

கட்டுரையாளர் கண்டுபிடித்த இந்த வியத்தகு கண்டுபிடிப்புகள் பார்வையாளர்களால் உணர்ந்து கொள்ளப்பட்டிருக்குமாயின் அந்தளவிலாவது நாம் சந்தோசப்பட்டுக் கொள்ள முடியும். ஆனால், சுரண்டலை ஊக்குவிக்கும் வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் பற்றியே அல்லது சுரண்டலுக்குக் காரணமான அரசின் முதலீட்டுக்கொள்கை பற்றியோ அல்லது ஏகாதிபத்திய பல்தேசியக்கம்பனிகள் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளை சுரண்டும் முறைமை பற்றியோ நாடகத்தில் எங்காவது ஓரிடத்திலேனும் கேள்விக்குட்படுத்தாத நிலையில் "நவகாலனியத்தினதும் பல்தேசியக் கம்பனிகளினதும் உள்ளார்ந்த எதிர்ப்பு" என எதைக்கொண்டு சொல்வது?

கட்டுரையாளர் குறிப்பிட்ட 'நவீன பஸ்மாசுரன்' (வீதிநாடகம் அல்ல) கூட அதன் கருத்தார்ந்த தளத்தில் நஞ்சினில் விளையவோ நாடகத்தைத் தான் அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. 'நவீன பஸ்மாசுரன்' வடக்குக் கிழக்கில் யுத்தத்தில் கொல்லப்பட்ட / கொல்லப்பட்டுக்கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான அப்பாவிப் பொதுமக்கள் பற்றியோ அல்லது இன்றுவரை நடைபெற்றுக் கொண்டிருக்கும் கொடிய யுத்தம் பற்றியோ அல்லது அந்த யுத்தமுறையியல் பற்றியோ கிஞ்சித்தும் கவலைகொள்ளாமல் யப்பானில் போடப்பட்ட அணுகுண்டு பற்றியும், அணுகுண்டின் ஆபத்துப் பற்றியும் உபதேசிக்கின்றார். ஆனால், இன்றும் அவருடை சகோதரர்கள் குண்டு வீச்சினால் கொல்லப்பட்டுக் கொண்டிருப்பதைப் பற்றிக் கவலைப்படவில்லை.

'சொந்தச் சகோதரர்கள் துன்பத்திற்சாதல் கண்டும்
சிந்தை இரங்காரடி! கிளியே!
செம்மை மறந்தாரடி!
............
தாயைக்கொல்லும் பஞ்சத்தைத் தடுக்க முயற்சியுறார்
வாயைத் திறந்து சும்மா! கிளியே!
வந்தே மாதர மென்பார்!

எனும் பாரதியின் பாடலே ஞாபகத்துக்கு வருகின்றது. ஆனால், இந்த நாடகத்துக்குள்ளும் வியத்தகு கண்டுபிடிப்புக்கள் நடத்தி ஹீரோஷீமாவையும், நாகசாயியையும் வடக்குக் கிழக்காகத்தான் பொருள் கொண்டோமெனக் கூறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இவ்வாறான பொருள்கொள்ளல்கள் பார்வையாளருக்கு ஏற்படுமெனில் சந்தோசமே. ஆனால், இந் நாடகங்களில் அவ்வாறு பொருள்கொள்வதற்கான எந்த அடிப்படையும் இல்லாததோடு இவ்வாறான பொருள் கொள்ளல்களை நெறியாளரால் உருவாக்கப்படும் நடிகர் போன்று உருவாக்கப்பட்ட விமர்சகர்கள் கண்டுபிடிப்பது விமர்சனப் பாரம்பரியத்துக்கு ஒரு வெட்கக்கேடானதாகும்.

இச்சமூகத்தை கலைவடிவங்களுக்கூடாக அரசியல்மயப்படுத்த வேண்டிய பொறுப்புமிக்க கலைஞர்கள் மேற்கூறப்பட்ட மூன்றாம் வகையினராக நின்று கொண்டு கலைப்படைப்புக்களை வெளிக் கொண்டு வருவதும் அவை பற்றிப் போற்றி எழுதப்படுவதும் இச்சமூகத்தின் தலைவிதி போலும்.

கட்டுரையாளர் மட்டக்களப்பு எனக்குறிப்பிடுவது எந்தளவு பிரதேசத்தினை என நோக்குகின்ற போது இராணுவ நோக்கில் மட்டக்களப்பு இரு பிரதேசங்களாக பார்க்கப்படுகின்றது.

1. இராணுவக் கட்டுப்பாடு உள்ள பிரதேசம்.

2. இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசம்.

இங்கு கட்டுப்பாடு எனும் பதம் குறிக்கின்ற அர்த்தம் சரியானதா என்பது மட்டக்களப்பில் வாழும் ஒவ்வொருத்தருக்கும் தெரிந்த உண்மை. ஆனால், இந்தச் சொற்றொடர்கள் அரச நிர்வாகத்திலும் இடம்பெறுவதன் காரணமாக பொதுமக்கள் பாவிக்கும் சொற்களாக புழக்கத்தில் உள்ளது என்பது உண்மை. இந்தப் பிரிப்பின் சொற்றொடரானது,

1. இராணுவம் உள்ள பிரதேசம்.

2. இராணுவம் இல்லாத பிரதேசம்,

எனக்குறிப்பதுவே பொருத்தமானதும், மக்கள் நிலைசார்ந்ததுமாகும். எனவே இந்த அடிப்படையில் இராணுவம் இல்லாத பிரதேசத்திலும் நல்ல வீதி நாடகங்கள் நிகழ்த்துகை செய்யப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு எனப் பேசும் போது ஏனோ அப்பிரதேச முயற்சிகளை மறைத்து அல்லது மறந்து இராணுவம் உள்ள இடத்தில் நிகழ்த்திய தமது வித்துவ நாடகங்கள் பற்றி மட்டுமே பேசமுற்படுகின்றனர். இது இந்த வரலாற்றுக்கு இவர்கள் செய்யும் மிகப்பெரிய துரோகமாகும்.

இராணுவம் இல்லாத பிரதேசங்களில் 'தோல்வி நிட்சயம்', 'வெற்றி நம் பக்கம்' போன்ற நல்ல வீதி நாடகங்கள் நிகழ்த்தப்பட்டிருக்கின்றன. அந்நாடகங்கள் சம்பந்தமாக அப்பிரதேச மக்கள் கொண்டுள்ள அபிப்பிராயம் அவை வீதி நாடக நோக்கத்தை நிறைவேற்றியுள்ளன என்பதற்கு நல்ல உதாரணங்கள். கட்டுரையாளர் அவ்வாறன நாடகங்களை கவனத்தில் கொள்ளாததுடன் இராணுவம் உள்ள பிரதேசத்தில் நிகழ்த்தப்பட்ட வெ.தவராசாவின் 'சகதி' பாலசுகுமாரின் 'பாரதி பிடித்த தேர்வடம்' போன்ற நாடகங்களையும் கவனத்தில் கொள்ளாது, அவற்றுடன் ஒப்புநோக்காது "... 'நஞ்சினில் விளையவோ' மட்டக்களப்பு வீதி நாடகவரலாற்றில் ஒரு மைல் கல் என்றால் மிகையாகாது", என்றும் "... மட்டக்களப்பின் வீதி நாடக வரலாற்றில் புது அத்தியாயம் சி. ஜெய்சங்கர் அவர்களினால் தொடங்கப்பட்டு விட்டது எனலாம்" என்றெல்லாம் எழுந்தமானமாக எழுதுவது நாடக வரலாற்றை கொச்சைப்படுத்தும் ஓர் முயற்சியாகும்.

எனவே முடிவாக கலைப்படைப்புக்கள் சம்பந்தமான குறிப்புக்களை எழுதுவோர் அக்கலைப்படைப்பின் கலையம்சம், அது பேசும் கருத்தார்ந்த தளம். அது அதற்கு முந்திய அதே பாணியிலான படைப்புகளுடன் மாறுபடும் விதம், போன்ற விடயங்களிலும் ஆழ்ந்த கவனத்தைச் செலுத்தி சமூகப்பொறுப்புடன் எழுதப்படுமானால் அது சமகாலத்தவர்களுக்கு மட்டுமன்றி எதிர்கால சந்ததியினருக்கும் ஒரு முக்கிய பதிவாக விளங்கும் என்பது எனது அபிப்பிராயமாகும்.

- சு.சிவரெத்தினம்

◎

இதழ் -194இல் இந்நாடகம் தொடர்பான கட்டுரையை எழுதியவர் அ.மு.றியாஸ் முகமட். கட்டுரையாளரின் பெயர் தவறுதலாக விடுபட்டு விட்டது. தவறுக்கு வருந்துகிறோம். ஆ-ர்

# நீர்றுப் போன விதைகள்

- கவிதைத் தொகுப்பு

எப்போதும் எல்லோர் பார்வையும் அகலப்படுத்தியே பார்த்து பழகிப்போய் இருக்கின்றன. இதுவே நியதியாகக்கூடப் போயுள்ளது. எத்தனை தூரம் தன்னால் பயணிக்க முடிகின்றது என முயல்கின்றானே ஒழிய தானிருக்கும் நிலையில் எவ்வளவு ஆழமாய் ஊன்றிக் கொள்ள முடியுமென நினைப்பதில்லை. மலையக மக்களுக்கான பார்வைத்தளமும் இதுதான். பங்குதாரர்கள் இலாப வருவாயிலும், அரசியல் செய்யும் கூட்டம் வாக்குகளையும், ரசிகர்கள் [illegible]கையையும் எண்ணி யல்லாக்கப்படு[illegible]ருக்க வாழ்க்கை மட்டும் கேள்-

விருட்சப் பதியங்கள்

கூட்டு கவிதைத் தொகுப்பு

ஆசிரிய பயிற்சி கலாசாலை

தொகுப்பு

சுப்ராமைந்தன்

விக்குறியாய் இருப்பது யாரும் அறியாத விடயமல்ல. ஆனால், கவனத்திலெடுக்காமல் ஆராயாத விடயம் அவர்களை கேவலமான பொருளாக கணக்கில் எடுத்துக்கொண்டு ஒதுக்கிப் பழக்கப்பட்ட நிலைமை இன்னமும் எங்களை விட்டுப்போகவில்லை. இது வெளிப்பிரதேசங்களைவிட உட்பகுதியிலேயே புரையோடிப்போன கருத்தாகும். லயக்காம்பராக்களில் (line rooms) குடியிருப்பவர்களென்றால் மலங்களை தங்களின் மேல் பூசி அலைபவர்களென்ற எண்ணம் பலர் மத்தியில் ஊறிப்போன ஒன்று.

அவர்களது வாழ்க்கை யாரால் உணரப்பட்டுள்ளது. அவர்களது வாழ்நிலை, வாழ்முறை, அவர்களால் உணரப்படும் சுகதுக்கங்கள், வாழ்வின் எல்லையை அவர்கள் நோக்கும் விதம், வெவ்வேறு புலங்களில் இருந்து அவர்கள் எதிர்கொள்ள நேர்கின்ற சவால்கள் இவற்றை எல்லாம் விடவும் அவர்களது எண்ணங்கள் ஒவ்வொன்றும் எதைச் சார்ந்ததாக எதை எதிர்கொள்ள ஆசைப்படுவதாக எதையெதை அனுபவிக்க வேண்டியதாக உருவாக்கப்படுகின்றது, உருவாக்கப்பட்டிருகின்றதென்பது சரியாக பலரால் அறியப்படாததாக, இருக்கிறவேளையில் சில அசைவுகள் இலக்கியங்களுடாக இனங்காட்டப்பட்டு வந்திருக்கின்றன. உண்மையில் இவ்விலக்கியங்கள் பிரச்சினைகளை இனங்காட்டி இருக்கின்றதா என்பது கேள்வியாய் விடப்பட்டிருக்கின்றது. சரியாக உணர்த்தியவையும் அக்காலப்பகுதியிலேயே எழுந்தனவா, காலந்தாழ்த்தி தோன்றியதா, இவ்வாறு இனங்காணப்பட்டவை கூட முடங்கிக்கிடந்தும் இருக்கின்றது. இதற்கெல்லாம் பதில் சொல்ல வேண்டிய கடப்பாடு எங்களை நோக்கி இருக்கின்றது என்பது ஒன்று, இரண்டாவது ஏற்கெனவே விடப்பட்ட தளங்களை சொல்ல வேண்டி இருக்கின்றது. மூன்றாவது இனங்காட்டப்பட்ட அம்சங்களின் தீவிரத்தன்மையை உணர்த்த வேண்டி இருக்கின்றது. நான்காவது இவை தொடர்பான உணர்வலைகளை வெளிக்காட்ட முற்படும்போது அது வாசகனில் பெரும்பாதிப்பை உண்டுபண்ணும் வகையில் (அனுபவத்திரட்சியாகக் கூட இருக்கலாம்) சரியான வடிவத்தை தேர்ந்தெடுத்து அளித்தல் அவசியம்.

இவ்வகையில் 'விருட்சகப் பதியங்கள்' கவிதைத் தொகுப்பு ஆழ [illegible] சாத்தியக்கூறுகள் தென்பட்டாலும் கூட தடைகளுக்கான சில காரணிகளை இனங்காண முடிகின்றது. இத்தொகுதியில் இடம்பெற்ற கவிஞர்களின் நிலைப்பாடு முறைசார் கல்வித்திட்டத்தின் அடிப்படையில் மாணவர்களை ஊக்குவித்தற் தொடரிலேயே அமைகின்றது. இதற்கேற்ப உளவியல், கல்வியியல் அட்ங்கலாக பத்துப் பாடத்தினதும், பரீட்சைகளை எதிர்நோக்கிக்கொண்டும் இருக்கும் நிலைப்பாட்டில், தங்கள் சமூக நிலையை தாங்கள் எதிர்நோக்கிய கண்ணோட்டத்தில் முன்வைத்திருக்கின்றார்கள். அவர்களின் பார்வையின் பதிவுகளே "விருட்சப் பதியங்கள்"

இதில் 38 கவிஞர்களது கவிதைகள் இடம்பெற்றுள்ளன. இதில் 23 பேர் பெண் கவிஞர்கள் என்பது கவனத்திற்குரிய விடயம். இவர்களுடைய பதிய



விதைகளின் திசைகள் உன்னிப்பாக கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. அடுத்ததாக இவர்களுடைய சிந்தனைத் தளத்தை கவனத்திலெடுக்க வேண்டிய ஒரு அம்சமாக கருதுகிறேன். ஏனெனில், இச்சிந்தனைக்கருக்கள் தனியே வாசகர்களை மட்டும் சென்றடைவதுடன் நின்றுவிடப்போவதில்லை. இவர்களனைவரும் ஆசிரியர்களாக இருக்கின்றபடியினால் புதிய சிந்தனைப் பரம்பரையொன்றையும் எதிர்பார்த்துக் காத்திருக்கலாம். அதனூடாக பாரிய மாற்றத்தையும் எதிர்பார்க்கலாம். இது தொடர்ந்து அவர்களது சிந்தனை விரிவைப் பொறுத்தே அமைய வேண்டி இருக்கின்றதென்பதும் உண்மை. அரசாங்க உத்தியோகம் கிடைத்ததும் (குறிப்பாக ஆசிரியர்களே) லயங்களில் இருந்து வேலைத்தளங்கட்கு வருவது தங்களுக்கு இழிவானதென கருதிக்கொண்டு வெளியிடங்களில் குடியமர்ந்து கொள்வதும், தன் சமூகத்தையே கேவலப்பொருளாக நோக்கும் சூழ்நிலையிலுங்கூட தங்களைச் சூழ்ந்திருக்கும் இருட்கோளங்களை இனங்காட்டி இருக்கின்றார்கள். இதில் வரும் அவர்களது பார்வையின் வரிகளே இவற்றை இனங்காட்டுகின்றன. அவர்களது பாதையைக்கூட இதனூடாக விளங்க முனையலாம். சிலவரிகள்:

ஓயாத உழைப்பும்
தீராத நம்பிக்கையும்
என்னையும் ஒரு நாள்
வாழவைக்கத்தான் போகிறது.

*- வாழ்க்கை - ரா. புவனேஸ்வரி*

ஹோட்டல் வேலைக்கும்,
வீட்டு வேலைக்கும், அனுப்பும்
கூட்டத்தினால் அழிகிறது என் சமூகம்.

*- பிஞ்சு உழைப்பு - கே. கனகாம்பிகா*

அறியாமை
ஆணிகளால் ஆழமாக
அறையப்பட்டிருக்கும்
தகர்த் தெறியப்பட முடியாத
தகட்டுக்கூரைகள்

*- யதார்த்தம் - மல்லிகை சி. செழியன்*

ஓர் நூற்றாண்டு மேல்
இவர்களின் குருதியை
அன்னியர்கள் - ருசி
பார்த்திருக்கிறார்கள்.

*- அட்டைகளின் ஆதங்கம் - குழந்தை வே. பாலா.*

உரிமை தொட்டில்
தவளத் துடிக்கும் குழந்தை
......
[illegible]
அமரும் ஆசனம்

*- மலையகம்- இரா. இராமகிருஷ்ணன்.*

உற்றுப்பாருங்கள்
தேயிலைச் சாயத்தில்
எங்கள் இரத்தச்சாயல்
தெரியும்
........
........
நெருப்பாய் நாங்கள்
எரியும் வெளிச்சத்தில்
எவரெவரோகுளிர்
காய்கின்றனர்.

*- இன்னுந்தான் - மீனாம்பிகை.*

ஒவ்வொருவரும் வெவ்வேறு விதமான சிறைப்புகளுக்குள் நின்று கொண்டாலும் அவர்களது கோணத்தை ஒன்றாய் நோக்கலாம். வீரியத்துடனான உணர்வின் வெளிப்பாடாக இதை சோகத்துடன் கலந்தும், நம்பிக்கையுடனும் உணர்த்தியிருக்கின்றார்கள்.

இந்த 38 பேரிலும் எத்தனைபேர் தங்களுக்குரித்தான பிரச்சினைகளை இனங்காட்டி இருக்கின்றார்கள். இனங்கண்டவர்கள் அதை சரியாக உணர்ந்திருக்கின்றார்களா? உணர்ந்தவர்களால் கவிதைகளூடாக அதை உணர்த்த முடிந்துள்ளதா என்பது ஊன்றிப்பார்க்க வேண்டிய விடயமாகும்.

மலையகத்தைப் பொறுத்தவரை பெண்களுடைய பங்களிப்பு மிகக்குறைவாகவே காணப்படும் இலக்கியச் சூழ்நிலையில் ஒரு தொகுப்பிலிருந்து 23 பேரை இனங்காணமுடிந்துள்ளது. "பெண்ணியம்" தொடர்பான கருத்து வலுவடைந்துவரும் காலப்பகுதியில் இது வரவேற்கத்தக்கது.

சமத்துவத்தில் தாய்மை, குவளை, வழிக்குற்றாலம், ஏமாறாதே... சீதனம் போன்றறை பெண்ணியச் சிந்தனைகளை முன்வைத்துப்பேசி இருக்கின்றன. ஆனாலும் இவை நிகழ்ச்சி சித்திரிப்பாகவே காணப்படுகின்றன. சரியான வெளிப்பாட்டு முறை இங்கு இல்லாமல் போனது. அதோடு மலையகப் பெண்களுக்கென உரித்தானதில்லாமல் பொது நிகழ்வுகளாகவே காணப்படுகின்றன.

இத்தொகுப்பிலுள்ள 52 கவிதைகளின் பார்வைப் புலத்தில் பெரும்பாலானவை ஒரு மையத்தளத்திலிருந்தே அசைந்திருக்கின்றன. தாங்கள் "ஆசிரியர்" என்பதிலிருந்து பல கவிதைகள் இறங்க மறுக்கின்றன. எடுத்துக்கொள்ளப்பட்ட அம்சம் வாசகருக்கு போதிப்பதாக, அறிவுறுத்துவதாகவே தென்படுகிறது. நெஞ்சு பொறுக்குதில்லையே, போதை நாட்டம் வரவேற்கும் வாய்ப்பில்லை, நாங்கள் பனைமரங்கள், சுமை போன்று இன்னும் பல, இதிலிருந்து விலகியவையாக போராட்டம், வாக்குறுதிகள், மலையை நோக்கி, இன்னுந்தான்... போன்ற கவிதைகளைச் சொல்லலாம். இவைகளில் உணர்வலைகளைக் கிள்ளிவிடக்கூடியதான போக்கையும் காணக்கிடக்கின்றது.

பொதுவான நோக்கில் பெரும்பான்மையாக மலையகத்தை புலமாகக் கொண்ட சிறுகதையாயினும் சரி கவிதைகளாயினும் சரி, சொல்லும் விடயத்தை உணர்த்தும் திறன் குறைவானவையாகவே காணப்படுகின்றன.

ஒரு பொருள் தரம் வாய்ந்ததாக இருந்தாலும் அதற்கே உரித்தான கவருந்திறன் (வடிவம்) இருத்தல் அவசியம். அதுவே நுகர்வோரிடம் (வாசகரிடம்) பெரும் பாதிப்பை ஏற்படுத்த அவசியமாகின்றது.

இவ்வகையிலே சிறப்பான வடிவம் கொடுக்கப்படுவதில்லை என்ற கருத்து பல தடவைகள் பலராலும் வெளிப்படுத்தப்பட்டிருந்தாலும் சில புத்திஜீவிகளால் இது ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. இதற்கு "வறட்டுத்தன்மை" என்று கூடச்சொல்லலாம். கோட்பாடொன்றை தங்களுக்கென வரிந்து கட்டிக்கொண்டு வெளி உலகைக் கண்ணுறமுடியாமல் இருக்கின்றார்கள். தொடரும் தலைமுறைகூட தேடல் இன்றி தங்கள் ஆக்கங்களை மட்டுமே வாசித்துக்கொண்டும் மெச்சிக்கொண்டும் இருப்பின் இதே தேக்க நிலையே தொடரும். இது இலக்கியத்துக்கு மட்டுமல்லாமல் சிந்தனைத்தளத்துக்கும் பொருந்தும். தேடலில் மேலதிகமான வாசிப்பும், சிந்தனைவிரிவும் இத்தேக்கநிலையை உடைக்கமுற்படலாம்.

மண்ணில் புதைந்திருக்கும்வரை
[illegible]
மண்ணில் புதைபடும்வரை
வாழு(வோ)ம் நாங்களும்

*-பிளவுகள் - நா. திலகராணி.*

**திசேரா**


---

*இளவாலை விஜயேந்திரனின்*

# நிறமற்றுப் போன கனவுகள்

- கவிதைத் தொகுதி

'நிறமற்றுப்போன கனவுகள்' இளவாலை விஜயேந்திரனின் முதலாவது கவிதைத் தொகுதி. 80களில் வெளித்தெரியத் தொடங்கிய ஈழத்துக் கவிஞர்களுள் இளவாலை விஜயேந்திரனுக்கும் தனியான இடமுண்டு என்பதில் ஐயமில்லை. ஆனால், இக்கவிதைத் தொகுப்பில் அவரைப் பிரபலப்படுத்திய பல கவிதைகள்



நிறமற்றுப் போன கனவுகள்

*கவிதைத் தொகுதி*

வெளியீடு: தேசிய கலை இலக்கியப் பேரவையுடன் இணைந்து சவுத் விஷன்

இலங்கையில் கிடைக்கும் இடம்
சவுத் ஏசியன் புத்தக நிலையம்
இல: 44, 3வது மாடி,
சிசிஎஸ்எம் கொம்பிளக்ஸ்
கொழும்பு - 11

இல்லாமல் இருப்பது ஏமாற்றத்திற்குரியதே. ஆனால், அதற்குரிய காரணத்தை, அவரது கவிதைத் தொகுப்பின் பின் அட்டைக்குறிப்பில் சொல்லப்படும் "இந்தத் தொகுதியில் இடம்பெறும் கவிதைகள், இவர் புலம் பெயர்ந்த 1987 ஆடிக்குப் பின் 1992 வரையுள்ள காலப்பகுதியில் எழுதப்பட்டவை." என்னும் வாசகங்கள் விளக்குவனவாய் உள்ளன.

இத்தொகுப்பில் உள்ள கவிதைகள் என்ன சொல்கின்றன?

ஒரு கவிதையை அதன் அரசியல், சமூக, பொருளாதாரப் பின்தளங்களிலிருந்து பிடுங்கியெடுத்து இரசிப்பது சாத்தியமாகுமா? முடியாது என்று கூறினால், ஒரு இலக்கியப் படைப்பு அதன் அரசியல், பொருளாதார, சமூகத் தளப்பின்னணியை இழந்துபோய் பல காலமாகிய பின்னரும் எவ்வாறு ரசிக்கக்கூடியதாய் இருக்கிறது என்ற மார்க்சின் கேள்விக்குரிய பதில் என்ன?

முன்னொரு காலத்தில் நிகழ்ந்த 'காதல்', 'காட்டிக்கொடுத்தல்' சம்பவங்களின் போது வெளிக்கிளம்பிய உணர்வலைகளும் இன்று அதே நிகழ்வுகள் ஏற்படும்போது வெளிக்கிளம்பும் உணர்வலைகளும் அடிப்படையில் ஒன்றே என்பதே இதற்குப் பதில்.

ஆயினும் ஒரு வித்தியாசம் உண்டு. காலங்கடந்த சமூகப் பொருளாதாரத் தளங்களில் வெளிப்படுத்தப்படும். உணர்வலைகள் ஒருவித (Passive) தன்மை கொண்டவையாக இருக்க, உடன் நிகழ்கால அதே பின்புலங்களில் வெளிப்படுத்தப்படும் அதே உணர்வலைகள் (Active) தன்மைகொண்டவையாகச் செயலூக்கம் கொண்டவையாக மாறுகின்றன. இளவாலை விஜயேந்திரனின் கவிதைகள் பின்னவைக்குரியனவாய் உள்ளன.

இக்கவிதைகள் ஈழத்தமிழரின் சமகால விடுதலைப் போராட்டப் பின்புலத்தில் எழுதப்பட்டவை. அதனால் தான் 'திருமணம்' பற்றிய அவரது கவிதையில் கூட,

'சாதியும் சாறியுமாய்ப்
பிரச்சினை அலசும் பெண்கள்
கண்ணி வெடிக்குக் காதும் மூக்கும்
வைத்தபடி ஆண்கள்?'

என்ற வரிகள் இடம்பெறுகின்றன. 'நேற்று நிகழ்ந்தது' என்னும் கவிதை, எம் நெஞ்சை எண்ணிறந்த உணர்வலைகளில் தோயவிட்டுச் செல்கிறது. இன்னும் போராடிக்கொண்டிருக்கும் எம்மினிய இளந்தலைமுறையினர் பற்றி இக்கவிதைபோல் மிக எளிய முறையில் சொல்லிப் பெரிதாக விரிவது மிகச் சில கவிதைகளே:

'வந்துபோனவன்
கட்டிச் சென்ற கோட்டையின் அருகாய்
முப்பது பேர்கள் உயிரிழந்தார்கள்'

தயவு செய்து புள்ளி
விபரங்களில் உயிர்களை
எண்ணாதீர்கள்.

அந்த இளைஞர்களின்
சடலங்களை நீங்களெவரும்
கண்டதேயில்லை
ஆறாய் ஓடிய குருதியைத்தானும்
அறிந்திருக்க மாட்டீர்கள்.

வெடிகளில் சிக்கி
அலறிய படியே இறந்த
அவர்களிடம்
என்னைப் போலவே
கனவுகள் இருந்திருக்கும்

முற்ற வெளிக்காற்றுக்கு மட்டும்
தெரிந்த அந்தக் கனவுகள்
விபரிக்க
என்னிடமுந்தான் வார்த்தைகள் இல்லை.'

இவரது 'மனம்' என்னும் கவிதை, இன்று தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் சிக்கிய இளைஞர் பலரின் மனதைப் பிரதிபலிப்பதாய் அழகுறக் கூறிச்செல்கிறது.

'வீதி விபத்தொன்றில் -
இல்லை
வேறெதோ இளமை அவசரத்தில்
எனதாத்மா
கொலையுண்டு போனதாய்ச்
சொன்னேன்.'

விடுதலை வேட்கை என்னும் இளமை அவசரத்தில் சிக்கி, தமது கொள்கைக்கு எதிராய்ப் போய்விட்ட "விடுதலைப் போராட்டங்களால்" தமது ஆத்மாவைக் கொலை கொடுத்த பலரின் மனோநிலை இங்கே படம்பிடித்துக் காட்டப்படுகிறது.

02

புலம்பெயர்ந்த அனேக ஈழத்துக் கவிஞர்களாய் இருந்தாலும் சரி, எழுத்தாளர்களாய் இருந்தாலும் சரி அவர்களில் அனேகர் ஏதோ விதத்தில் 'புலி' எதிர்ப்பாளர்களாய் இருப்பது கண்கூடு. இதற்குக் காரணம் இவர்கள் ஏதோ விதத்தில் விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டவர்களாய், அப்போராட்டத்தில் ஈடுபட்ட குழுக்களின் மாஜி உறுப்பினராய் இருந்திருப்பதே.

இவர்கள் நிலை பற்றி ஆங்கில விமர்சகரான ஒருவர் தனது நண்பர் ஒருவருக்கு எழுதிய கடிதத்தில், கிறேயின் இரங்கற்பா (Gray's Elegy in a Country Courtyard) என்ற கவிதையின் உள்ளடக்கத்தை, இன்றைய தமிழீழ நிலையோடு ஒப்பிட்டுப் பார்க்கும் வகையில் பின்வருமாறு சுருக்கி எழுதியிருந்தார். "இந்தக் கவிதையில் கிறே எதைப் பற்றிக் கவலைப்படுகிறார் என்றால், இப்படிக் குதிப்பவர் எல்லாம் குறம்வெல்லாக (Cromwell) மாறுவதற்குரிய வாய்ப்புகளை இழந்தவர்கள். இந்த வாய்ப்பிழப்பும் அதற்குரிய நன்மையையே தந்தது. அதாவது இவர்களை வெறுத்தொதுக்கத்தக்க கொடுங்கோலர்களாக மாறாமல் அது தடுத்தது. இது இன்றுள்ள எங்கள் ஒவ்வொருவருக்கும் பொருந்துவதாய் உள்ளது." (குறம்வெல் ஆங்கில சர்வாதிகார அரசனை வீழ்த்திப் பதவிக்கு வந்த தளபதி)

இப்பின்னணியில் பார்க்கும்போது இளவாலை விஜயேந்திரனின் கவிதைகள் அத்தகைய தீவிரப்போக்கை எடுக்காதது இதன் இன்னொரு தனித்துவமாகும். இதற்குக் காரணம் விஜயேந்திரன் தமிழர் விவகாரம் பற்றிக் கொண்டிருக்கும் (Sincere) உண்மையான பற்றுதலே. அதன் வெளிக்காட்டலாகவே 'மீண்டும் வாழுதல்' என்னும் சிறந்த கவிதை நிற்கிறது.

'எனது தேசம்
கண்கள் பிடுங்கப்பட்டுக்
காட்டில் அலைக்கழிக்கப்பட்டாலும்
இன்னமும் உயிர்த்தெழல் பற்றி
நம்பிக்கையோடிருக்கிறது...

உன்னைப்போலவே மீண்டு
பிறத்தலில்
மண்ணோடிணைதலில்
நம்பிக்கையோடுள்ளேன்.

**அபூசாலி**

நன்றி - நூலகத்திட்டம்



# சீனத்துக் கவிதைகள்

**- நூல் விமர்சனம்**

சீனத்துக் கவிதைகள் என்னும் நூல் சென்னை வட பழனியிலுள்ள வேர்கள் இலக்கிய இயக்கத்தினால் வெளியிடப்பட்டுள்ளது. இதில் காணப்படும் கவிதைகள் 90ல் வெளிவந்த 'சைனீஸ் லிட்ரேச்சர்' என்னும் சஞ்சிகையிலிருந்து மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை இந்நூலின் கடைசிப் பக்கத்தில் தரப்பட்டிருக்கும் சிறு



ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்தவர் வை. சுந்தரேசன்.

இந்நூலில் இடம்பெறும் ஓவியங்கள் கோ. கைலாசநாதனால் ஆக்கப்பட்டவை.

அறிவித்தல் மூலம் அறிய வருகிறோம்.

இதைத் தவிர, இம்மொழிபெயர்ப்புக் கவிதைகள் பற்றி அறியத்தக்கதாக எந்தவித முன்னுரையோ, பிற்சேர்க்கையோ தராது மொட்டையாக விட்டிருப்பது, இந்நல்ல மொழிபெயர்ப்பு நூலுக்கிழைத்த பெரும் "துரோகம்" போலவே எனக்குப்பட்டது. காரணம், இக்கவிதைகள் எழுதப்பட்ட காலம், அதன் பின்னணி, அதை எழுதிய கவிஞர்கள் பற்றிச் சிறுகுறிப்புகள் போன்றவை இருந்திருந்தால், அதை ஆழமாகக் காண்பதற்கும், சுவைப்பதற்கும் இன்னும் வாய்ப்பாக இருந்திருக்கும். மேலும், இக்கவிதைகளை மொழிபெயர்த்த வை.சுந்தரேசன் பற்றியோ, இக்கவிதைகளுக்கு ஓவியங்கள் வரைந்து கொடுத்த கோ.கைலாசநாதன் பற்றியோ எந்தவிதக் குறிப்பும் இல்லாமல் இருப்பதும் இன்னுமொரு ஏமாற்றத்தைத் தருகிறது.

நான் அறிந்தவரை இக்கவிதைகளை மொழிபெயர்த்த வை.சுந்தரேசன் யாழ். பல்கலைக்கழகத்தில் ஆங்கிலப் பயிற்றுனராக இருக்கிறார் என்று நினைக்கிறேன். ஓவியர் கோ.கைலாசநாதன், இன்றுள்ள தரமான ஈழத்துத் தமிழ் ஓவியர்களில் ஒருவர். இந்நூலிலுள்ள கவிதைக்ளுக்கு அவர், நவீனத்துவப் போக்கையும், இடைக்கிடை மரபையும் கலந்து வரைந்துள்ள ஓவியங்கள் இதற்குச் சான்று. தகுந்த வாய்ப்பளிக்கப்படாமையால், இவர் குடாநாட்டுக்குள்ளேயே முடங்கிக் குடத்துள் விளக்காய் இருப்பது வேதனைக்குரியதே

*02*

அண்மைக்கால ஈழத்துத் தமிழ் இலக்கிய உலகில் பல மொழிபெயர்ப்புக் கவிதைகள் வெளிவந்துள்ளன. 25 வருடங்களுக்கு முன்னர் முருகையன் 'ஒரு வரம்' என்ற தலைப்பில் ஆங்கிலக் கவிஞர்களின் கவிதைகளின் மொழிபெயர்ப்பு நூலொன்றை வெளியிட்டதின், பின்னர் பல மொழிபெயர்ப்புக் கவிதைகள் வந்துவிட்டன. மா ஓவின் கவிதைகள், ஹோசிமின் கவிதைகள், பலஸ்தீனக் கவிதைகள் என்று பல மொழிபெயர்ப்புகள் வெளிவந்துவிட்டன. கே.கணேஷ், செ.யோகநாதன், நுஃமான், சிவசேகரம் ஆகியோர் இம்மொழிபெயர்ப்புகளைச் செய்துள்ளனர். பலஸ்தீனப் பெண் கவிஞர்களின் கவிதைகளும் அண்மையில் நுஃமான் அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டு மூன்றாவது மனிதனில் வெளிவந்துள்ளது.

இவற்றின் பின்னணியில் வை. சுந்தரேசன் அவர்களால் மொழிபெயர்க்கப்பட்ட சீனக் கவிதைகளைப் பார்ப்பது அவசியம்.

முருகையனின் 'ஒரு வரம்' கவிதைகளைப் போலல்லாது எண்பதுக்குப் பின்னர் மொழிபெயர்க்கப்பட்ட அனேகமான கவிதைகள் எல்லாம் மூன்றாம் உலக நாடுகளில் உள்ள மக்களின் விடுதலை வேட்கையைக் காட்டுபவையாகவே உள்ளன. ஆக்கிரமிப்புக்கும், அடக்குமுறைக்கும் எதிரான போர்க் குரலாகவே உள்ளன.

ஆனால், சுந்தரேசன் மொழிபெயர்த்துள்ள இக்கவிதைகள், சீனக் கிராமங்களின் இயற்கை அழகை அள்ளித் தருவனவாகவும், அம்மக்களின் அன்றாட வாழ்வோடிழையும் துயரங்கள், இன்ப உணர்வுகள், காதல், பிரிதல், சந்திப்புகள், இன்னும் பறவைகள், மிருகங்கள், தாவரங்கள் போன்ற இயற்கையின் இருப்புகள் அனைத்தையும் ஒவ்வோர் பரிமாணங்களில் கிள்ளிக் கிள்ளிவைத்து அழகூட்டுகின்றன. இவ்வம்சம், இக்கவிதைகளின் உருவமாகவும், இவற்றுக்கிடையே இழைய விடப்பட்டிருக்கும் சகல உயிர்களையும் தன்னுயிராய்ப் பார்க்கும் மனித நேயம் இக்கவிதைகளின் உள்ளடக்கமாகவும், படிப்போரைக் கவர்கிறது. கிராமங்களின் இயற்கை அழகை உருவமாகவும், அங்குவாழ் சகல ஜீவராசிகளிலும் செலுத்தும் அன்பு உள்ளீடாகவும் நிற்க இங்கு தரப்பட்டிருக்கும் கவிதைகள் மிக வித்தியாசமாக வந்து விழுகின்றன.

இதோ 'மழையின் பின் புல்வெளி ' என்ற கவிதையைப் பாருங்கள்! இதை ஷாங் ஷிமின் எழுதியுள்ளார்.

'பொழிந்த மழையுடன் இரவு<br>
முடிகிறது<br>
ஊதல் ஒலிக்கப்,<br>
புலரும் பொழுதுடன் புகைவண்டி<br>
நகர்கிறது<br>
செம்முகிற்திரள் ஒன்று<br>
பயணிகளின் உறக்கம் கலைக்கிறது<br>
பாருங்கள் ஓ சற்றுப் பாருங்கள்<br>
மழையின் பின் புல் வெளி<br>
எத்துணை வசீகரம்....'

மிக எளிமையான முறையில் மழைக்குப் பின் வரும் காலைக் காட்சியைப் புகைவண்டியில் இருந்தவாறே இரசிக்கும் ஒருவனை இங்கே காண்கிறோம்.

'மேபிள் விருட்சத்தின் ஞாபகார்த்தமாய' என்ற தலைப்பில் நையூஹான் எழுதிய கவிதை,

'இலையுதிர் காலத்தின் ஓர்<br>
அதிகாலையில்<br>
குளக்கரைத் திட்டியில் நின்ற<br>
உயரிய மேபிள் விருட்சம்<br>
வெட்டிச் சாய்க்கப்பட்டது'

என்று ஆரம்பித்து வெட்டிச் சாய்க்கப்பட்ட மேபிள் மரத்திற்காகத் துன்புற்று, அத்துயரை எம்மிலும் தொற்ற வைக்கிறது. கவிஞர் கூறுவதுபோல 'காடு முரடான அதன் சாம்பல் நிறப் பட்டையிலிருந்து வெளிப்பரவும்' மணம் எம்முள்ளும் துயர் சேர்க்கிறது.

அடுத்து வரும் 'பருந்தின் துயர காவியம்' என்னும் கவிதை வானத்தில் வட்டமிடும் பருந்து யாராலோ கொல்லப்பட, அதன் துயரப் பின்னணியை நமக்குக் கவிதையாக எழுதிச் செல்கிறது.

'பருந்து ஒன்றுக்காக இத்துயர<br>
காவியம்.<br>
பனிபடர்ந்த அவ்வெளி<br>
அமைதியாக வெறுமையாக'

என்று ஆரம்பிக்கும் இக்கவிதை, 'ஆகாயமே காற்றில் மிதக்கும் இப்பட்சிக்குரிய சவக்குழி' என்று அழகுறக் கூறுவதோடு, "உயரச் சஞ்சரிக்கும் சீவன்களை அவலமாய் இனிமேலும் அழிக்காதீர்கள்' என்று முடிவுறுகிறது.

'காட்டு வயல்களில் ஒரு மஞ்சள்<br>
சிட்டுக்குருவி'

இந்த விதத்தில்<br>
இன்னொருவகை.

வல்லூறுக்குப் பயந்து கீழேவந்த சிட்டுக்குருவி, வேடன் வைத்த கண்ணியில் சிக்கித் தவிக்கையில், அதை அக்கண்ணியிலிருந்து விடுவித்து விடுதலை அளிக்கிறான் ஓர் இளைஞன். அப்படி விடுதலை செய்யப்பட்டதும் -

'அது வானுச்சியில் உயர்கிறது<br>
சடுதியில் மீண்டும்<br>
இறங்கி வருகிறது<br>
இளைஞனுக்கு நன்றி சொல்ல'

என்று சொல்லும்போது, கவிதை மட்டும் உயரவில்லை. குருவியும், மனிதப் பண்புகளையும் மிஞ்சி எழுவது தெரிகிறது. இயல்பாக மேலும், கீழும் வலுவேகமாக உந்தியெழும் குருவியொன்றின் போக்கில் இத்தகைய பண்பைப் புகுத்தியதால் கவிஞர் அற்புதஞ் செய்கிறார்.

'சந்திப்பு' என்ற கவிதையில், தீராத காதல் உணர்வு வெளிப்படுத்தப்பட்டிருக்கும் விதம் அற்புதம். நான் படித்த அண்மைக்காலச் சிறந்த கவிதைகளில் இதுவும் ஒன்று. சென்சுனாங் எழுதிய இக்கவிதையை முழுமையாகக் கீழே தருகிறேன்.

'மழையினால் ஒதுக்கிடம்<br>
தேடியபோது<br>
நாம் வனத்திலே சந்தித்தோம்.<br>
நீயோ உன் உற்சாகம் நிறைந்த<br>
மனைவி சகிதம் நின்றபோதிலும்.

பத்து வருட மாயை<br>
பாழடைந்தது ஒரு கணத்தில்,<br>
பத்து வருடக் காத்திருப்பு<br>
இழந்தது அதன் அர்த்தத்தை.

என் உதடுகளை அழுத்தி<br>
மென்னகை செய்தேன்.<br>
கண்ணீர் என் முகத்தில்<br>
வழிந்திருக்க வேண்டும்.

உன் மனைவியின்<br>
ஆச்சரியம் கண்டு<br>
என் முகத்தைத் துடைத்து,<br>
'ஓ, இந்த மழை' என்றேன்.

கவிதை ஒன்றை வேற்று மொழிக்கு மொழிபெயர்ப்பது பற்றி ஒரு விமர்சகர் குறிப்பிட்டபோது, "மொழிபெயர்ப்பில் வராமல் விடுபட்டுபோன பகுதிதான். உண்மையான கவிதை" என்றார்.

இங்கே இக்கவிதைகள் சீன மூலத்திலிருந்து ஆங்கிலத்துக்கும், அதன் வழி தமிழுக்குமாக மூன்றாம் கையாக மாறி வந்திருந்தபோதும், மேலே குறிப்பிட்ட விமர்சகரின் கூற்றுக்கு இக்கவிதைகள் அதிகம் இலக்காகியிருக்க முடியாதென்பதை இக்கவிதைகள் [illegible] உணர்வுகளில் இருந்து துணிந்து கூறலாம். மொழிபெயர்ப்புச் செய்த கவிஞர் சுந்தரேசனையும், அதற்கான ஓவியங்கள் வரைந்து பக்கபலமூட்டிய கைலாசநாதனையும் நாம் எவ்வளவும் பாராட்டலாம்.

**- மு. பொ.**

## உயிர் நிழல் பார்த்தேன்

நிதானமாக வாசித்தேன். தூரத்தூரப்போய் விலகியிருக்கிற நண்பர்கள், தெரிந்தவர்களுடன் ஒரு தொடர்பினை இதன் மூலம் ஏற்படுத்திக்கொள்ளவும் ஒரு வாய்ப்பாய் இருக்கிறது. அவுஸ்திரேலியாவுக்குப் போன நண்பன் ந.செயை தாடி, மீசையுடன் ஒரு இலக்கியகார டைப்பில் பார்க்க ஆச்சரியமாயிருக்கிறது. வளர வளர தினமும் ஷேவ் பண்ணிக்கொண்டு திரியும் ந.செ. எங்கே? இப்போதைய ந.செ. எங்கே? வளர்ந்துவிட்டான்! புலப்பெயர்வு எல்லாவற்றிலும் குறிப்பாக இலக்கிய முயற்சிகளில் மூக்கில் விரலை வைக்கிற வியப்பைத்தான் தருகிறது உலகம் சுருங்கி, தொடர்புகள் மிக வேகப்பட்டுப்போன பின்னும் அவனின் "எப்போதாவது ஒரு நாளை" வாசிக்கக் கிடைக்க முன்னரே அது பற்றிய விமர்சனங்களை வாசிக்கவேண்டியதை நினைக்கையில் நானெங்கோ "பூகோளக்கிராமத்துக்கு



அப்பால் இருப்பதான உணர்வு வருகிறது. ஸீரோ டிகிரியை வாசிக்காமலேயே அதுபற்றிய கதையாடல்களை அந்த நாவலின் பக்கங்களை விட அதிகளவான பக்கங்களில் அங்குமிங்கும் வாசித்திருப்பேன் போல் தோன்றுகிறது. நாம் குறிப்பாக ஈழத்திலுள்ளவர்கள் - இங்குள்ள இலக்கியக்காரர்கள் பல பிரமிப்புக்களை ஏற்படுத்தியிருந்தாலும் - தற்போதைய தமிழ் இலக்கிய உலகப்போக்கினது ஓரங்களில் பார்வையாளர்களாய்த்தான் குந்திக்கொண்டிருக்கிறோம் போலிருக்கிறது.

நிறைய எழுதவும், பேசவும் அதுமாதிரியே விமர்சிக்கவும் படுகிற தமிழ்நாட்டு இலக்கியச் சூழலை - நம் பற்றிய மாயைகளைக் களைத்தெறிந்துவிட்டு மிக வேகமாக வாசித்தறிய வேண்டியிருக்கிறது என்பதனை பொதிய வெற்பன, ரமேஷ் பிரேதன் கட்டுரைகள் சுட்டிநிற்கின்ற. தமிழவன் சொல்கிற 'அனைத்துலகத் தமிழ்ப்பாடு' என்பதான அபாரப்பாய்ச்சல்" புலம்பெயர் இலக்கியத்தால் உருவாகிறது. மற்றும் "ஈழத்துக் கவிதைகளே உலகத்தரத்துக்கு இருக்கின்றன..'என்ற வாக்கு முத்திரைகள் சிலபோதுகளில் ஈழுத்தையும் புகலிடத்தையும் அந்தரத்தில் மிதக்கவிட்டுவிடுகின்றன. இது கவிஞன் ஆத்மா ஒரு முறை கூறியதுபோல் காத்தான்குடியில் கற்பித்த "சில", "யாழ்ப்பாண" ஆசிரியர்கள் "நீ நன்றாக கணக்குச் செய்கிறாய் வாப்பாவின் கடையில போய் நிக்கலாமே..." என்று மழுங்கடிக்க வைத்த கதையாகத்தான் இருக்கிறது.

தமிழகம், ஈழம், புகலிடம் என்ற பிரிப்புகளை முன்னிறுத்தி இலக்கியங்களைப் பார்த்து அளவிடுவதைவிட 'தமிழிலக்கியம்' என்ற பொபது வரையறைக்குள் நாம் வாசிப்பை முதலில் விரிவுபடுத்த வேண்டியிருக்கிறது. இல்லாவிட்டால் சொல்லித்தருகிற சூழலும் அதை ஏற்றுக்கொள்கிற சூழலுமாய்... "பாடவிதானங்களில் சில புத்தகங்களை வாசிக்கச்சிபாரிசு பண்ணிவாசிப்பதைப் போல் சுருங்கவேண்டி வந்துவிடும்.

இதை உதாரணத்திற்கு அறுக்காமல் சொல்வதென்றால் பின்னை நவீனத்துவம் அமைப்பியம், இன்னபிற.. (இந்த இதழில் நொன்லீனியர்"/"நான் லீனியர்) பற்றிய கட்டுரைகளை, விவாதங்களை உயிர்நிழல் பக்கம், பக்கமாக வெளியிடுகிறது. (இதில் ஏனைய ஈழபுலம்பெயர் சிற்றேடுகளையும் எடுத்துக்கொள்ளலாம்) நவீன இலக்கியவடிங்களை புலம்பெயர்ச்சூழல் கருத்திற்கொண்டிருப்பதாக ஒரு பிரேமை/மாயை இதன்மூலம் கட்டமைக்கப்படுகிறது. உண்மையைப் பார்க்கப்போனால் பின் - நவீனத்துவம் பற்றி ஆகக் குறைந்தது இந்தச்சூழல் எவ்வளவுக்கு வாசித்திருக்கிறது /தேடியிருக்கிறது? ஸீரோ டிகிரியை அல்லது ரமேஷ் பிரேதன் குறிப்பிடும் சில நூல்களை எத்தனைபேர் வாசித்திருக்கிறோம்/ தேடியிருக்கிறோம் என்று கேள்வி எழுப்பினால் மௌனமாய்த்தான் இருக்கும் ஆனால், எந்த தளங்களும் இல்லாத சில மேல்பூச்சுக்களால் நாம் சொற்களைக் கேள்விப்பட்ட (பின்நவீனத்துவம், நான்லீனியர்) புளகாங்கிதத்தில் காலந்தள்ளிவிடுகிறோம். இன்னொரு உதாரணம் தமிழகத்தில் என்று குறிப்பாய் வைத்துக்கொண்டாலும் தமிழிலக்கிய உலகில் ஒக்டோவியா பாஸ் போன்று பலரது படைப்புக்களும் அவர்கள் பற்றிய கட்டுரைகளும் தாராளமாக வந்து கொண்டிருக்கின்றன. ஆனால், ஈழத்தில் அண்மையில் வந்த மூன்றாவது மனிதனில் ஒக்டோவியா பாஸ் பற்றிய மிகச்சின்ன அறிமுகக் குறிப்பு மட்டும் வந்திருக்கிறது. நாம் ஈழத்து இலக்கியத்தில் அவரின் ஆளுமையான வருகைக்கு காத்திருக்க வேண்டுமானால் இன்னும் பத்து பதினைந்து வருடங்கள் போகலாம். இவ்வாறு காத்திருக்க முடியாத எழுத்தாளர்கள் கூட அவை பேசப்படுகிற இடத்துக்குச் சென்றுவிடுவார்கள். உதாரணத்திற்கு நுஃமானை எடுத்துக்கொள்ளலாம். நவீன கோட்பாட்டுக்கட்டுரைகளையும், வேறு சில முக்கிய விடயங்களையும் ஈழ இதழ்களில் எழுதுவதை விட தமிழக இதழ்களில் எழுதுவதில் ஒரு 'அங்கீகாரம்' இருக்கிறது. இதற்கு அண்மைய உதாணமாய் பெரியாரியச் சிந்தனைகள் பற்றி காலச்சுவட்டில் வந்த கட்டுரையின் பெறுமதி ஈழத்தின் ஒரு இதழில் வந்தால் இருக்கும் பெறுமதியும் அவருக்குத் தெரியும். இதை ஈழத்திலும் தமிழகத்திலுமாக செவ்விகொடுக்கும் சிலர் கூட 'இடமறிந்து' தங்களைத்தக்கவைத்துக்கொண்டு வருவதனை வாசிப்பினூடாக அறிய முடிகிறது.

ஆக, மொத்தத்தில் நான் சொல்ல வருவது என்னவென்றால் குறிப்பாக ஈழத்து, புலம்பெயர்காரர்கள் தம்மைப்பற்றிய அதீத பார்வைப்பிரப்புகளால் அடிபட்டுப்போய்விடக்கூடாது என்பதுவும் எல்லாவற்றுக்கும் முதல் குறிப்பாக பிரிப்புகளுக்கு முதல் இலக்கிய முழுமையின் தேடலை ஏதாவது சதவிகிதத்தினாலும் பெற்றாக வேண்டும் என்பதையுமே! இல்லாவிட்டால் இன்னுமின்னும் பிரமிப்புப்பட்டுப்போய் பார்வையாளர்களாய் அதுவும் ஓரத்தில் ஒதுங்கிவிடத்தான் வேண்டிவரும் என்பதையும் தான்!

நன்றி - நூலகத்திட்டம்



தணிக்கை

கர்களையோ குறிபார்ப்பது குண்டின் நோக்கமாக இருந்திருக்க முடியாது. ஆனால் சில அரச தரப்பு ஊடகங்கள்

[redacted]

இடத்தில்தான் இந்தவினை என்றாலும் வினைதீர்க்கச் சென்ற இடத்திலும்

## மட்டுநகர் குண்டுவெடிப்பு:
# சில அடிப்படைக் கேள்விகள்!


தணிக்கை

குரிய ஒன்று என்பது மறுக்கப்பட முடியாத ஒன்று என்ற போதும் இதனை

பௌத்த யாத்திரிகளைக் கொல்வதற்கு வைக்கப்பட்ட குண்டு என்று செய்தி வெளியிட்டுள்ளனர். குண்டு இருந்து வெடித்த பெட்டியை ஒருவர் வைத்து விட்டுச் சென்றதை பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கண்டதாகக் கூறியிருக்கின்றார். ஆனால் அவருக்கு ஐஸ்ப் பழப் பெட்டியாக தென்பட்டதால் குண்டைப் பற்றி அவர் கவலைப்-

கொடுமையாகிவிட்டது. மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போலாகிவிட்டது தமிழனின் நிலை. சுதந்திரமாக எந்தப் பக்கமும் சாராமல் நடுநிலையாக நின்று சட்ட வைத்திய

தணிக்கை



தனியான ஒரு குண்டு வெடிப்பாகவும்

தணிக்கை பார்த்துவிட்டுச் செல்லமுடியாது. மாறாக இதனை ஒரு அரசியல் பின்னணியுடனும் பார்க்க வேண்டியுள்ளது.

தணிக்கை

2.யுத்த சூழ்நிலைப் பிரதேசத்தில்

தணிக்கை

திருப்திப் படுத்துவதற்கும் சிங்கள கலாசாரத்தையும் மதத்தையும் இப்பிரதேசத்தில் நிறுவுவதற்காக வலுக்கட்டாயமாக நன்கொடை என்ற பெயரில் நிதி வசூலித்து வெசாக் பௌர்ணமி தினம் கொண்டாட ஏற்பாடு செய்தது.

3.தமிழ்மக்கள் சிங்கள பௌத்த கலாசாரத்தை பாதுகாக்கின்றார்கள். சிங்கள மக்களுடன் இணைந்து வாழ்கின்றார்கள். இங்கு இனப்பிரச்சினையல்ல புலிப் பயங்கரவாதமேயுள்ளது என்று இவ்விழா மூலம் வெளியுலகுக்கு காட்ட முனைவது.

இந்த அடிப்படைகளையும் சேர்த்தே இக்குண்டுவெடிப்பை நோக்க வேண்டியுள்ளது. குண்டு வெடிப்பை விட அதனைத்தெடர்ந்த சம்பவங்களே அனைவரையும் உலுக்கியுள்ளது. சம்பவ தினத்தன்று பிற்பகல் 5.50 மணிக்கே இக்குண்டு வெடித்துள்ளது. கேளிக்கைகள் நடந்த இடத்துக்கு கிட்டத்தட்ட 100 மீற்றருக்கு அப்பாலே சம்பவம் நடந்துள்ளது. இந்த வகையில் பார்க்கப் போனால் வணக்கத் தலத்தையோ வணக்கத்தில் ஈடுபடும் யாத்திரி-

படவில்லை. சிறிது நேரத்தின் பின் சந்தேகப்பட்டவர்கள் சிலர் வந்து பார்த்து விட்டு அது குண்டு இல்லை என கூறியிருக்கின்றார்கள். உண்மையில் வழமையாக சந்தேகத்திற்கிடமான பொருள் இருப்பதைக் கண்டால் கூட அந்தப்பாதை மணித்தியாலக்கணக்கில் மூடப்பட்டு பெரும் ஆரவாரமாக இருக்கும். ஆனால் இந்த சம்பவத்தில் அவ்வாறு படையினரோ பொலிசாரோ ஏன் நடந்து கொள்ளவில்லை அல்லது மனித உயிர்களைவிட வெசாக் கேளிக்கைகள்தான் பாதுகாப்புத் தரப்பினருக்கு முக்கியமாகப் பட்டதா என்பதுதான் அனைவரினதும் கேள்வியாகவுள்ளது. குண்டு வெடித்து பன்னிரெண்டு நிமிடங்களின் பின்பு சம்பவம் நடந்த இடத்துக்கு

தணிக்கை

இக் குண்டை அரசு சொல்வது போல புலிகள் செய்திருந்தால் கூட

தணிக்கை

சசிதரன் போன்றவர்கள் குண்டுவெடிப்பு நடந்த இடத்திலிருந்து 75 யார் தள்ளியே பிணமாகக் கிடந்தார்கள். இவர்களின் பிரேதம் கிடந்த இடத்தில் குண்டுச்சிதறல்கள் வருவதற்கு கூட சாத்தியமில்லை.

தணிக்கை

[redacted]

வேண்டிய அதிகாரி இவ்வாறு பக்கச்சார்பாக அனைவரும் குண்டு வெடிப்பு அதிர்ச்சியில்தான் இறந்தார்கள் என்று அறிக்கை சமர்ப்பித்தால் சாதாரண பொதுமக்களின் நிலை என்னாவது. ஊண்மையில் நிபுணத்துவம் வாய்ந்த ஒரு சட்டவைத்திய அதிகாரிக்கு ஒரு பிரேதத்தை பிரேத பரிசோதனைக்குட்படுத்துவதற்கு சாதாரணமாக 3 தொடக்கம் 4 மணித்தியாலங்கள் தேவையாயிருக்கும். கொலைச் சம்பவம் நடந்த இடத்தை நேரடியாகப் பார்வையிட்டு அங்கு கிடைக்கும் சான்றுகளைக் கூட வைத்தும் தான் பிரேத பரிசோதனை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியிருக்கும். [redacted] மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் நிரந்தரமான ஒரு சட்ட வைத்தியர் இல்லாததும் சாதாரண MBBS டாக்டர்களை வைத்து சட்ட வைத்திய பிரிவை தக்கவைப்பதும் கூட கொலைக்காரர்கள் கூட நிரபராதியாவதற்கு வைத்தியசாலை வழி சமைத்துக் கொடுக்கிறது. தணிக்கை காரணமாக பிரேத அறைக்குள் சென்று பிரேதங்களைப் பார்ப்பதற்கும், புகைப்படங்கள் எடுப்பதும் பாதுகாப்புத் தரப்பினரால் தடை விதிக்கப்பட்டது. மட்டக்களப்பு மங்களராம விகாரை விகாராதிபதி குண்டு வெடிப்பு தொடர்பாக கூறுகையில் பௌத்த ஆலயங்களில் குண்டு வைப்பது புலிகளினுடைய வேலைதான் என்று குறிப்பிட்டுள்ளார். இதை மறுதலித்துப் பார்த்தால் எதிர்வரும் காலங்களில் இந்துக்கோயில்களிலும் குண்டு வெடிக்கும் என்பதை கூறாமல் கூறிச் செல்வதாகவே தெரிகின்றது. பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

# 1999 யுத்தத்தின்...

மத்தியில் இவரது மரணம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை. 2000 ஜனவரி 4ம் திகதி புலிகளுக்கு எதிரான துப்பாக்கிதாரியால் (அல்லது குழுவினால்) குமார் பொன்னம்பலம் சுட்டுக் கொல்லப்பட்ட போது முற்றிலும் மாறான பாதிப்பொன்றினை தமிழ்ச் சமூகத்தில் காணக்கிட்டியது. குமார் பொன்னம்பலம் அரச எதிர்ப்பாளராக இருந்ததுடன், புலிகளின் நடவடிக்கைகளைப் பகிரங்கமாக ஆதரித்தார். அத்துடன் மனித உரிமைகள் சட்டத்தரணியான குமார் பொன்னம்பலம், பாதுகாப்பு படையினரால் கைது செய்யப்படும் தமிழ் நபர்களின் உரிமைகளுக்காக நீதிமன்றத்தில் ஆஜரானார். புலிகளினால் படுகொலை செய்யப்பட்ட ஆறாவது நபர் த.வி.கூ. பா.உ நீலன் திருச்செல்வமாவார். த.வி.கூ. யாழ் மாநகரசபை மேயர் பதவியை வகித்த சரோஜினி யோகேஸ்வரன் மற்றும் பொன் சிவபாலன் ஆகியோர் புலிகளினால் 1998ல் கொலை செய்யப்பட்டனர்.

1999ல் யுத்தத்தின் ஒரு பகுதியாக சிவில் மக்களை கொலை செய்யும் போக்கைக் காணக் கூடியதாக இருந்தது. 1999 செப்டெம்பர் 12ம் திகதி இலங்கை அரசாங்கத்தின் விமானப்படையின் குண்டுத் தாக்குதலினால் முல்லைத்தீவு பிரதேசத்தின் புதுக்குடியிப்பு சந்தையில் தமிழ் மக்கள் 22 பேர் கொல்லப்பட்டனர். இச்சம்பவத்தின் 5 நாட்களுக்குப் பின் அம்பாறை மாவட்டத்தின் கோணகல உள்ளிட்ட 3 கிராமங்களை தாக்கிய புலிகள் சிங்கள மக்கள் 48 பேரை வெட்டிக் கொன்றனர். ரணகோச-5 நடவடிக்கையினால் மன்னார் மடுதேவாலயத்தைக் கைப்பற்றிய பின் மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில், தமிழ் அகதிகள் 38 பேர் கொல்லப்பட்டு, 57 பேர் காயமடைந்தனர். இத்தாக்குதல் குறித்து இரு தரப்பினரும் பரஸ்பரம் குற்றச்சாட்டுகளை பரிமாறிக் கொண்டனர். மன்னார் ஆண்டகை இராயப்பு ஜோசப் அடிகள், இச்சம்பவம் நடைபெறுவதற்கு முன்னர் அரச படைகளை தேவாலய வளவில் இருந்து வாபஸ் பெறுமாறு கோரியிருந்தபோதிலும் இலங்கை அரசு இக்கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை. வருட இறுதியில் மன்னாரில் எஞ்சிய அகதிகள் எண்ணிக்கை 10 ஆயிரமாகும்.

டிசெம்பர் 18ம் திகதி பொ.ஐ.மு. மற்றும் ஐ.தே.க ஜனாதிபதி பிரச்சார கூட்டங்களை நோக்கிய தற்கொலைப் போராளிகளின் தாக்குதலினால், 32 பேரை கொல்லப்பட்டனர். 180 பேர் காயமடைந்தனர். இவ்வாறு இறந்தவர்களில், 1994ல் இலங்கை அரச படையின் இரண்டாவது பிரதானியான பதவி வகித்த ஜெனரல் லக்கி அல்கமவும் அடங்குவார். ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்கவின் ஒரு கண் பார்வையை பறிக்க புலிகளின் பொ.ஐ.மு. கூட்டத்தின் மீதான தாக்குதலினால் இயலுமாக இருந்தது. இத்தாக்குதல் ஜனாதிபதியை படுகொலை செய்ய எடுக்கப்பட்ட முயற்சியாக இருந்தபோதிலும் அவரது உயிர் ஆச்சரியப்படத்தக்க வகையில் தப்பியது. இதன்படி 1999ல் சிவில் இலக்குகளின் மீது மேற்கொள்ளப்பட்ட பிரதான யுத்த தாக்குதலின் காரணமாக 140 மக்கள் கொல்லப்பட்டனர்.

தனிநபர் கொலை அரசியல் புலிகளின் பிரதான யுத்த தந்திரோபாயமாக உள்ளதென்பது 1999ல் மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது பெரிய விலை ஒன்றினூடாகும். ஜனாதிபதி சந்திரிகா கொலை முயற்சி இந்த தந்திரோபாயத்தின் உச்சக்கட்டமாகும். அவரைக் கொலை செய்ய அன்றைய தினம் புலிகளால் இயலுமாக இருந்திருந்தால், இந்நாட்டை அராஜகத்தை நோக்கிக் கொண்டு செல்லும் வன்முறைகள் பரவ வாய்ப்பு இருந்திருக்கும். இலங்கை வரலாற்றின் மிக மோசமான சம்பவங்கள் இடம்பெறவிருந்த சந்தர்ப்பம், ஜனாதிபதியின் உயிர் தப்பியமையால் கைவிட்டுச் சென்றது.

கடந்த 17 வருட காலப்பகுதியில் போராளிகள் 14,355 பேர் இறந்தனர் என்றும், இவர்களில் கரும் புலிகள் 160பேர் என்றும் புலிகள் அறிவித்தனர். இதன்படி 1994 மற்றும் 1999 இடைக்காலத்தில் புலிப்போராளிகள் 9558பேர் மரணமடைந்தனர். இராணுவ அறிக்கையின்படி 1981 தொடக்கம் காணாமல் போனவர்களைத் தவிர 10,688 சிப்பாய்கள் இறந்துள்ளனர். இதன்படி 1994-1999 இடைக்காலத்தில் 6,261 பேர் மரணமடைந்துள்ளனர். அரசாங்கத்தின் இராணுவத் தகவல் நிலையம் வெளியிட்ட 300க்கும் அதிகமான பத்திரிகை அறிக்கைகளின்படி அரச படைகளினால் 1999ல் புலிகள் 3932 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இறந்த பாதுகாப்பு படையினர் எண்ணிக்கை 719 மட்டுமே.

**(இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள 'இலங்கையின் இன மோதல்கள் 1999 - 2000 வளர்ச்சியும் போக்கும் நூலில் இருந்து எடுக்கப்பட்டது.)**

# அமுல்...

தீனத் தன்மை குறித்து நாம் நம்பிக்கை கொள்ள இயலுமா? ஜனாதிபதி தந்த உறுதிப்பாட்டை ஏற்றுக் கொள்ள குறைந்தது இந்த அவசரகாலச் சட்ட விதிகளை செயற்படுத்தும் பொறுப்புக்களை பொருத்தமான நபருக்கு பொறுப்பளித்திருக்கலாம்.

**அவசரகாலச் சட்ட சூழலில் மக்களின் கருத்துக்களை வெளியிடும் அடிப்படை உரிமைகளை மீறமுடியாதென இலங்கையின் உயர்நீதிமன்றத்தின் பல சட்ட தீர்ப்புகளில் வெளிப்படுத்தப்—பட்டுள்ளது. இவ்வாறான விளக்க—மொன்று நாட்டின் இறைமை கொண்ட நீதிமன்றத்தினால் வெளிப்படுத்தப்பட்டுள்ள போது இவ்வாறான சட்டத்தை அமுல்படுத்தியமை தற்போதைய ஜனநாயகக் கட்டமைப்பை எவ்வளவு தூரம் பாதிக்கும்?**

சுதந்திரமான சமூகமொன்றில் இருக்கவேண்டிய சுதந்திரமான எண்ணங்கள் குறித்த அடிப்படை உரிமைகள் முக்கியத்துவம், பேசும், கருத்துக்களை வெளியிடும் சுதந்திரம் குறித்து அவசியமான விளக்கவுரைகள் பல இலங்கை உயர்நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ள தீர்ப்புகளில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன. 5 நபர்களைக் கொண்ட உயர்நீதிமன்ற சட்டத்தரணிகள் குழாத்தினால் 1987 மே மாதம் இடம்பெற்ற ஜோசப் பெரேராவுக்கு எதிரான வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பில் மேற்கூறப்பட்ட முக்கியமான கருத்துக்கள் குறித்துக் காட்டப்பட்டிருந்தன.

அவசரகாலச் சட்டங்கள் யாப்புக்கு ஏற்றதல்ல என சவாலிட்டால் சர்வானந்தா நீதிபதி வழக்கில் கைக்கொண்ட வழியை கடைப் பிடித்து அவ்விடயங்கள் கவனத்தில் எடுக்கப்படலாம் என்று நான் எதிர்பார்க்கிறேன் இதன்படி தேவைக்கு ஏற்ப பயன்படுத்தும், மனித உரிமைகளுக்கு சார்பான அவசரகாலச் சட்டம் மற்றும் தணிக்கை கட்டுப்பாடுகள் .மட்டும் செயற்படுத்தப்படும் என உறுதிப்படுத்தப்படும் எனலாம்.

நன்றி ராவய

Registered as a Newspaper in Sri Lanka


# சரிநிகர்

இரு வாரங்களுக்கு ஒரு முறை

"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே"
-பாரதி

இல. 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொட.
தொலைபேசி / தொலைமடல் : 814859, 815003, 815004.
மின்னஞ்சல்: sarini@sltnet.lk


தணிக்கை தணிக்கை

[redacted] இந்தக் கேள்வி இப்போது அனைவரையும் ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கிற ஒரு கேள்வியாகி விட்டது.

இலங்கைக்கு இந்தியா வருவதும், அது இன்றைய பிரச்சினையில் தலையிடுவதும் உறுதியாகிவிட்டது. [redacted] அவை இங்கு வந்திறங்குவதற்கு நாளும், நேரமும் குறிக்கப்படுவதுதான் பாக்கி என்ற விதமாகச் செய்திகள் பரவலாக அடிபடுகின்றன.

1987இல் இலங்கைக்கு வந்திறங்கிய போது, அதை வருமாறு கோரும் உத்தியோகபூர்வ அழைப்பினை அன்றைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்தன விடுத்திருந்தார்.

தமிழ் விடுதலை இயக்கங்களை [redacted]

தமிழ் இயக்கங்களுடனான தனது யுத்தத்தை இந்தியாவிடம் கொடுத்துவிட்டுத் தப்பிக் கொண்டது இலங்கை அரசு. இதைப் பின்னாளில் ஜே. ஆர். வெளிப்படையாகவே தெரிவித்திருந்தார்.

இப்போதும் அதை அழைத்திருப்பது இலங்கை அரசாங்கம்தான்.

அப்போது இயக்கங்களிடமிருந்து ஆயுதக் களைவை நடைமுறைப்படுத்தும் பொறுப்பை அதனிடம் வழங்கியிருந்தார் ஜே. ஆர்.

தணிக்கை

அன்று சமாதானத்தைக் காக்கவென வந்த இந்தியப் படை, நாட்டில் சமாதானச் சூழலுக்குரிய நிலைமைகளை இல்லாமல் செய்வதிலேயே தன் கவனத்தைப் பெரிதும் குவிந்திருந்தது, நாட்டில் நீண்டதொரு பயங்கரமான யுத்தத்தை நடாத்தியது அது.

[redacted]

அன்று இலங்கையில் வந்திறங்கிய இந்தியப் படை இங்குள்ள தமிழ் மக்களுக்கு விமோசனத்தைத் தருவதற்காகத் தான் பாரிய இழப்புகளை எதிர்கொண்டதாகக் கூறியது.

ஆனால், அது தமிழர்கட்காகச் செய்துவிட்டுச் சென்றதாகக் கூறிப் பெருமைப் பட்டுக் கொண்ட எல்லா விடயங்களும் அது போய் ஒரு சில நாட்களுக்குள்ளேயே இல்லாமலாகிவிட்டன.

அது யுத்தமிட்டு உருவாக்கிய மாகாண சபையையும் சேர்த்தே அது கூட்டிச் சென்றது.

யுத்தம் சில நாளில் மீண்டும் தொடங்கி விட்டது. [redacted]

தணிக்கை தணிக்கை

[redacted]

மூன்றாவது, கள நிலவரங்கள் அப்படியான [redacted] இந்தியப் படைக்குப் பலத்த இழப்புக்களுக்கு மத்தியிலேயே சாத்தியமாகலாம் எனக் காட்டுகின்றது. இதனால் தான், அது இராணுவ வீரர்களை அப்புறப்படுத்தும் மனிதாபிமான நடவடிக்கையில் மட்டுமே ஈடுபடமுடியுமென்றும், தாம் நிச்சயம் ஒரு யுத்தத்திற்குப் போகப் போவதில்லை என்றும் தொடர்ந்து அறிவித்து வந்தது.

எவ்வாறாயினும், இலங்கை அரசுக்கு மனிதாபிமான ரீதியிலும் சரி, உத்தியோகபூர்வக் கடப்பாட்டின் அடிப்படையிலும் சரி உதவ இந்திய அரசாங்கம் கொண்டு வருவதற்கு எனச் சில விடயங்கள் உண்டு. குறிப்பாகப் புலிகளுடன் பேசுவது, யுத்த நிறுத்தம் ஒன்றை உருவாக்குவது, வடக்குக் கிழக்கு வாழ் தமிழ், முஸ்லீம் மக்களின் அபிலாஷைகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டு செயற்படுவது என்பன அவசியமானவை.

யுத்த நிறுத்தமோ, உடன்பாடோ அன்றி இந்தியப் படை வந்திறங்குமாக இருந்தால் இது அம்மக்களின் ஜனநாயக உரிமைகளை நசுக்க வரும் இறக்கமாகவே இருக்கும்.

ஒரு நாடு இன்னொரு நாட்டு மக்களின் அரசியல் உரிமைப் போராட்டத்தினை ஒடுக்குவதில் நேரடியாகப் பங்கெடுத்துக் கொள்வது எந்தச் சர்வதேசச் சட்ட விதிகளுக்கும் உட்பட்ட ஒன்றல்ல.

அது திருமணத்தில் புரோகிதர் வேலை பார்க்கப் போய்த் தாலி கட்ட முற்பட்ட பத்தாண்டுகட்கு முந்திய செயல் போலவே அமையும்.

இந்தியா இன்னொரு தடவை அதைச் செய்யாது என நம்புவோமாக !

## வவுனியா: காணாமல் போனோரின் கதி?

வவுனியாவில் காணாமல் போவோரின் தொகை இப்போது அதிகரித்துள்ளதாக மனித உரிமைகள் அமைப்பினர் தெரிவிக்கின்றார்கள். நாளாந்தம் ஆட்கள் கைது செய்வதும் இடம்பெறுவதாக முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டு வருகின்ற போதிலும், யார் கைது செய்கின்றார்கள் என்பது குறித்து உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படாதிருப்பது பொதுமக்கள் மத்தியில் அச்சத்தையும் சந்தேகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 10 ஆம் திகதியில் இருந்து இரண்டு வாரகாலப்பகுதியில், 43 பேர் காணாமல் போயுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவினருக்குக் காணாமல் போனவர்களின் உறவினர்கள் முறைப்பாடு செய்துள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா இணைப்பாளர் எஸ்.சிறிதரன் தெரிவித்தார்.

காணாமல் போனவர்கள் எங்குள்ளார்கள் என்பதை பொலிசாருடனும், இராணுவத்தினருடனும் தொடர்பு கொண்டு மேற்கொள்ளப்படுகின்ற விசாரணைகளின் மூலமே தாங்கள் கண்டுபிடிப்பதாகவும் அவர் தெரிவிக்கின்றார்.

கடந்த இரண்டு வாரகாலப்பகுதியில் காணாமல் போனவர்களில் 25 பேர் பற்றிய விபரங்கள் கிடைத்துள்ளதாகவும், இன்னும் 19 பேர் எங்குள்ளார்கள், அல்லது எங்கு வைக்கப்பட்டுள்ளார்கள் என்பதைக் கண்டறிவதற்கான விசாரணை நடவடிக்கைகளைத் தாங்கள் மேற்கொண்டுள்ளதாகவும் சிறிதரன் தெரிவித்தார்.

காணாமல் போனவர்களில் 24 பேரில், 12பேர் இராணுவத்தினராலும், 5பேர் வவுனியா சி.எஸ்.யு. பொலிசாரினாலும், ஒருவர் கொழும்பு சி.டி.பி. பொலிசாரினாலும், ஒருவர் கொட்டாஞ்சேனை பொலிசாரினாலும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருவதாகவும் 5 பேர் விசாரணைகளின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும், ஒருவர் உறவினர்களுக்குத் தெரிவிக்காமல் சவூதி அரேபியாவுக்குச் சென்றுவிட்டதாகவும் தாங்கள் கண்டறிந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளையில், கொழும்பு கென்வூட் விடுதியில் தங்கியிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் கடந்த 13 ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ளதாக வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவினருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1) ஆனந்தநாதன் அருளானந்தன் (33)

2) அருளானந்தன் கலைமகள் (29) மனைவி -

3) அருளானந்தன் சிவவிரதன் (04) -

4) அருளானந்தன் திலக்ஷி ஒன்றரை வயது.

5) ஆனந்தநாதன் அன்னலட்சுமி (54)

தணிக்கை

ஒருவர் கைது செய்யப்பட்டால், அவருடைய கைது தொடர்பாக உறுதிப்படுத்தப்பட்ட ரசீது உத்தியோகபூர்வமாக உறவினர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற விதிமுறை இப்போதும் அமுலில் இருக்கின்ற போதிலும் அவ்வாறான நடைமுறைகள் இப்போது கடைப்பிடிப்பதாகத் தெரியவில்லை. இதனாலேயே பெருந்தொகையானவர்கள் காணாமல் போயுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடுகள் செய்யப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

வவுனியாவில் காணாமல் போயுள்ளதாக செய்யப்பட்ட முறைப்பாடுகளில் எங்குள்ளார்கள் என்று கண்டறியப்பட்டவர்கள் போக எஞ்சிய 19 பேரைக் கண்டுபிடிப்பதற்கான விசாரணைகளை தாங்களும், தமது தலைமையக அலுவலகத்தினரும் மேற்கொண்டுள்ளதாக வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தினர் தெரிவித்தனர்.

காணாமல் போயுள்ளதாகச் சொல்லப்படும் 19 பேரின் பெயர் விபரங்கள் இவை.

1) சிவசுப்பிரமணியம் சிறிதரன் (32) யு.சி. குவாட்டர்ஸ்

2) சிவகுரு ரவநீதன் (22) காத்தார் சின்னகுளம்

3) இரத்தினம் மகேந்திரன் மதவு வைத்தகுளம்

4) கருப்பையா விஜயகுமார், சிதம்பரபுரம், நலன்புரிநிலையம்

5) தங்கராசா காந்தரூபன் சிதம்பரபுரம், நலன்புரிநிலையம்

6) சிவகடாட்சம் கபிலேந்திரன் (17) பூந்தோட்டம்

7) நவம் கஜேந்திரன் (10)

8) இராமையா செல்லத்துரை (42) எல்லப்பர் மருதங்குளம்

9) ரெங்கசாமி இராமையா (60) இரத்மலானை, ரஜமாவத்த. இவர் கொழும்பில் இருந்து வவுனியாவுக்கு வரும் போது காணாமல் போயுள்ளார்.

10) பாலசிங்கம் தவராசா (28) குட்ஷெட் வீதி, நலன்புரி நிலையம்.

11) இரட்னம் விஜயகமல் (25) வேப்பங்குளம்.

12) கதிரவேலு ஜெகதாஸ் திருவள்ளுவர் வீதி, தோணிக்கல்.

13) கதிர்காமநாதன் கணேசமூர்த்தி, தவசிகுளம்.

14) தனசேகர் விக்னேஸ்வரன் (22) (முகமட் பாகிர்) கல்பிட்டி புத்தளம்

15) விஜயகுமார் சமயகுமாரி (19) குட்ஷெட் வீதி நலன்புரி நிலையம்


16) செல்லத்துரை ஜெகநாதன் (38) முதலியாகுளம்


17) பொன்னுத்துரை சந்திரசேகரம் (37) முதலியாகுளம்

18) தர்மன் நாகராசா (34) முதலியாகுளம்

19) பாலசுப்பிரமணியம் ஐயர் கந்தரூபன்சர்மா (21) குருமண்காடு காளிகோவில், இவர் மட்டக்களப்புக்குச் செல்லும் போது கடந்த செவ்வாய்க்கிழமை (23 ஆம் திகதி) காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- தீபன்





ஆசிரியர் : பாலசுப்ரமணியம் வசந்தன், வெளியீட்டாசிரியர் : எஸ். கே. விக்னேஸ்வரன், 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொடை. அச்சுப்பதிவு : நவமக, 66/04, தர்மாராம வீதி, இரத்மலானை. 23.05.2000.